உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுரவேநம:

இராமதத்வதீபிகையினது

ஆபாசவிளக்கம்.

(இரண்டாவதுபாகம்.)

இஃது

ஸ்ரீல ஸ்ரீ

சோமசுந்தரநாயகரவர்களது

மாணாக்கருளொருவராகிய

பொனூர்அகரம்

முனிசாமிமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு

சென்னை

வேதாகமோக்த சைவசித்தாந்தசபையாரால்

வெளியிடப்பட்டது.

MADRAS:

PRINTED BY S. RUTHNA CHETTIA

AT THE MADRAS RIPON PRE

1889.

சிவமயம்.

பிழை திருத்தம்.

(இரண்டாம் பாகம்.)

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உ	ச	மன்றோ?	மன்றோ?"
௬	கஎ	ருக்கின்றோம்	யிருக்கின்றோ
எ	ரு	சிருனுருக்கே	சிவனுருக்கே
,,	கூ	ஈச்வர	ஈசாந
கக	உ	புறப்படது	...ப்பட்டது
உ௬	க0	தத்யேச்	...யேயச்
உச	க௬	தத்யேச்	...யேயச்
,,	உ௬	என்ற	...று
உஅ	உரு	மயத்தால்	...யத்தால்
௬௬	உஉ	தூரீமூர்த்தி	தூரியமூர்த்தி
சகூ	கக	பில்லா	பிலா
ருக	உக	ஆஜ்ஞை	ஆஜ்ஞை
ருஎ	உ௬	யன்	பயன்
ருஅ	கக	சங்கைகளும்	சங்கைகளும்
,,	,,	நிவாரணை	நிவாரணை
,,	உஉ	உபநிஷத்துகள்	உபநிஷத்துக்
சஅ	எ	கல்	கால்
ருஎ	கஉ	ஸலா:	ஸகலா:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞானஸம்பந்தகுரவே நம:.

இராமதத்வதீபிகையினது

ஆபாசவிளக்கம்.

:(*):

(இரண்டாவதுபாகம்.)

காப்பு.

ஸ்ரீகணநாதர்.

எவனுமை தருமக னெனவில குறுமறை
எவனுயர் புகழினி துரைசெயு மிமையவர்
எவனருள் பெறவினி திசைகுவ ரிபமெனும்
அவனடி முடிபட வடைதிநன் மனனே.

முகவுரை.

இராமதத்வதீபிகை(முதற்பாகம்)எனப்பேரிட்டு ஓராபாசத் திரட்டைச் சிற்றூர்த்துக்காடு சீநிவாஸாசாரியென்பவர் முன்புவெளியிட்டார். அதனை மறுத்து அதனுபாசவிளக்கம் எனப்பேரிட்டு ஓர் நூலை எமதுதோழர் மா-ா-ஸ்ரீ நல்-சுப்பிரமணியமுதலியார் வெளியிட்டிருக்கின்றார். அதனால், நமதுபண்டிதராதுயோக்யதை வெட்டவெளியாயிற்று. அதனைக்கண்டும், வெட்கமின்றி மீண்டுந் தாம் ஓர்நூலாசிரியராகவெளிப்பட்டார். அந்நூல் "இராமதத்வதீபிகையினது 2-வதுபாகம்" என்பதே. இவ்வழுத்திரட்டில் இராமதத்வமொன்றுங்காணோம். எல்லாம் விராமதத்வமாகவேயிருக்கின்றது. இராமதத்வம் என்னும் ஓர்பிரயோகம் தத்வசாஸ்திரங்களில் எங்காவது படிதமுண்டா? விஷ்ணுதத்வமிருந்தாலன்றோ இராமதத்வம்-கிருஷ்ணதத்வம்-கோவிந்ததத்வம்-லட்சுமிதத்வம் என்னும் ஆபாஸங்களுக்கு இடமுண்டாகும்?. வேதங்களில் சிவதத்வம், சக்திதத்வம், சிவஞானம், சிவயோகம், சிவபோகம், சிவகரணம் இத்யாதிபிரயோகங்கள் பஹுளமாய்க்கிடப்பதறிந்து அகந்தையடங்குவாராக. அதத்வரூபியாகிய இராமன்றலையில் தத்வம் என்னுமோர்மகுடஞ்சூட்டியது ஒட்டைநாழிக்குப்பூண்கட்டியதுபோலாம். இதுநிற்க. நமதுஐயங்காரது இரண்டாவதுபாகத்தின் முகத்திலொழுகுமழுக்கையும் இனியாம் கொஞ்சமெடுத்துக்காட்டுவோம்.

நூல்.

அவ்வாபாசத்திரட்டினுபக்ரமத்தில் நமதன்பர் "மாதவன் தன்னடியாரைத் தான் வணங்கிப் பெருமைபடுத்துவது அக்கருணை வள்ளலுக்கு அணிகலமன்றோ? என வோர்பீடிகை போட்டுக்கொண்டார். இது நிஜமாயின், விசுவாமித்திராதிகளையும், ஏனைய பிராஹ்மணர்களையும் பரவாசுதேவராகிய மூலவிஷ்ணுவணங்கிப் பெருமைப்படுத்தல்வேண்டும். அங்ஙனமின்றி இராமகிருஷ்ணாதிகளேயன்றோ முனிவர்களதுகால்களில்வீழ்ந்து முன்னுக்குவந்தார்கள்? ஒருவன் கர்மவசத்தால் பிராஹ்மணனாயும், சூத்திரனாயும் பிறந்தகாலையில் பிராஹ்மணனாய்ப்பிறந்தபோது அவன் சூத்திரன்காலில் வீழமாட்டான். சூத்திரனாய்ப்பிறந்தபோது அவன் பிராஹ்மணன்காலில் வீழாமற்போகமாட்டான். கர்மத்தினானேர்ந்தஜந்மங்களில் சூத்திரனில் பிராஹ்மணன் அதிகனானபடி இராமகிருஷ்ணாதி மநுஷ்யஜந்மங்களில் விஷ்ணுவாகிய தேவஜந்மம் உயர்ந்தது. விஷ்ணுவாகிய தேவஜந்மத்தையும், இராமகிருஷ்ணாதி மநுஷ்யஜந்மங்களையும் ஓர் ஜீவனேயெய்திச் சுகதுக்கங்களின்மொத்துண்டு போகத்தின்மூழ்கியது ஸஹஜமாகையால், அந்தஜீவன் விஷ்ணுவாகியஜந்மத்தில் பிராஹ்மணர்களை வணங்காமலும், இராமகிருஷ்ணாதி மநுஷ்யஜந்மத்தில் பிராஹ்மணர்களைவணங்கியும் உழன்றது. பிராஹ்மணர்கள் சீவர்கள். இராமகிருஷ்ணாதிகளுஞ்சீவர்கள். பிராஹ்மணர் முதல்வருணம். இராமகிருஷ்ணாதிகள் க்ஷத்திரியர்களாகிய இரண்டாவதுவருணம். முதல்வருணத்தவரை இரண்டாவதுவருணத்தவர் வணங்குவது அவருக்குத் தலையிலெழுதிய எழுத்து. அதனால், இராமரும் கிருஷ்ணரும் பிராஹ்மணர்களைவழிபட்டார்கள். இதனால், பிராஹ்மணர்களை நோக்க இராமகிருஷ்ணாதிகள் தாழ்ந்தவர்களென்பதே ஸித்தாந்தமாயிற்று. இவ்வுண்மைகளைத் தெளிந்துணைப்படாமல் "தன்னடிமையான தமோதேவதையாகிய சிவனுக்குத் தான் கொடுத்தவரம் தப்பாது கண்ணனாகக் காசினியிலவதரித்துச் சிவனை ஆராதித்தாரே" என்றும் நமதன்பர் கொஞ்சியுரைத்தார். தமசு என்பது பேரிருள். இதனைக்குணமாகவுடையவர் விஷ்ணுவுக்கு அடிமையானது ஆச்சரியம் அவ்வஞ்ஞானவடிவினராகிய சிவனாரது காலில் விஷ்ணுவீழ்ந்ததும் ஆச்சரியம். கண்ணன் சிவன்காலில்வீழ்ந்து அச்சிவனைத் தன்னைக்காட்டிலும் பெரியவராக உலகினிலைபெறுவித்தது ஸத்தியமாயின், அந்தக்கண்ணனது அபிமதத்திற்குவிரோதமாக ஏனோ பாஞ்சராத்திரிகள் சிவதூஷணத்திலிறங்கிக்கெடவேண்டும்? கண்ணன்வீழ்ந்த சிவன்காலில் நமஐயங்காரும், அவரினத்தவரும்வீழ்ந்து அச்சிவனை

ஏன் பெருமைபடுத்தக்கூடாது? அந்தோ! இன்னோர் கண்ணனுக்கே துரோகமிழைத்தவராயினர். இரணியன் தானே பெரியவன் என்று எண்ணியதற்கு அவனை நாராயணர் நரசிங்கமாகத் தூணின்முளைத்துக் கொன்றாரன்றோ? சிவன் தானே பெரியவனாயிடவெண்ணியதை நாராயணரொப்பியது யாங்ஙனம்? சிவன் நாராயணனிடத்தில் அன்புடையவராயிருந்தால், நாராயணன் தன்னை வணங்கவேண்டுமென்று விரும்பமாட்டார். அவர் விரும்பினமையால், அவர் நாராயணனுக்கு அன்பராகமாட்டார். அவரன்பராகாமையால், அவருக்கு விஷ்ணுமூர்த்தி வரமுங்கொடுக்கமாட்டார். அவர் வரங்கொடுத்ததும்,சிவன் வரம்பெற்றதும் அஸங்கதமென்க. நமதன்பரும் சிவனைத் தாமசி என்று பிரஸ்தாபித்திருக்கிறார். இந்தஹேயகுணமுடையவருக்கு அவரது அளவுக்கதிகமாகக் கேட்டவரத்தைக்கொடுத்துவிட்டு, விஷ்ணுபகவான் கொத்தடிமையாய்க்கிடந்தாரென்பது நமதன்பருக்கேயன்றி வேதம்படித்தவித்தகர்க்கு ஒப்பாது. இந்தவியவஸ்தையால், நமதுஐயங்கார் பூர்வத்தில் முட்டாள்களுக்கெல்லாஞ் சட்டாம்பிள்ளைகளாயிருந்த மூதேவிமக்களெழுதிவைத்த தப்புதஸ்தாவேசுகளைநம்பி அவதிப்பட்டுக்கொண்டு பண்டிதசபைகளிலவமானப்படுகின்றார். ''ப்ரஹ்மவிஷ்ண்வாதிபிஸ்ஸேவ்யம்'' எனவும், ''பக்த்யாநம்ரதநோவிஷ்ணோ:-ப்ரஸாதமகரோச்சிவ:'' எனவும் ''யோவாமபாதார்ச்சிதவிஷ்ணுநேத்ர - ஸ்தஸ்மைமதௌசக்ரமதீவஹ்ருஷ்ட:'' எனவும் சுருதிகள்கோஷிக்கும் வாஸ்தவமறிந்தவர்கள் சிவனைத் தமோதேவதையாகிய அஹங்காரி எனவும், அவரைக் கண்ணன்பூசித்தது வரதானபாலனமெனவும் பிதற்றிய ஐயங்காரது துச்சஹேதுக்களைக் காற்கடைகொண்டெற்றுவரென்க. இவ்விஷயத்தை எமது தோழர் தமதுமுதற்பாகத்திற்றானே செவ்வையாகச் சிங்காரித்திருக்கின்றார். நமதன்பரிடம்வைத்த விசுவாசத்தால் ஈண்டு யாமுங்கொஞ்சம் அழகுபடுத்தினோம். இனியேனும் அடங்கிவாழ்வாராக.

இவ்வைஷ்ணவப்பிஞ்சு சிவனைச் ஜீவனென்றும், அவர் கர்ம மடியர்கப்பிறந்திறக்கிறவரென்றும்,இந்தவுண்மை மஹோபநிஷத்து, நாராயணோபநிஷத்து, சுபாலோபநிஷத்து, ப்ருஹதாரணியகோபநிஷத்துமுதலிய பலவுபநிஷத்துக்களிற் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், நாராயணரது அவதாரத்துக்கு அவரது இச்சையேயன்றிக் கர்மம் காரணமாகமாட்டாதென்றும் ''அனபஹதபாப்மாவாஹமஸ்மி'' என்று சிவன் தன்னைச் சொல்லிக்கொண்டவசனம் சிவனது பிறப்புக்குக் கர்மகாரணமென்று தெரிவிக்கிறதென்றும்,பிறந்தசிவன்வேறு பிறவாதசிவன்வேறு என்று சைவர்கள் சொல்லுவார்களெ

ன்றும், இரண்டுசிவனில்லை சிவன் ஒருவரேயென்றும், விஷ்ணுவி னது அவதாரங்களுக்கு இச்சையே ஹேது என்பதைப் பகவத்கீதை நிறுத்துகிறதென்றும், தனது ஊத்தைவாய்திறந்து ஸந்தோஷித் தது. இம்மஹாகவி உபநிஷத்துக்களின்பேரைப் பிரஸ்தாபித்துவிட் டதனுலேயே எதிரிகள் அஞ்சியொளிப்பார்களென்று எண்ணியது போலும். அவர்குறித்த வுபநிஷத்துக்களிலெல்லாம் நாராயணர் பெ ரும்பாவியென்று கூறியிருப்பதாக யாம்தெரிவிக்கின்றோம். அவ்வுப நிஷத்துக்களால் நமதன்பர் சிவனது பிறப்பிறப்புக்களை ஸித்தாந்தம் பண்ணுகிறபோது அவற்றைக்கொண்டே நாராயணன்பெரும்பாவி என்பதை யாமும் ஸித்தாந்தம்பண்ணுவோம். சிவன், கர்மமடியாகப் பிறந்தார், செத்தார் என்று மொத்தமாகக்கூறாமல், அவ்வாறு பொரு ளுண்டாகக்கூறுஞ் சுருதிவசனங்களையும், அநுபவங்களையும் நமதன் பர்காட்டுவாரெனின், வாமனனையும், இராமனையும், கண்ணனையும் பிருகுசாபத்தால் அதிதி-கோசலை-தேவகி என்பவர்களது கர்ப்பங் களிலுழன்று அவர்களது யோநித்தழும்புகளேறக் கீழேவீழ்ந்துபுர ண்டு சிலபோதிருந்து துர்மரணங்களானுமெய்திய மஹான்களெ ன்று யாம்வாய்திறக்கமாட்டோம். முனிவரதுசாபம் விஷ்ணுவினது பிறப்புக்குக் காரணமென்று வைதிகநூல்களெலலாம் முறையிடுவ தை நமதன்பர் ஞாபகத்திற்குக்கொண்டுவந்திலர். இந்தஆபத்தை நிவிர்த்தித்துக்கொள்ள இருசமயவிளக்கக்காரன் பிருகு பக்தனுன படியால், அவனதுவாக்கைப் பரிபாலித்தார் விஷ்ணுவென்று ஓர் ஸமாதானந்தேடிக்கொண்டான். இச்சையினும் ஒருவன் தனது யோக்யதையைக் கெடுத்துக்கொள்வது யாங்ஙனம்? எத்தனைதிரு மேனிகளெடுத்தாலும், யோக்யதைகுன்றாமலிருக்கவேண்டும். கர் மாதீனமானஇச்சையால் யோநித்தழும்புகளேறப்பிறந்தியங்குமோர் பொருள் தெய்வமானால், நாமும் ஏன் தெய்வமாகக்கூடாது? பா டையிலேற்றிக் கட்டைமேற்கிடத்திப் பரக்கத்தீமூட்டிக் கொளு த்தப்பெற்றபாக்யம் யாருடையது? இவைகளைப் பெருநிதியாக ப்படைத்த நமதையங்கார் தாமுமொருமானியாகச் சபையில் வா ய்திறக்கவந்தாரன்றோ? என்னபேதைமை! நமதன்பர்செய்கை வியபிசாரி ஸம்ஸாரியோடு சண்டையிட்டெதிர்த்துக் கூச்சலிடுத ற்கே ஒப்பிடத்தக்கது. சுவேதாசுவதரத்தில் "நதஸ்யகச்சித்பதிரஸ் திலோகே" என்கிறவாக்கியத்தால் சிவன் ஜநநமில்லாதவர் என்று இனிது விளங்குகின்றது. "அஜாதஇத்யேவம்கச்சித்பீரு:" என வும், "அஜம்த்ருவம்ஸர்வதத்வைர்விசுத்தம்" எனவும் சுருதிகளெ மூந்து சிவன் பிறவாதபொருள் என்று கோஷிக்கின்றன. இவைக

ளுக்கு விரோதமாகச் சிவன் பிறந்தார், இறந்தார் என்று நம்மவர் கத்
துவது மாதுஷீகதர்ம்மாவதெங்ஙனம்? மாதாவுதரத்திற்றங்கிப்பிது
ங்கி மடிந்தவர்கள் சீவர்களா? ஓர்பிறப்புமெய்தாதவர் சீவனோ? சிவனோ
ரது கதையில் அவருக்கு இழவெடுத்த வைபவம் எங்காவது படித
முண்டாயின், நமதன்பர் அதனை யெடுத்துப் பிரஸங்கிப்பாராக.
விஷ்ணுவினது. அவதாரங்களைச் சிங்நபிங்நமாகச்சிதைத்தார் சிவபெ
ருமான் என்று "யோமத்ஸ்யகூர்மாதிவராஹஸிஹ்மாந், விஷ்ணுக்ர
மந்தம் வாமநமாதிவிஷ்ணும், ஸவிக்லபம்பீட்யமாநம்" என்னுஞ்சுரு
தியெழுந்து வெளிப்படுத்தும் அர்த்தவைபவத்திற்கு யார் என்ன
செய்யலாம்? இச்சாவதாரங்கள் படும்பாட்டை நமதன்பரே யோசிக்
கவேண்டியது. கர்மங்காரணமாக விஷ்ணுவானவர் பிறந்தும், செத்
துஞ்சிரழிந்தகதைகளை நமதன்பர் மறைக்கப்பார்த்தால் மறையுமா?
சுக்கிலசோணிதபரிணமங் காரணமாகத் திருமேனிபடைத்தவர்கள்
கண்ணன் முதலினோரொன்னும் வைபவத்தை இனியேனுங்கண்டு
நமதன்பர்களிப்பாராக. சுருதியில் "அநபஹதபாப்மாவாஹமஸ்மி"
என்னும்வசனம் நான்போக்கடிக்கக்கூடாத பாவத்தையுடையவனா
கிறேன்" என்று பொருள்பயப்பதாக அவரது கருத்து. இதனால்
சிவன் பாவியெனவும், அதற்கு என்றுந்தீர்வில்லையெனவும் ஏற்படுகின்
றது. இத்தகையமஹாபாவிக்குக் கண்ணன்வரங்கொடுத்து அவன்
காலில்வீழ்ந்துவணங்கியது ஆச்சரியம்மல்லவா? அவனைவிடப் பெரு
ம்பாவியேஅவன்காலில்வீழத்தக்கவனாவான். இதுநிற்க. நமதன்பர்
எழுதிய துண்டுவசனம் சிவன்சொன்னதோ, விஷ்ணுவேசொன்ன
தோ அதில்விளங்கவில்லை. அது இன்னசுருதியில் இன்னஸந்தர்ப்
பத்தினது என்று அவர் விளங்கக்காட்டுகிறவரையில் அதை யாம்கவ
னிப்பது அவசியமன்று. நாராயணர் தியாதாஎன்று படிக்கப்பட்ட
மைகொண்டே அவர் பாபிஎன்றும், சிவன் தியேயர் என்று படிக்கப்
பட்டமைகொண்டே அந்தப்பாபத்தை அவர் போக்கடிக்கிறவரென்
றுஞ் சுருதிவிளக்கினமையால், இத்தகையசுருதி சிவனைப் போக்கடி
க்கக்கூடாதபாவத்தையுடையவர் என்றுகூறினதாக ஸந்தோஷித்
தது "விச்வாதிகோருத்ரோ என்னுஞ் சுருதியைநாடாத விவேக
ஹீனருக்கே சிறக்கும்." இவர்பிறந்தசிவன்வேறு பிறவாதசிவன்வே
று எனச் சைவர்கள்ஒப்பியதாகத் தப்புக்கொட்டினாரன்றோ? திரிமூ
ர்த்திகளில்ஒருசிவனும், அவர்களில்வேறாகிய வொருசிவனுமிருப்ப
தாக யாம் ஒப்பியது ஸத்தியமே. இவருள் மூவரிலடங்கியசிவன் பசு
வும், அவர்களைக்கடந்தசிவன் பதியுமாம். ஓர்சீவனே "புல்லாகிப்பூ
டாய்ப் புழுவாய்மரமாகி"என்றபடி எல்லாப்பிறவிகளிலு முழன்று

பின்னர், பிரமனாய்-விஷ்ணுவாய்-உருத்திரனாய்வந்து அப்படியே சிவன்றிருவடியிற்சேரும். உருத்திரனைபிறகுஜநநமரணப்பிரஸங்கமதனிடத்திற்கிடையாது. விஷ்ணுஜந்மம்வரையிலுமே ஜநநமரணப்ரஸங்கம். ஆகையால், யாமொப்பிய இரண்டுசிவமூர்த்திகளுக்கும் ஜநநமரணங்கள் எமது ஸித்தாந்தத்தில் கேட்கப்படவில்லையென்பதே ஸித்தம். இவர் கண்ணன் இச்சையால் வடிவெடுக்கின்றார் என்பதற்குப் பகவத்கீதையை ஸாக்ஷிதேடினார். பகவத்கீதைகூஸோஹம்பாவனையாற் சொன்னதாகையால், அதிற்போந்த தத்வங்களைச் சிவமகிமையாகவே ஸாதுக்கள்கொண்டிடுவர். இதனை முதற்பாகத்தில் விரித்திருக்கின்றார் எமதுநண்பர். ஆகையால், விஷ்ணுவினது மகிமையாக அதுசிறந்திடமாட்டாது. இப்படிநமதன்பர்தேடிய ஒவ்வொன்றும் சிதைவுண்டுபோயினமையால், இதனை இம்மட்டினிறுத்தி அவரது ஏனையாபசங்களையும் எடுத்துக்காட்டுவாம்.

இப்பெய்த்தாசர் "சிலவுபநிஷத்துக்களில் காரணம் சிவசம்புஈசாநாதிநாமங்களாலே சொல்லப்பட்டிருந்தாலும் அவைகள் நாராயணபரங்களென்று பசுவதிகரணநியாயத்தாலே முன்னமேசொல்லிருக்கின்றோம்" என்று கௌரவமாகப் பிரஸ்தாபித்துக்கொண்டார். இவரெடுத்துக்கொண்ட பசுவதிகரணநியாயம் நீச்சதெய்வமாகிய நாராயணனைப்பிரதிபாதிக்கும் உபநிஷத்துக்களின்மாத்திரம் இவருக்கு உபகாரமேயன்றி இதரதேவதாபரங்களான வுபநிஷத்துக்களிற் பிரயோசனப்படாது. இதனை எங்களதுமுதற்பாகத்தில் இனிதுகாணலாம். ஒருவனுடைய தோட்டத்தில் மற்றொருவன் கொள்ளையடிக்கப்புகுந்தால் சொந்தக்காரன்பார்த்துவிட்டுச் சும்மாவிருப்பனோ? காலையொடித்து இழுத்துவேலிக்கப்புறமன்றோ எறிந்துவிடுவான்? இனி நமதன்பரெழுந்துதண்டூன்றிக்கொண்டுநடந்து வெளிப்புறப்படுவதுங் கஷ்டந்தான். தமது தெய்வத்தைக் கௌரவித்துப் பேசுங் கம்பீரமானசுருதிகள் கிட்டாமையால், அயலாரதுசொத்துக்களையெல்லாம் அபகரிக்கப்பார்க்கின்றார்.

எங்ஙனமெனின், சுருதியில்

"சிவஏகோத்யேய:"
"ஸஏகோருத்ரோத்யேய:"
"காரணந்துத்யேயச்சம்பு:"
"த்யாயீதேசாநம்"
"சிவஏவஸதாத்யேய:"

என்னும் வசனங்கள் சிவனைத் தியேயனென்றுவிளக்கின. இவைகளைப் பார்த்துங்கேட்டும் வயிறெரிந்து இவையாவும் நாராயண

பரமென்று நாணின்றிநவில்கின்றார். இவற்றை ஏகவின்பரமாகச் சாதிப்பவனுக்கு எவ்வளவு ஆதரவுண்டோ, அவ்வளவு ஆதரவு நமதன்பருக்குமுண்டென்பதை யாம் மறுக்கவரவில்லை. இவ்வசனங்களே, நாராயணருக்குரியனவாயின், இவர் நாராயணர் தியேயரொன்பதைச் சாதிக்கிறேன் எனப் பிரதிஜ்ஞைசெய்துகொண்டு வேறு சிலவசனங்களையெழுதிக்காட்டிக் குழம்பவேண்டிய அவசியமில்லை. அவ்வசனங்களேனும் இவருக்கு உபகாரத்தைச்செய்தனவோவெனின், அவை இவரை நட்டாற்றிலேயேவிட்டன. எங்ஙனமெனின், இவர் "பிரஹ்மவிதாப்நோதிபரம், ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்மா" என்னுஞ்சுருதியைக்காட்டி, இதில் அநந்தம் என்னும்பதமிருக்கையால், இவ்வநந்தபதம் ஸ்ரீகாந்தனையேவிளக்கியது என்றார். நாராயணருக்கு அநந்தன் என்றுபேரேயன்றி அநந்தம்என்றுபேரில்லை. அவ்வநந்தன் என்னும்பெயர் நாராயணருக்குமாத்திரமேயன்றிச் சேஷனுக்கும்பெயர். இந்தவியவஸ்தையால், அநந்தம் என்னும்பெயர் நாராயணருக்குச் சிறந்திலது. அநந்தன்என்னும்பெயரும் விபசரித்துவிட்டது. இவர்நாராயணபரமாகத்துணிந்த அநந்தபதத்திலுந் தியேயசப்தம் தொடர்ந்ததுமில்லை. இனிதியேயத்வத்திற்காதாரமாக அந்தச்சுருதியிலுள்ள பிரயோகம "பிரஹ்மவித்" என்பதே. இந்தப்பிரஹ்மசப்தத்தையே தியேயசப்தம் தொடர்ந்திருக்கின்றது. பஞ்சப்பிரஹ்மோபநிஷத்தில் "அவஸ்தாத்ரயாதீதம்-துரீயம்ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம், ப்ரஹ்மவிஷ்ணவாதிபிஸ்ஸேவ்யம்" என்னும் பகுதியால் சிவபெருமான் பிரஹ்மம் என்னும் பெயருடையவர், பிரஹ்மவிஷ்ணுக்களால் ஸேவிக்கப்படுவர் என்று வியக்தமாகியது. இதில், சிவன்பிரஹ்மமும், விஷ்ணு பிரஹ்மோபாஸகருமாதல் சிறந்தது. இவ்வளவேயன்றி விஷ்ணுவேபிரஹ்மமென்று ஏற்படவில்லை. இதனால், பூர்வபட்சியார் தேடிக்கொண்ட "பிரஹ்மவிதாப்நோதிபரம்" என்பது நமதன்பரை நட்டாற்றில்விட்டதுபோல நாராயணரையும் நடுக்கடலிற்றள்ளியதென்க. அதனைத்தொடர்ந்திலங்கிய "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்மா" என்பதும் நாராயணரைக் கீழேதள்ளிச் சிவனுருக்கே முடிசாய்த்தது. "ப்ரஹ்மவிதாப்நோதிபரம்" என்னுஞ் சுருதியைப்போல "ஈசம்ஜ்ஞாத்வா அம்ருதாபவந்தி" என்னுஞ்சுருதியும் சிவனாது தியேயநிலையை இனிதுவிளக்கியது. இன்னும் இத்தகைய புலஸஹேதுக்களாலும், பிரஹ்மசப்தம்பொதுஎன்று நமதன்பர் பிரஸ்தாபித்திருக்கின்றமையாலும், அந்தப்பிரஹ்மபதம் நாராயணரையே தொடருமென்று அவர்தேடிய பசுவதிகாரணநியாயம் பல்லையிளித்துக்கொண்டமையாலும், நாராயணரைத் தியர்தா என்

றேசுருதி கோஷிக்கின்றமையாலும், அந்த நாராயணர் தியேயராதல் அஸாமஞ்சஸமென்க.

இனி, நமதன்பர் "வேதாஹமேதம்புருஷம்மஹாந்தம்" என்கிறசுருதியும் புருஷபதவாச்யனை நாராயணனையே பிரதிபாதிக்கிறதென்று ஸந்தோஷித்து, நாராயணனைத் தியேயனென்று சாதித்தார்.

"தமேகம்புருஷம்ருத்ரம்"
"புருஷோவைருத்ர:"
"புருஷம்க்ருஷ்ணபிங்களம்"
"புராதநோஹம்புருஷோஹமீச:"
"சிவ:புருஷ:சாநோ"
"தத்புருஷாயவித்மஹே"

என்று பலசுருதிகள் புருஷவாசகம் ருத்ரபரமாகக்கோஷிக்கின்றன. இவ்வுண்மையுணர்ந்தவர்கள் நாராயணனைப் புருஷனெனவாவது, தியேயனெனவாவது எங்ஙனே ஒப்புவார்கள்? கீதையில் "உத்தம:புருஷஸ்த்வந்ய:" எனவும், "தமேவசாத்யம் புருஷம்ப்ரபத்யே" எனவுங் கண்ணன் சிவனேபுருஷன் என்று விளக்கியிருக்கின்றனர். இவைகளுக்கு விஷ்ணுபரமாக அபார்த்தஞ்செய்தல் சுருதிவிருத்தமாகமுடியும். இவைகளைமறைத்து, "ப்ரக்ருதி: பரமோவிஷ்ணு:" எனவும், "அவ்யக்தரூபஞ்ச ததாசவிஷ்ணும்" "எனவும் பிரதிபாதிக்கப்பட்ட பிரகிருதிரூபிணியாகிய விஷ்ணுவென்னுநாரியை நமதன்பர் புருஷனெனக்கொண்டாடியது அவிவேகமேயாம். இதற்குமேல், "த்யேயஸ்ஸதாஸவித்ருமண்டலமத்யவர்த்தி - நாராயணஸ்ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட:" என்னும் ஓர்வசனத்தையுதகரித்து, அதில் நாராயணர் தியேயராகப் படிக்கப்பட்டதாக ஸந்தோஷித்தார். இது யோகித்யேயமாகிய முமுக்ஷூபாஸ்யத்வத்தை விளக்கப்போந்ததன்று. சூரியமண்டலத்தில் அந்தராத்மாவாக நாராயணர்வர்த்திக்கின்றார் என்றுபசரித்தது. இதனை உபசாரமென்றதென்னையெனின், சுருதியில் "தத்ஸவித்ருவரேண்யம் பர்க்கோதேவஸ்யதீமஹீ" என்றுகூறி, "ஏஷருத்ரபர்க்காக்யோப்ரஹ்மவாதினோவதந்தி" என்று பர்க்கனாகிய சிவனே ஆதித்யாந்தராத்மாவென்று விசதப்படுத்தியிருக்கின்றது. இந்தச்சுருதிகளுக்குமுன்னர் நமதன்பர்காட்டிய ஸாமாந்யவசனம் ஜீவிப்பதெங்ஙனம்? அந்தவசனமும் சூக்ஷமப்பார்வையில் சிவபரமாகவே வெளிப்படும். எங்ஙனமெனின், அதில், "ஹிரண்மயவபு:" என்று பெறப்பட்டிருக்கின்றது. நாராயணர் இருண்மயரேயன்றி இரண்மய

ரன்று. இருண்மயராகிய நாராயணரை இரண்மயரென்று நமதன்பர் சாதிப்பதெங்ஙனம்? சுருதியில் "யஏஷோந்தராதித்யேஹிரண்மய:" எனவும், "ஏஷபூதாநாமதிபதி:" எனவும் போந்தவசனங்களால் ஆதித்யாந்தராத்மா ஹிரண்மயனென்றும், பூதாதிபதியென்றும் வெளிப்படுகின்றது. ஹிரண்மயத்வம் சிவனுக்கேயுரியதென்பதை "நமோஹிரண்யபாஹவே-ஹிரண்யவர்ணாய-ஹிரண்யரூபாய-ஹிரண்யபதயேம்பிகாபதயே-உமாபதயே-பசுபதயே - நமோநம:" என்னுஞ்சுருதி பிரஸித்தப்படுத்தியது. பூதபதித்வமும் அவருக்கேயுரியதென்பதை "ஈச்வரஸ்ஸர்வவித்யாநாம்-ஈச்வரஸ்ஸர்வபூதாநாம்" என்னுஞ்சுருதி பிரகாசப்படுத்தியது. இவ்வுண்மைகளால், நமதுபண்டித ருதஹரித்த ஸாமாந்யவசனம் விஷ்ணுவை ஆதித்யாந்தராத்மா என்றுசாதிக்கும் வலியில்லாதடங்கியது. அன்றியும், சிவனது அஷ்டதநுக்களில் சூரியனுகிறதநுவில் "ஸூர்யஸ்யோக்ர:" என்றசுருதியானது அச்சிவபரஞ்சுடர் உக்ரநாமமைதன்யமாய்விளங்குகிறது என்று விசதப்படுத்தியது. இத்யாதி பிரபலஹேதுக்களால் நாராயணர் ஆதித்யாந்தராத்மாவாயினதும், தியேயராயினதும் நிரஸ்தம். நமது ஐயங்கார் இவ்வளவிலமையாமல் "தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிறசுருதியானது தியேயன் செந்தாமரைக்கண்ணனேயொழிய விரூபாக்ஷனல்லவென்று தெரிவிக்கின்றது என வோர்பெரும்புளுகு சாதித்தார். இந்தவசனத்தில் தியேயர் நாராயணரெனபதற்கும், விரூபாக்ஷர் தியேயரன்றென்பதற்கும் ஆதாரமாய்நின்ற பிரயோகங்கள் யாவை? நாராயணோபநிஷத்திலுபக்ரமவாக்கியத்தில் ஈசபதமும், உபஸம்ஹாரவாக்கியத்தில் ருத்ரபதமும், தந்மத்யகதவாக்கியங்களில் விரூபாக்ஷபதமும் போதருகின்றன. நாராயணரை உபஸகராகநிறுத்திய இவ்வுபநிஷத்தில் உபாஸ்யரது நாமங்களிலொன்றாக விரூபாக்ஷநாமமும் படிக்கப்பட்டிருப்பதையும், "தத்ரவிரூபாக்ஷோஸி" என்று ஸாமவேதமானது ஸ்மரிக்கின்றதையும் நமதன்பர்நாடாமல் புண்டரீகாக்ஷனைப்புகழ்ந்து விரூபாக்ஷனைவெறுத்தது அவரதுவினையேயாம். இந்தவிசாரத்தால் நாராயணருக்குத் தியேயத்வம் சாதிக்கலாமென்று ஆசைகொண்டு அலறியழுத ஐயங்காரதுவாதம் அடியோடேசாய்ந்தது. விரிக்கிற்பெருகும். இங்ஙனநிற்க. சுருதியில்,

"ஏகஏவருத்ரோ நத்விதீயாயதஸ்தே"
"ஏகமேவாத்விதீயம்ப்ரஹ்மா"
"ஈசாநஸ்ஸஏகோருத்ர:"
"ஸசிவஏகோதேவ:"

"யஏகோருத்ரஉச்யதே"
"தமேகம்புருஷம்ருத்ரம்"
"சிவஏவகேவல:"
"த்யாவாபூமீஜநயந்தேவஏக:"
"ய:காரணாநிகிலாநிகலாஸ்ய யுக்தார்யநிதிஷ்டத்யே க:"

என்னும் வசனங்கள் சிவனாரது ஏகத்வநிலையை யெடுத்து ரைத்தன. அன்றியும்,

"ஸர்வோஹ்யேஷருத்ர:"
"ஸர்வம்கல்விதம்ப்ரஹ்மா"

என்னும் வசனங்கள் சிவனாரது பூரணத்வநிலையைப் புகழ்ந்தோதின. இன்னும் பலவுள.

இவ்வகைகளையுமன்றே நமது ஐயங்கார் கன்னம்வைத்து அபகரிக்க ஆசைப்படுகிறார். இவைகள் நாராயணரது பாரம்யமாக யாண்டும் உபகாரப்படமாட்டா. சிவனாரது ரூடிநாமங்களை இவர் திருடி நாராயணபரமாகக்கொள்வது அழகுமாப்பிள்ளைகளையெல்லாம் என் மாப்பிள்ளைகளென்று கூறிமகிழும் அவிசாரிகதையோடுதானே சேரும். இதுநிற்க.

இம்மஹாகவி இனித் துரீயசிவனில்லையெனச் சாதிக்கிறேனென்று எழுந்து இடறிவீழ்ந்தார். அதற்கு ஸ்ரீமத் அப்பைய தீக்ஷிதரவர்கள் பதினேழுவசனங்களைக்கொண்டு துரீயசிவனிருப்பைப் பிரஸ்தாபித்தாரெனவும், அவற்றுட்சிலவசனங்கள் கற்பிதங்களெனவும், சிலவசனங்கள் தாமஸங்களெனவும், சிலவசனங்கள் நாராயணபரங்களெனவும், அவை சிவதுரீயத்வத்தை விளக்கும்யோக்யதைபெறாவெனவும் பிரஸ்தாபித்து ஸந்தோஷித்ததே நான்று. இராமர் சிவபூசைசெய்தாரா? செய்யவில்லையா? என்பதையநுஸரியாத விஷயங்களையெல்லாந் தொட்டுக்கொண்டு இவரோடு யாம் காலப்போக்குச்செய்தல் அஸங்கதம். ஆயினும், முக்கியாம்சங்கள் சிலவற்றையெடுத்துக்கொண்டு எமதுபட்சமாகிய சிவதுரீயத்வத்தை ஸ்தாபிக்கிறோம். இவர் கல்பிதம், தாமஸம் என்று கற்றுக்கொண்டவை கையிலாகாதஅூட்ருக்குக் கைவந்தபழம்பாடங்களாம். இவற்றை விரிக்கிற்பெருகும். இதுநிற்க.

எமதுஞானமணியாகிய தீக்ஷிதஸ்வாமிகளுக்குமேல் கோடி சொல்லத்தக்கயோக்யதை நமதுஐயங்கார் ஆசாரியர்களெனக்கொண்டாடும்.பூர்வீகபாஞ்சராத்திரிகளுக்கே இழுப்பாகுமெனின், எம

துகையிலேந்திய எழுதுகோலென்னுஞ் சஸ்திரத்தாலடிபட்டுநொந்து, எழுந்துசெம்மையாகநடக்கமாட்டாதுகிடக்குமிவர்புறப்பட்டது ஆச்சரியமென்க. இக்ஷுதரவர்களுதகரித்த எல்லாவாக்கியங்களும் ஸப்பிரமாணமேயாம். இனி நமதன்பராது ஆபாஸத்தைக் கொஞ்சமெடுத்துக்காட்டுவாம்.

இவர் "பரதத்துவத்துக்குப் பிரமன்முதலாகிய மூன்றுசரீரங்களிலும் வேறாயுள்ள துரீயசரீரமுளதென்பதா? அல்லது மூன்று சேதனர்களிலும்வேறாய ஸர்வேசனுயிருப்பா னொருசேதனனுளனென்பதா?" என்றுதொடங்கி, "மூவர்நடுவே ரக்ஷணத்துக்காக அவதரித்தமையால் ஒருசரீரமுண்டென்றும், அதில்வேறுபட்டதாகிய நித்யமாயும், முக்தப்பிராப்யமாயுமுள்ள ஒருசரீரமுண்டென்றும் வெகுபிரமாணங்களால் சொல்லப்பட்டிருக்கிறது" என்று முடித்தார். அன்றியும், "விஷ்ணுஸாத்விகாம்சமென்று சொல்லப்படுவது இராமகிருஷ்ணாதிகளைப்போலே விஷ்ணுபகவானுடைய அவதாரமென்பது எமதுபக்ஷம் எனவும், "மூவர்நடுவேபிரஸ்தாபிக்கப்படும் விஷ்ணு அவதாரவிஷ்ணு என்பதே" எனவும் பிரஸங்கித்தார். இம்மட்டோ, "விஷ்ணுவினுடைய நித்யமூர்த்தியே துரீயமென்பதும், அவருடைய அவதாரமூர்த்திகளில் முந்தினஅவதாரமாகிய விஷ்ணுவே அண்டரக்ஷகரான மூவரிலொருவரென்பதும்ஸித்தம். இந்தவிஷ்ணுவினுடைய துரீயசரீரமே துரீயமுளதெனச்சொல்லும் சுருதிஸ்மிருதியாதிகளுக்குவிஷயம்" எனவும் பெருங்கூச்சலிட்டார்.

நமதன்பராதுஸித்தாந்தம் துரீயம் என்று வேதத்திற்பெறப்படுமிடங்களில் நாலாவதுசரீரத்தையேயன்றி நாலாவது சைதந்யத்தை விளக்கமாட்டாதென வியக்தமாக்குகின்றது. பிரமன் ஒருசைதந்யமும், சிவன்ஒருசைதந்யமும், விஷ்ணு ஒருசைதந்யமுமென ஒப்பியஐயங்கார் பிரமனையுஞ்சிவனையுஞ் சீவர்களாகவும், விஷ்ணுவைப் பரனாகவும் அங்கீகரித்துக்கொண்டார். துரீயவிஷ்ணுவுக்கும், மூவரிலொருவராகிய விஷ்ணுவுக்கும் ஒரேசைதந்யமென்றுணாசெய்தார். இரண்டுசைதந்யங்கள் சீவர்க்களும், ஒருசைதந்யம் அதிஷ்டானபரமும், மற்றொருசைதந்யம் அதனமிசமுமாதல் அவர்மதம். விஷ்ணுவினது இரண்டுசரீரங்களுக்குஞ் சைதந்யமொன்றேயாகையால், மொத்தசைதந்யங்கள் மூன்றேயெனக்கொண்டு நான்கென்பதற்குச் சரீரத்தையே ஒப்படைத்து ஸந்தோஷித்தார். நாலாவது சைதந்யமில்லையென்பது அவரதுஸித்தாந்தம்.

இவர் துரீயம் சரீரமேயன்றிச் சைதந்யமன்றெனக்கூறினமையால், அத்துரீயம் ஜடமாகி அநித்யமாயழியும். ஜடவிஷ்ணுவைக்

கட்டிக்கொண்டழுவதைக்காட்டிலும் விஷ்ணுவென்னு மோர்பொருளில்லையென்பது உசிதமாம். நாலாவதுபரம் விஷ்ணுவெனச் சாதிக்கவந்து அவனை அசேதனமெனத்தூஷித்தது அவரதுவினையேயாம். ஜடமாகிய அதனிடத்துஞ் சைதந்யமுண்டேயெனின், அந்தச் சைதந்யத்தைத்தள்ளி ஜடத்தையே நாலாவதாக வொப்பினமையால், சைதன்யம்அமுக்கியமாயிற்று. சைதந்யம் முக்கியமாயின், அதனையே நாலாவதுபொருளாக அவர் ஒப்பியிருப்பார். அங்ஙனமவரொப்பாமையால் ஜடங்களாகிய தேகேந்திரியப்ராணாந்தக்கரணங்களுக்குப் பரமகாரணத்வங்கூறும் நாத்திகசிரோமணிகளுக்கு நமதன்பர் நாயகமாயினார். இவர் நாலாவதுபொருளாகத்துணிந்த ஜடவிஷ்ணுவினது அவதாரமாகவே இரண்டாவதுவிஷ்ணுவையொப்பியிருக்கின்றனர். அவ்விரண்டாவது விஷ்ணுவையோ சேதனமென்றொப்புக்கொண்டனர். சேதனஸ்தானத்திற்கு இதுவே முக்கியமாயினமையால், அமுக்கியமாகிய நாலாவதுசேதனத்தினவதாரமாக இவ்விரண்டாவது சேதனத்தைக்கூறியது அஸங்கதம். அதிஷ்டானசைதந்யம் இரண்டாவதும், அதனமிசம் நாலாவதுமாக வொப்பின் ஒருருவாறுபொருந்தும். அங்ஙனமொப்பின், இரண்டாவதுசைதந்யமுயர்ந்து, நாலாவதுசைதந்யந்தாழ்ந்து அவர் சாதிக்கவெழுந்ததுரீயத்வம் நாறிப்போகுமென்றஞ்சினார்போலும். இவர் ஒருசைதந்யமே இரண்டுவிஷ்ணுக்களிடத்திலுமொப்பிச் சைதந்யமொன்றேயெனச்சாதித்தார். இரண்டுவிஷ்ணுக்களுக்குஞ் சைதந்யமொன்றானபோது அவர்களுடைய ஜடங்களைமாத்திரம் இரண்டாகவொப்பியது என்னை? இவரதுஸித்தாந்தத்தால் தேகம்-தேகி என்னும் வியவஸ்தை ஏற்படுகின்றது. இதனால் தேகத்திலேநின்றுந் தேகிவேறுபட்டு, அத்தேகத்தைப்பிணமாக்குதல்கூடும். இது பதிலட்சணமாகாது. இரண்டுவிஷ்ணுகளுக்கு மிரண்டுதேகங்களென்கையில், அவ்விருதேகங்களுங் காரியப்படுதற்குக் காரணமாய்நின்றவுபாதானம் யாது? இரண்டுசரீரங்களும் ஒருபாதானத்தினின்றும் பிறந்தனவா? தனித்தனி வேறுவேறு உபாதானங்களினின்றும் பிறந்தனவா? வேறுவேறு உபாதானங்களிலிருந்துண்டாயின், இரண்டுபாதானங்களிலிருந்து இரண்டுபின்னதேகங்கள் பிறந்தனவென்னலாம். ஒரேயுபாதானத்திலிருந்து இரண்டுசரீரங்களும் பிறப்பின், அவைகளை இரண்டுசரீரங்களென்றிடல் தகாது. உபாதானம் ஒன்றாயிருப்பினுஞ் சரீரங்கள் இரண்டாகக்காரியப்பட்டமையால் இரண்டென்றதெனின், இந்தநியாயம் விஷ்ணுவினது சைதந்யப்பிரஸங்கத்திலுங்கூடும். அவற்றை அவ்வாறு ஒப்பாததென்னை? சை

தமயத்திற்கும் ஜடத்திற்கும் நியாயமொன்றாயிருத்தலே நாடாது சைதந்யத்தை ஒன்றாகவும், ஜடத்தை இரண்டாகவும் நமதன்பர் கூறியது மதியின்குறைவேயாம். ஒருபாதானத்திலிருந்து இரண்டேயன்றிப் பலசரீரங்களுண்டாகலுமாகையால், அவைகளை ஒன்றேயெனவு கூடாதெனின், இது விஷ்ணுவாகிய ஏகசைதந்யத்தைப்பற்றியதாகையால் ஒன்றென்றிடலே தகுதியாம். சீவசைதந்யங்களாயின், பலசைதந்யங்களுக்குப் பலதேகங்களையொப்பலாம். இவைகளை யோசியாமல் துரீயம் என்றதற்கு நாலாவது சைதந்யமன்று, நாலாவதுஜடம் எனறு பிரஸங்கித்தது அவிவேகமேயாம். இனி விஷ்ணுவினது சரீரங்களுக்குக் காரணமாய்நின்ற வுபாதானம் அவ்விஷ்ணுவுக்குப் பின்னமா? அபின்னமா? அபின்னமென்பாராயின், சைதந்யம்ஒன்று, ஜடம் இரண்டு என்னுமவரதுபிரஸங்கங்கெடும். பின்னமென்பாராயின், சைதந்யத்தைநோக்க அதற்கு யோக்யதைகுறையும். அதனைச்சேர்தலால் சைதந்யத்திற்கும் யோக்யதைகுறையும். துரீயசரீரம் நித்தியமாகையால், அதற்கு உபாதானம்வேண்டாமெனின், விஷ்ணுவினது மற்றொருசரீரத்திற்கு அநித்தியப்பிரஸங்கமும், துரீயசரீரமும், சைதந்யமும் பின்னமா? அபின்னமா? என்னுங்கடாக்களும் நிகழும். அவைகளுக்கு முற்படியே விடைகளுண்டாயின், அவ்விடைகளும் எமது சஸ்திரத்தாலடிபட்டுப்போம். முக்கியசைதன்யத்திற்கு அசாசுவிதசரீரமும், அமுக்கியசைதந்யத்திற்குச் சாசுவிதசரீரமுங்கூறியதோஷமும் பிராப்தமாகும். இத்யாதி தோஷபிராப்தங்களுக்கு இடமுண்டாக நமதன்பரொப்பிய விஷ்ணுவினதுஜடதுரீயத்தை யாம்வெட்டியெறிந்தோமாகையால் ஸாதுக்கள் இனிப் பிரமியாதொழிக

இனி, ஐயங்காரது ஜடஸித்தாந்தத்திற்கு யாதேனுஞ் சுருதிப்பிரமாணமுண்டாவெனச் சற்றுயோசிப்பாம். சுருதியில் "சிவமத்வைதம்சாந்தம் சதுர்த்தம்மந்யந்தே" எனவும், "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்ஸம்ப்ரஸூயந்தே நகாரணம்,காரணந்துத்யேச்சம்பு:" எனவும் பெறப்படுகின்றன. இவை நாலாவதுபொருள் சிவம்-சம்பு என்றே தெரிவித்தன. அவ்வளவேயன்றி நாராயணர்-ஜநார்த்தனர் என்றுவிளக்கில.நமதன்பர் நாலாவதுபொருளாகிய துரீயசிவத்தைப் பிரதிபாதிக்குஞ் சுருதிகளைத் தீக்ஷிதஸ்வாமிகள் உதகரித்ததற்கு அவைகளவ்வாறு பொருடரவில்லையென்று புலம்பினரேயன்றித் தமதுஜடவிஷ்ணுவைத் துரீயமென்பதற்காதாரமான வோர்வாக்யசகலமாவது சுருதியிலிருந்து எடுத்துக்காட்டவில்லை. தெருவிலெப்பாட்டுப்பாடித் திக்விஜயஞ்செய்யப்பார்க்கிறார். மேல்யாம்காட்டியசரு

தியில் விஷ்ணுவை நகாரணம் என்று ஓதுக்கியிருக்கின்றது. நமதன்பர் இரண்டுவிஷ்ணுக்களுக்கும் ஒரேசைதன்யமெனவும், முக்கிய சைதன்யம் இரண்டாவதுவிஷ்ணுவுக்கேயெனவும் அங்கீகரித்தமையால், நகாரணம் என்னுங்கூட்டகம் விஷ்ணுவினது இரண்டுசைதன்யங்களையும் வெட்டிக்கீழேவீழ்த்தியது. ஆண்டு நகாரணம் என்றது ஜடத்தையேயென்பாராயின், அப்போது விஷ்ணுவினது ஜடமேயன்றிப் பிரஹ்மருத்ரர்களது ஜடமும் அதற்குப்பொருளாகும். அன்றியும், நகாரணம் என்றுகழிக்கும் ஜடத்திலுழலுஞ் சைதன்யமும் நகாரணம் என்று கழிக்கப்படும். விஷ்ணுவினது ஜடத்தைக்கழித்து, அவரதுசைதன்யத்தைத்தழுவின் அப்படியே ஏனையிருவரது ஜடங்களையுங்கழித்து அவர்களதுசைதன்யங்களையுந்தழுவுவது ஆவசியகமாகும். இதனால், விஷ்ணுவுக்குத் தேர்ந்தமகிமை ஒன்றுங்காணோம். விஷ்ணுவினது தூரியசரீரம் சிறந்திடுமெனின், அவரது இரண்டுசரீரங்களில் ஒன்றுகிராஹ்யமும், மற்றொன்று அக்ராஹ்யமுமாதல் அஸங்கதம். ஒன்றுகிராஹ்யமெனின், மற்றொன்றுங் கிராஹ்யமாம். ஒன்று அக்ராஹ்யமெனின், மற்றொன்றும் அக்ராஹ்யமாம். ஈண்டு அக்ராஹ்யமென்பதற்கே நமதன்பருக்குச் சுருதிஉபகாரமாயினமையால், அவர்தேடிய இரண்டுஜடங்களுமே அஸங்கதமாயின. இந்த வியவஸ்தையால், நகாரணம் என்று வீசியவெட்டு விஷ்ணுவினது சைதன்யத்திற்கும், அவரதுஜடங்களுக்கும்பட்டு ஊறுபடுத்தியது. நமதுஐயங்காரது ஜடதூரியஸித்தாந்தம் இப்படியலக்கண்படுவதால் இனியேனும்அதனைஅவர் திலதர்ப்பணம் பண்ணிவிடக்கடவர். இதுகாறும் யாம்செய்துமுடித்த விசாரத்தால் விஷ்ணுவினதுசைதன்யத்திற்காவது, அவரதுஜடத்திற்காவது தூரியத்வத்தை வேதம்ஒப்பினதாக ஏற்படவில்லை. பிரஹ்மவிஷ்ணுருத்ரர்களைப் பிரஸ்தாபித்து அவர்களுக்குவேறாகச் சம்புவை நாலாவதுபொருளாக அதர்வசிகை ஒப்பியதுபோல் பிரஹ்மவிஷ்ணுருத்ரர்களைப் பிரஸ்தாபித்து அவர்களுக்குவேறாக நாராயணனைநாலாவதுபொருளாகஓர்சுருதி எழுந்தாதிப்பின், சிறுத்துக்காட்டாரதுமதம் சிறந்திடும். அஃதின்மையால், சுருதிஸித்தமாகிய சிவமே தூரியவஸ்துவென்னும் சைவபட்சமே ஸித்தாந்தமாயிற்று. நாலாவதுபொருள் சிவம்-சம்பு-சங்கரன் என்னுஞ் சப்தங்களால் வேதத்திற்படிக்கப்பட்டமையாலும், சிவனை நாலாவதுபொருளென்றுகூறியவாறு அவரில்வேறாகிய நாராயணனையும் நாலாவதுபொருளென்றுகூறுவது விரோதமாகையாலும், அந்தநாராயணனை நாலாவதுபொருளென்று சாதிப்பது முடியாதகாரியமேயாம். நமதன்பர்சிவனுக்குமேலிட்ட தூரியத்வம் நாராயணரு

க்குச் சாதிக்கவாசைப்படின், ஐந்தாவதுபொருள் நாராயணர் என்று கூறுமோர்சுருதியைத் தேடியெடுத்துக்கொண்டு சபையின்முந்தவேண்டியது. விஷ்ணுவினதுஜடந்தான் துரீயமென்பதற்கும் ஓராதரவு கொண்டுவரவேண்டியது. இல்லையேல், வைவஸ்வதன்மூலையை வந்தித்து, வாய்மாண்டுகிடக்கவேண்டியது. இதுநிற்க.

நமதுஐயங்கார் "அவருடைய அவதாரமூர்த்திகளில் முந்தின அவதாரமாகிய விஷ்ணுவே அண்டரக்ஷகரான மூவரிலொருவர்" எனப் பிரஸங்கித்தாரன்றோ? அவதாரவிஷ்ணு அண்டரக்ஷகரானால் அநாதிவிஷ்ணு எதற்குரக்ஷகர்? அவதாரவிஷ்ணுவுக்கு இடம்யாது? அநாதிவிஷ்ணுவுக்கு இடம்யாது? வைகுண்டம் என்னும் பரமபதவிருக்கை யாருக்குரியது? ஜடவிஷ்ணுவுக்குஜடலட்சுமியொருத்தியுண்டா? அதுஒண்டிஜடமா? இவைகளைப்பிரமாணபுரஸ்ஸரமாகவிளக்குவது நமதன்பரதுகடமையன்றோ? இந்த ஜடவிஷ்ணுவினது முதலவதாரம் அண்டரக்ஷகவிஷ்ணுவானால், இராமகிருஷ்ணாதியவதாரங்கள் இரண்டாவது மூன்றாவது என வரிசையாக எண்ணிக்கொள்ளவேண்டியதே. அப்படி எண்ணிக்கொண்டால், விஷ்ணுவினது அவதாரம் பத்து என்பது அழிந்து பதினொன்று என ஆகும். பிருகுவினதுசாபந்தான் பத்தவதாரங்களுக்குக் காரணம். எஞ்சிய அவதாரத்திற்கு யாருடையசாபம் காரணம்? இவ்வவதாரங்களில் முதல்விஷ்ணுவுக்குப் பிறப்பிடம்யாது? வாமனன் அதிதிவயிற்றிலும், இராமன் கோசலைவயிற்றிலும், கிருஷ்ணன் தேவகிவயிற்றிலும் பிறந்தமையால், முதல்விஷ்ணுவுக்கும் பிறப்பிடம்விசாரித்தோம். இவைகளுக்குக் கதிகூறாமல் கைகொண்டமட்டும் எழுதி ஸந்தோஷித்தது அவிவேகமேயாம்.

இவர் இம்மட்டோடமையாமல் "விஷ்ணுஸாத்விகாமிசம்என்று சொல்லப்படுவது இராமகிருஷ்ணாதிகளைப்போலே விஷ்ணுபகவானுடைய அவதாரம்என்பது எமதுபட்சம்" எனவொன்று பிரஸ்தாபித்தாரன்றோ? இந்தஅமிசப்பிரஸங்கம் நமதன்பருக்கு * மைத்திரேயோபநிஷத்திற் கிடைத்ததாம். எங்ஙனமெனின், அவ்வுபநிஷத்தில் பிரஹ்மவிஷ்ணுருத்ரர்களாகிய மூவரும் பிரஹ்மத்தினுடைய தநுக்கள் என்று சொல்லப்படுகின்றனர் எனவும், தநு என்பதற்கு அமிசமென்றே பொருள்கூறவேண்டியதெனவும் நமதன்பர் வியாக்யானஞ் செய்துகொண்டதனாலறிக. இது எம்மட்டினிலைபெறுமென்பதைச் சற்றுயோசிப்பாம். அவ்வுபநிஷத்தில் மூவரையுந் தநுக்

* இது மைத்ராயண்யுபநிஷத்து எனவறிக.

கள் என்று பிரஸ்தாபித்திருப்பதாக நமதன்பரே ஒப்புக்கொண்டார். இதற்கு இவர்செய்யும்வியாக்யானம் தலைதூக்குவதன்முன்னர் யாம் கிசும்வெட்டுக்கு அதுதப்புமா என்பதை விவேகிகள் சற்றுயோசிக்கவேண்டியது. இதில மூவரையுந்தநுக்கள் என்றுகூறினமையால, இவற்றிற்குச் சைதன்யமே இனிவேண்டற்பாலதாயிற்று. அதுவே துரீயஸ்தானத்தினிற்பதொன்று. இதனுல், துரீயம பிரஹ்மமாகிய சைதந்யமேயாம். தநுக்கள் என்னும் பிரயோகமிருக்கையால், பிரஹ்மத்தைநோக்கத் திரிமூர்த்திகளும் ஸ்வதந்த்ரஹீனரொன்று ஏற்படுகின்றது. இதனைவிளக்குங்கால் அவர்கள் பசுக்களென்பதேயாம். ஓர்தேகமும் அதில்வசிக்குந்தேகியும் பின்னப்பொருள்களாயிடுதல் போல் திரிமூர்த்திகளும், பிரஹ்மமும் பின்னப்பொருள்களாயின. இவ்வுண்மைகளைவிளக்கவே அவ்வுபநிஷத்து மூவரையும் பிரஹ்மத்தினது தநுக்களென்று பிரஸ்தாபித்தது. இவ்வுண்மையுணர்ந்தபேர் நமதன்பர்தேடிய ஜடவிஷ்ணுவை அவரெடுத்துக்கொண்டவுபநிஷத்துக் கீழேதள்ளிக் கழுத்தையறுத்துவிட்டதாக ஸந்தோஷியாமற்போகார். தநுக்களாகிய ஜடங்களையுடையபொருள் அவற்றைப்போல் ஜடமாயிருத்தல்கூடாமையால், நமதன்பர்தேடிய துரீய ஜடம் நாசத்தையடைந்தது.

இவ்வஸங்காத்மவாதி தனது ஜடதுரீயத்தை மேல்அமிசப்பிரஸங்கத்தால் விரித்தார். அமிசம் அமிசியில்வேருகாது அபேதமாகுவென்பதவர்கருத்து. இதனைமேற்கொண்டு அமிசி ஜடதுரீயமும், அமிசம் ஸாத்விகவிஷ்ணுவுமாக அவர் சாதிக்கப்புகுந்தார். பிரஹ்மத்தினது ஸாத்விகாமிசம் அந்தப்பிரஹ்மத்திற்கு அபேதமாயிடுதல்போல் அதனது ராஜஸதாமஸாமிசங்களும் அதற்கபேதமாயிடுதல் ஸித்தம். அவ்விருஅமிசங்களும் பிரஹ்மருத்ரர்களேயாம். இதனுல், விஷ்ணுவும்-பிரமனும்-உருத்திரனுமாகிய மூவரும் பிரஹ்மத்திற்கு மூன்றுஅமிசங்களென்று ஏற்படுகின்றனர். இப்படியேற்படுகையால், பிரஹ்மத்திற்கு விஷ்ணுவேஅமிசம் என்பதறுந்து வீழ்ந்து இந்தத்தோஷம் தமதுதலைமேல் வந்தேறிக்கொண்டமையால், அதனை நமதன்பர் இறக்கப்பார்க்கிறூர். அதனை இறக்கிக்கொள்ள இவரால்முடியாது. ஏனெனின், "அவ்வுபநிஷத்திற் படிக்கப்பட்ட பிரஹ்மருத்ரபதங்களுக்கு அந்தரியாமியாகிய நாராயணனேபொருள்" எனவும், அதிலுள்ளவிஷ்ணு "அந்தரியாமியாகிய நாராயணனுடைய அமிசம்" எனவும் இவர்பிரஸங்கித்து இறுமாந்துவிட்டார். இவர் உளறியதற்குச் சுருதிப்பிரமாணம் எங்கே? சுருதியில் மூவரையும் காரணம் 'என்று ஓதுக்கினமையால், அந்தரியாமித்வமும்,

அமிசத்வமும்சுருதிவிருத்தமாகிய அஸம்பாவிதங்களேயாயின. இஷ்டவிகாதம் பண்ணிக்கொள்ளாமல் எண்ணியபடிக்கெல்லாம் இவரெழுதிக்கொள்வது இவர்போன்ற ஏழைகளே ஒப்பத்தக்கது. நமதன்பரோ பிரமருத்திரர்களைப் பசுக்களாகக்கழித்தமையால், அவரோடு சேர்த்துக் கடையிற்படிக்கப்பட்டவிஷ்ணுவையும் பசுவென்றுகழிப்பதே விவேகிகள்ஸம்மதம். இந்தப்பசுவிஷ்ணுவை நமதன்பர்தேடிய ஜடவிஷ்ணுவினது அமிசம்என்கையால், அமிசியாகிய அந்த விஷ்ணுவும் பசுவாயிடுதேலே சிறந்திடும். அன்றியும் அவ்வுபநிஷத்திற் போந்த பிரஹ்மம் ஸத்வரஜஸ்தமசுகளை ஸமஷ்டிகுணமாகவுடையதெனவுங்கொள்ளவருதலால், கேவலம் ஸாத்விககுணமுடையது என்று அவர் ஸித்தாந்தப்படுத்தும் துரீயவிஷ்ணுவை அவ்வுபநிஷத்துத் தெருவிலேபிடித்துத் தள்ளியதென்க.

இனி, பிரஹ்மோபநிஷத்தில் பிரஹ்மம் நாலுபாதமாகப் பிரகாசிக்கின்றது எனக்கூறப்படுதலும் சிவதுரீயத்தை விளக்கும். ஈண்டுப் பாதம் அல்லது அமிசம் என்றது பிரஹ்மத்தினது சக்தியென அறியவேண்டியது. பிரஹ்மாவையதிட்டித்துப் படைத்தும், விஷ்ணுவையதிட்டித்து அளித்தும், உருத்திரனையதிட்டித்து அழித்தும் அந்தப்பிரஹ்மசக்தி வர்த்தித்தல் சுருதிநிஷ்டமாகையால், திரிமூர்த்திகளையும் அமிசம் என்றது இனைத்தென்றுவெளிப்பட்டது. ஒருவன் மற்றொருவனைக் கையாலடிக்கிறான், கையிலிருக்குங்கோலாலுமடிக்கிறான். அடிக்கிறவனுக்கு அவனதுகையும், கோலுஞ் சக்திகளாயின. கை அபின்னசக்தியும், கோல் பின்னசக்தியுமாம். அடிக்கிறவனுக்கு அவனதுகை தாதாத்மியஸம்பந்தமும், கோல் பரிக்ரஹஸம்பந்தமுமாம். கையை அவனதுசக்தியென்றவிடத்தும், அந்தக் கையிலுள்ள கோலை அவனதுசக்தியென்றவிடத்தும், இரண்டையும் அவனதுசக்திகளென்றவிடத்தும் ஒருவிரோதமு முண்டாகாதவாறு பிரஹ்மத்தினது அபின்னசக்தியையும், அதனதுபின்னசக்திகளாகுந் திரிமூர்த்திகளாகிய பசுக்களையும் அந்தப்பிரஹ்மத்தினது அமிசங்களென்று கூறுவது நிர்விவாதநிரஸ்தமென்க. இவ்வுண்மைகளைத் தேராது (நகாரணம்) என்று வேதம்ஒதுக்கிய பிரஹ்மவிஷ்ணுருத்திரர்களையாவது, அவருள் ஒருவராகிய விஷ்ணுவையாவது பிரஹ்மத்தினது அபின்னாமிசமென வாதிப்பது அவைதிகர்களுக்கே அடுக்கும். இவற்றைத் தெளிந்திடாத நமதன்பர் "பிரஹ்மோபநிஷத்தில் துரீயசிவனுள்னென்பதற்காதாரமாக ஒருஎழுத்தைக்காணோம்" என்று கூச்சலிட்டார். 'துரீயசிவம் இதிற்பெறப்படவில்லையென்று பிரஸ்தாபித்த நமதுநண்பர் "பிரஹ்மம், நாலுஅமிசங்களையுடையதென்

தீக்ஷிதர்சொல்லுகின்றார்.இது அஸங்கதம்”) என்றுபேய்க்கூச்சலிட்
டார். இவருக்குப் பிராணாதாரமாகத் தேடிக்கொண்ட பசுவதிகரண
நியாயத்திற்குப் பல்லுடைந்துபோனசங்கதியை யாம் பலருக்குந்
தெரிவித்துவிட்டோமாகையால்; இவர் இனிஅதனைத்தொடும்போ
தெல்லாம் பண்டிதர்கள் பரிகாசமேசெய்வார்கள். அவர்கொண்ட
கருத்தின்படிக் கைவல்யத்திற்போந்த பிரஹ்ம-புருஷ சப்தங்கள்
நாராயணனைவிளக்கமாட்டா. பிரஹ்மமும்,புருஷனுஞ்சிவபரஞ்சுட
ரேயாம். இவரே “உமாஸஹாயம்” இத்யாதிபிரயோகங்களால் பிர
திபாதிக்கப்பட்ட பரம்பொருளாம். இதிலுள்ள உமாஸஹாயம்-பர
மேச்வரம்-ப்ரபும்-த்ரிலோசநம் - நீலகண்டம் - ப்ரசாந்தம் என்னும்
பதங்கள் அந்தரியாமியான நாராயணபரமாகவே நிற்கும் எனவுங்
கொஞ்சி நமதன்பர் மகிழ்ந்திருக்கிறார். ஓர்விடபுருஷனைப்பார்த்து
இவரில் எனதுபர்த்தா அந்தரியாமியாயிருக்கிறானென்று அவனைக்
கூடிமுயங்கத்துணியும்விபசாரியினதுசெய்கையே ஈண்டமைவுடை
த்து. இவ்வசனத்திற்பெறப்பட்ட பிரஹ்மயோநிம் - பூதயோநிம்
என்ற பிரயோகங்களுக்கு அவர் ஏதேதோ உளறிவழிகின்றார். அ
வைகளைப் பிரஸ்தாபித்து வீண்காலக்ஷேபஞ்செய்வது அவசியமன்
றெனவிடுத்தாம். பண்டிதர்கள் அவைகளைப்பார்த்தால் அவரதுமதி
யைப் பாலிசர்மதியினும் அல்பமாகமதித்துப்பாற்றுவர்.பிரஹ்மாவுக்
குப் பிறப்பிடமாயுள்ளவர்,பூதங்களுக்குப் பிறப்பிடமாயுள்ளவர் என
பதே அவைகளினுண்மைக்கருத்தாம். பிரஹ்மத்தைப் பிறப்பிடமா
கவுடையவர் என்னும் அவர்கூற்றைத்தழுவின்? “அசிந்த்யம்-அவ்ய
க்தம் - அநந்தரூபம்-சிவம்-ப்ரசாந்தம்-அம்ருதம் - ப்ரஹ்மயோநிம்”
என்னுஞ் சப்தபங்திகளுக்கு எவ்வாறுபொருள்கொள்வது? இவற்
றை நேரோபார்க்கும் ஸாதுக்களுக்கு நமதன்பரது வியாக்யானம்
அமேத்யஸ்பர்சம்போலக் குலைநடுங்கப்பண்ணுமென்க. பிரஹ்மவி
ஷ்ணுருத்ரர்கள் சிவனாலுண்டுபண்ணப்பட்டார்கள் என்று அதர்வசி
கை கூறுவதால், பிரஹ்மாவுக்குப் பிறப்பிடமாயுள்ளவர் சிவபரஞ்சு
டரென்பது நிலைபெறும். “ஈச்வரஸ்ஸர்வபூதாநாம்” என்றதேத்யாதி
மந்திரங்களால் “பூதயோநிம்” என்றதும் நிலைக்கும்: கேவலம் சிவ
பரத்வபோதகமாகிய இவ்வுபநிஷத்தில் வந்துவீழ்ந்து தமக்கும் பிறர்
க்குமுபயோகப்படாமற்போமாறு கலக்கியுழக்குமிவரை யாமென்
னென்று கூறுவோம்? அம்மம்ம! இவர்சிந்தை பாவக்களஞ்சியமோ?
பாமரக்கொட்டகமோ? பழவினைப்பொக்கிஷமோ? கொடிது! கொ
டிது!! இந்தச்சுருதியில் “ஸப்ரஹ்மஸசிவ:” எனவும், “ஸஹவிஷ்
ணுஸ்ஸப்ராண:” எனவும் படிக்கப்படுதலால் 'திரிமூர்த்திகளும் பர

சிவவிபூதிகளாயினர். இதனால், சிவனாரது துரீயத்வம் வியக்தமாயி யது. அன்றியும், "த்ரிஷு தாமஸு யத்போஜ்யம்-போக்தாபோகச் சயத்பவேத், தேப்யோவிலக்ஷணஸ்ஸாக்ஷீ - சின்மாத்ரோஹம்ஸதா சிவ:" என்னும்வசனத்தில் ஜாக்ரமுதலிய மூன்றுஸ்தானங்களிலும் புஜிக்கத்தக்கதும், புஜிக்கிறவனும், போகமுமாகிய பொருள்களுக் குவிலட்சணமும், ஸாட்சியும், சின்மாத்ரமுமாயுள்ளது ஸதாசிவப் பொருளென்று விளங்குவதாலும்அவஸ்தாத்ரயாதீதமாகிய மூவரை யுங்கடந்த துரியநிலை வியக்தமாகியது. இவைகளையோராமல் கைவல் யம் சிவனாரதுதுரீயத்வத்தை விளக்கினதில்லையென்று ஐயங்கார் பேசியது அவரைமூடியிருக்கும் அந்ததமஸின்பயனென்றே அறிய வேண்டியது. இவ்வுபநிஷத்பாகத்திற்கு யாம் தக்கபொருள் கூறு கின்றோம். "ஏகாந்தஸ்தானங்களிலே சுகாசனத்திலிருந்து சுத்த ருசி, நேராகியகழுத்துத்தலையுடம்புகளையுடையனாய், அத்யாச்ர மஸ்தனாய், இந்திரியங்களனைத்தையும்அடக்கிப் பக்தியால் தனது ஆசாரியனையிறைஞ்சி, ஹ்ருதயபுண்டரீகத்தைத் துகளற்றசுத்தமாக க்கருதி,அதன்மத்தியிலேதெளிவுடையவராய்,சோகமில்லாதவராய், எண்ணுதற்கரியவராய்,வெளிப்படாதவராய், அநந்தரூபராய், சிவ னாய்,அமிர்தராய், பிரஹ்மயோனியாய்,தத்பதமாய், ஆதிமத்தியாந்த விஹீனராய்,ஏகராய், விபுவாய், சிதாநந்தரூபராய், அரூபராய், அத் புதராய், உமாஸஹாயராய், பரமேசுவரராய், பிரபுவாய், மூக்கண் ணராய், நீலகண்டராய், பிரசாந்தராய், பூதயோநியாய், ஸமஸ்த ஸாக்ஷியா யிருப்பவரைத்தியானித்து,அதனால் முனியாகி இருளின் மேற்போவான். அவர் பிரஹ்மா, அவர் சிவன், அவர்இந்திரன், அவ ரழிவற்றவர், மேலானவர், சுவப்பிரகாசர், அவரே விஷ்ணு, அவர் பிராணன், அவர்காலன், அக்னி, அவர்சந்திரன், அவரே இருந்தது மிருப்பதுமாகிய எல்லாமானவர், என்றுமுள்ளவர், அவரையறிந்து அதனால் மிருத்யுவைக்கடப்பன். முத்திக்கு வேறுவழியில்லை" என் பதேயாம். இதனைத்தரிசித்தபேர் இதில் சிவனாரது துரீயத்வம் பெ றப்பட்டிருக்கின்றதோ? இல்லையோ?என்பதைச் சுலபமாக அறிய லாம். அதர்வசிகை முதலியவற்றால் துரீயராகப்போந்த சிவனை இப்பிஞ்சுவைஷ்ணவர் கைவல்யம் துரீயரெனக் கழறினதில்லையெ ன்றுபேசியது அவரதுவைஷ்ணவத்தை எமது தீக்ஷிதஸ்வாமிகள் மண்ணைவெட்டிக்கீழேபோட்டுப் புதைத்துவிட்டதனாலென்க. இது நிற்க.

நமது சிற்றூத்துக்காட்டுவைஷ்ணவர் "அதர்வசிகை துரீயசி வனை ஸ்தாபிக்கச்சக்தியற்றது" எனத்தொடங்கி, அதில் தியேயன்

ஆர் எனப் பிறந்தகேள்விக்குக்"காரணந்துத்யேய:"எனப் பதிலுண்டாகியது எனமுடித்து,"காரணமோ மஹோபநிஷதாதிகளான ப்ரா பக்வாக்கியங்களாலே நாராயணனென்பதாக அறியலாகிறது என அழுதிதொலேத்தார். இதற்குமுன் இவரைப்போல் அழுதவரொருவருமில்லை. இவரது ஒப்பாரி உசிதந்தான். இனி இவரழுகையை யாம் ஓயப்பண்ணுகிறோம். இவர்காட்டிய மஹோபநிஷத்திநுபக்ரமத்தில் "ஏகோஹவை நாராயண ஆஸீந்-நப்ரஹ்மாநேசாந:" என்று கூறப்பட்டிருக்கின்றது. இதில் நாராயணரும், பிரஹ்மாவும், சிவனும் பிரஸ்தாபிக்கப்படனர். இவருள் பிரஹ்மருத்ரர்களைநோக்க நாராயணருக்குஆதிக்யமுண்டாயினதேயன்றிப் பிரஹ்மவிஷ்ணுருத்ரர்களைக்கடந்த சிவனுக்கு மகிமைகுறைந்ததாக ஏற்படவில்லை. இந்தச்சுருதியில் "ஏகோஹவை நாராயண ஆஸீந் நப்ரஹ்மாநேசாந:" என்றிருப்பதோடு (நவிஷ்ணு:) எனவுமிருந்திடின், நமதன்பர்தேடிய ஜடவிஷ்ணுவுக்கு ஒருக்கால்பிழைப்புண்டாகலாம். பிரஹ்மாவும், ஈசானரும், இவர்களுக்குமேலிட்டவராகத் துதிக்கப்படும் நாராயணருமாகிய மூவரும் துரீயசிவனால் படைக்கப்பட்டு அழிகின்றவர்களென்பதை இவ்வுபநிஷத்திற்றானே "ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச, ஸர்வாவாபூதஜாதய:, நாசமேவாநுதாவந்தி" என்று பிரஸங்கித்திருக்கின்றது. அன்றியும், "ஸசிவஸ்ஸஹிர்விதி:" என்று திரிமூர்த்திகளுஞ் சிவவிபூதிகளாதலுங் கூறியிருக்கின்றது. அத்துரீயம் இதுவென்பதுதோன்ற,

> "தஸ்மாதீசாநோமஹாதேவோமஹாதேவ:"
> "பராத்பரதரம் யந்மஹதோமஹாந்தம்
> ஸ்வரூபதேஜோமயசாச்வதம்சிவம்"
> "சிவஏவஸ்வயம்ஸாக்ஷாத்"
> "ஸர்வம்சாந்தம்நிராலம்பம்
> வ்யோமஸ்தம்சாச்வதம்சிவம்"

என்னும் வாக்கியங்கள் பிறந்துள்ளன. இன்னும பலவுள. இவைகளையெல்லாம் நமதன்பர் அநுவாதங்களென்று அலறிக்கூவுவர். பிரஹ்மேசாநர்களுக்குக் காரணராய் முதற்கண்வெளிப்பட்ட நாராயணரைப் பின்னர் அவ்விருவரோடுசேர்த்துப் பிறப்பிக்கப்பட்டாரெனவும், நாசமாயினாரெனவும், அவரும் ஏனையிருவரும் விபூதிகளாயினாரெனவும் அவ்வுபநிஷத்துப்படித்தலாலும், திரிமூர்த்திகளுக்கும் மேலானவர் நாராயணரென்று அது படியாமையாலும், அத்திரிமூர்த்திகளுக்கும் மேலானவர் சம்பு என்றுபடித்த அதர்வசிகைக்கு விரோதமாக அது படியாதாகையாலும், 'அநிற்போத்த ஈசாந

மஹாதேவ-பராத்பரதரங்களாகிய சிவவாசகங்களை அநுவாதமென்பது அறியாமையாகவேமுடியும். நாராயணர்தியாதாவாகப்படிக்கப்பட்டவராதலால்,அவருக்குஆதிக்யம்போதர அவ்வுபநிஷத்துப் பிரஹ்மசிவாதிசப்தங்களால் கௌரவங்கல்பித்துபசரித்தவாறறிக. நமதன்பர்காட்டிய மஹோபநிஷத்து மல்லார்துபடுத்துக்கொண்டமையால், அவர் அவ்வுபநிஷத்தால் விஷ்ணுபரத்வஞ்சாதித்து, அதனைக்கொண்டுவந்து அதர்வசிகையோடு முடிபோட்டுவைத்தது அறுந்துபோய்விட்டது. மஹோபநிஷத்திற்போந்த நாராயணனை அதர்வசிகை (நகாரணம்) என்று அடியிற்றள்ளிச் சம்புவாகிய காரணப்பொருளைக் "காரணந்துத்யேச்சம்புঃ" என்று முடியிற்கொண்டு கூத்தாடுவதால் நமதன்பர் சம்புவைமறைத்து நாராயணனைநாடிப்போனது ஸாதுக்கள் நகைக்கவேயிடஞ்செய்தது.ஒருவன்மற்றொருவனைப்பார்த்து உன்குடுமிஎங்கேயென்றுகேட்டால் அவன் என்குடுமி பக்கத்துவீட்டுப்பையனிடத்திலேயிருக்கின்றதுஎன்பதற்கே நமதுநண்பர்தேடியநியாயம் ஒத்திருப்பதாக யாமொதுக்கிறோம்.

இம்மட்டோ, இப்பேய்மதியார் வரம்பிற்கட்டுப்படாமல் "இதிலுள்ள சம்புசிவாதிநாமங்கள் ரூடியையிழந்து புரோவாதாநுகுணமாக நாராயணனை (வசிக்கிறின) என்றுகொள்ளவேண்டும். தொடக்கத்தில் (புருஷனைதவத்ய)என்ற வாக்யத்தாலே புருஷனைப் பிரதிபாதிக்கிறதென்பது ஸ்பஷ்டமாயிருக்கின்றது. புருஷசுருதியாலே நாராயணனென்று விளக்கப்பட்டிருக்கின்றது" என்றற்றொடக்கத்துப் பிரளாபங்களுக்கும் ஆரம்பித்தார். இவரது பிரஸங்கத்தில் (வசிக்கிறின) என்று ஓர்பிரயோகஞ்செய்தார். அது இன்னபாஷையென்று எமக்குவிளங்கவில்லை. இதுநிற்க. சம்புவாதிநாமங்கள் ஏனோ ரூடியையிழந்திடும் ? இவ்வாறுபிதற்றுதல் ஓர்கற்புடையநங்கையைப் பார்த்து இதோவுன்னைக்கைகோத்துநிற்குமிவன் உனதுகணவனைப்போலிருக்கின்றான். உனதுகணவனன்று. நானே உனது மெய்யானகணவன் என்றுபேசி மானமிழந்தமதிகேடனுக்கே ஒப்பிடத்தக்கது. கற்புடையநாயகி தன்கணவனையே கண்குளிரப் பார்ப்பதன்றி, ஏனையோரைக் காலாலொதுக்குதல்போல அவ்வதர்வசிகை "சிவஏகோத்யேயঃ" என்று சிவனைப் புகழ்ந்தும்,பிரஹ்மவிஷ்ணுருத்ரர்களைப் பிரஸ்தாபித்து "நகாரணம்-ஸர்வமந்யத்பரித்யஜ்ய" என்று வாய்திறந்திகழ்ந்துந் தனதுநிறையைக் காத்துக்கொண்டிருக்கின்றது. இவைகளை நமதன்பர் ஏனோ யோசித்திலர் ? இவைகளையோசியாது அவ்வதர்வசிகை நகாரணம் என்றொதுக்கிய நாராயணனை நமதன்பர் அதற்குப் புரோவாதாநு

குணமாகப்பொருந்தும்என்று புணர்த்தப்பார்த்தது அந்தணர்குலத்த ருங்கொடியொருத்திக்கு அவளருங்கடியால் வரித்தவரனையகற்றி அவளிருக்கும் அக்ரஹாரத்திற்கப்பால்வசிக்கும் அயற்குலமைந்த னைக் கரவாற்சேர்ப்பிக்கமுயலு மறிவிலியின்செய்கையோடுமென்றோ ஒத்துப்பொலிவெய்தியது? இவ்வுபநிஷத்திலுள்ள புருஷபதம் "தமீ சாநம்புருஷம்" என்னும் புருஷனையேயன்றி "யோநிர்ஜநார்த்தநஃ" என்னும் பெண்ணாகியநாராயணனைப்போய்ச் சேராது. இவர் பதிவ ரதையைவிபசாரியாக்கவும், பிராஹ்மணப்பெண்ணைப் பிரஷ்டை யாக்கவுந் தலைப்படுதல்போலவே விஷ்ணுவாகிய ஸ்திரீயையும் புரு ஷனுக்கப் பார்க்கிறார். இதுமுடியாதகாரியம்.

இவரிவ்வளவிலமையாமல் சிவபரஞ்சுடரைச்சுட்டி "இவ ரைத் தியேயமொன்றுசொல்வதெங்ஙனம்?" என வோர்பேராச்சரியங் கண்டுகூறினார். இதனை இவரது உள்ளத்தைமூடியிருக்கும் அந்த தமசு யாவருடையகண்களையும் மூடிவிட்டதாக எண்ணியெழுதிக் கொண்டார்போலும். அவ்வுபநிஷத்திற்றானேயன்றோ

"காரணந்துத்யேச்சம்புஃ"

"த்யாயீதேசாநம்"

"சிவஏகோத்யேயஃ"

என்னுந் தியேயவசனங்கள் பொலிந்துகிடக்கின்றன? இவற் றால் எமது சிவபரஞ்சுடர் தியேயராதல்வெளிப்படை. இந்தவுப நிஷத்திலாவது, இவர் புரோவாதங்கள்என்று கட்டிக்கொண்டழும் சுபாலம்-மஹோபநிஷத்துமுதலிய வேறு எந்தவுபநிஷத்துக்களிலா வது நாராயணர் தியேயர் என்றபடிக்கு மோர்வசனத்தைத் தேடி யெடுத்துக்கொண்டு சபையின்முந்த யோக்யதைகெட்டுக்கிடக்கு மிவரது அவகதியையமூந்திப்பாராமல் எமது சிவகதியின்மேற் சின ந்தது அவரது பாவத்தின்கொழுமையேயாம். ஆயின், அவ்வதர்வசி கையில், "த்யாதாருத்ரஃ" என்றுகூறியிருப்பது என்னையெனின், அது "நாராயணபரோத்யாதா" என்பது போன்றதாம். நாராய ணன்தியாதா, உருத்திரன் தியாதா என்கையால் இவர்களே நகா ரணம் என்றொதுக்கப்பெற்றவர்களாம். "த்யாதாருத்ரஃ" என்ப தற்கு முன்வசனமாக "த்யாநம்விஷ்ணுஃ" என்று கூறியிருத்தலை நமதன்பர் பார்ப்பதற்குக் கண்குருடாய்விட்டதுபோலும். "த்யாநம் விஷ்ணுஃ" என்று இவ்வுபநிஷத்திற் பஷிக்கப்பட்டபடியே நாராய ணத்திலும் "நாராயணபரோத்யாதா-த்யாநம்நாராயணஃபரஃ" என் றுகூறியிருத்தலையும் ஸாதுக்கள்கண்டு ஸந்தோஷிப்பார்கள். இத னால் "த்யாதாருத்ரஃ"என்று குணருத்ரரைப் பிரஸ்தாபித்ததனம்

"காரணந்துத்யேயச் சம்பு:" என்றதுமுதலிய துரிய சிவவாசக சுருதிகளைப் பாதிக்கமாட்டாது. நாராயணர் தியேயரென்று இவ்வுபநிஷத்துக் கூறுமாயின், நமது அன்பர் "த்யாதா ருத்ர:" என்னும் பகுதியை அதற்கு வியாப்பியமாக்கலாம். அவரதிர்ஷ்டம் இங்குமில்லை. எங்குமில்லை. என்செய்வார்பாவம்! இனி இவர் வேறொரு பெருங்காரியஞ்செய்திருக்கிறார். என்னெனின், சம்புசப்தத்திற்கு வைஜயந்தி-வல்லகர்டுஜெயந்தி முதலியவைகளால் பல அர்த்தங்களுண்டென்று சாதித்ததேயாம். இதனால், இவர்அடைந்த பிரயோஜனம் ஈதெனவிளங்கவில்லை. இவர்கண்டுபிடித்த பலவர்த்தங்களில் நாராயணருமொருவராக வெளிப்படின், ஒருவாறு இவர் அல்பஸந்தோஷியாகவாவது ஆகலாம். அந்தப்பிரஸ்தாபமே கிடையாது. என்னை? அதற்குப் பிரஹ்மா பொருளாயினரெனின், பிரஹ்மா பொருளானால் விஷ்ணுவடைந்தலாபம் யாது? அந்தப்பிரஹ்மாவை அதேவசனத்தில் விஷ்ணுருத்ரர்களோடுசேர்த்து நகாரணம் என்று ஓதுக்கிவிட்டமையாலும், அவரை விஷ்ணுவுக்குங் கீழிட்டவரென்று பலசுருதிகள் கூறுகின்றமையாலும், அவரைச் சம்பு என்றுஅழைத்து, அவரே துரியப்பொருளென்று நமதன்பருங்கூறுராகையாலும், குணமூர்த்தியுந் துரியமூர்த்தியுமாக இரண்டுபிரஹ்மாக்களை வேதம் எங்கும்படியாமையாலும் அவர்தேடிக்கொண்ட வசனங்கள் அவரைத் தெருவிலேயேவிட்டன. இவ்வுண்மைகளையுணர்ந்தபேர் இவர் "இந்தச்சிகையில்சொல்லப்பட்ட விஷ்ணுவினுடையவுற்பத்தி அவதாரமென்பது ஸ்பஷ்டம்" என்று எழுதிக்கொண்டதை எங்ஙனே ஒப்புவார்கள்? அவதாரமும், அதிஷ்டானமும் அபேதப்பொருளாகையால், அவதாரத்திற் கங்கீகரித்துக்கொண்டவுற்பத்தி அதிஷ்டானத்தையும் பற்றியழுக்காமற்போகாது. இதனால், சிவனிடத்திலேயே நாராயணர்பிறந்தாரென்பதும், அவர் நகாரணரென்பதும், சிவனேகாரணரென்பதும், அவரே தியேயரென்பதும் ஸித்தாந்தமாயின. இவர் தமது வழுத்திரட்டினோர் மூலையில் "நாராயணபதம் மூலகாரணபூதனாகிய ஸ்ரீகாந்தனுக்கு வாசகமாயிருப்பினும் அவரது அவதாரமூர்த்தியாகிய நாராயணனென்னுமிருடியை விசேடித்துச்சொல்லும்" எனவும், "ஸ்ரீகாந்தவாசகமான விஷ்ணுபதமும் பரவாசுதேவமூர்த்தியினுடைய வ்யூஹபூதர்களாகிய ஸங்கர்ஷணாதிகளிலொருவராகிய ப்ரத்யும்நமூர்த்திக்கும் வாசகமாம்" எனவும் எழுதியிருக்கின்றார். நாராயண - விஷ்ணுநாமங்கள் நாராயணனது அவதாரத்திற்கும், விஷ்ணுவினதுவ்யூகத்திற்கும் மறையே அமைந்தவாறு உமாகாந்தவாசகமான சம்பு,

மும் அச்சம்புவினது வ்யூஹபூதர்களாகியமூவருள் பிரஹ்மாவுக்கும் உருத்திரருக்கும்அமரகோசாதிகள் படித்திருக்கலாம்.இவற்றை நம தன்பர் கவனியாமலே வெளிவந்து பரியவமெய்தினர். இதிலே யா மொருவிசேடங்கண்டோம்.என்னெனின், இவருடையமுதற்பாக த்தில்"மற்றொருபொருளில் பிரயோகிக்கத்தகாத நாராயணபதத்தா லே சொல்லப்படும் ஸ்ரீகாந்தனையே பிரஹ்மமென்றுசொல்வது உசி தம்" என்று எழுதிக்கொண்டது அழிந்துபோனதேயாம். மற்றொரு பொருளில் வினியோகிக்கத்தகாதது என்ற நாராயணபதம் நாராய ணவிருடியின்றலையிலுமேறியதால்,நாராயணரது பிரஹ்மத்வம் விப சரித்துப்போய்விட்டது. இருவரும் அபேதமாகையால் பாதகமின் றெனின், நாராயணருக்கு அபகர்ஷநேர்ந்தவிடங்களி லிவ்வபேதப் பிரஸங்கமுகிப்போக வதனை அவதாரத்தின்றலைமேலேற்றி ஓடப் போவதென்னை? இவைகளை இனியேனுங்கூர்ந்து யோசித்து அடங் குவாராக.

இனி, இவர் "யதாதமஸ்தந்நதிவாநராத்ரிர்-நஸந்நசாஸச்சிவ ஏவகேவல:" என்னுஞ் சுவேதரவாக்யமும் சுபாலத்திற்கநுவாதமாகி நாராயணனே பிரளயதசையில் விஞ்சியிருக்குஞ் சேதனன் எனத் தெரிவிக்கின்றது எனத் தெரிவித்தார். யதா-ததா முதலிய அறிகுறி கள் அநுவாதத்திற்குரியனவெனவும் ஆதாரங்கூறினர். அன்றியும், இவரோ ("யதாக்னேயோஷ்டாகபால" மென்கிறவிடத்திற்போலே இவ்வாக்யமும் விதாயகமாகலாமாகையாலே சிவனே காரணம்")எ ன்றுசைவர் ஸமர்த்தித்துக்கொள்வதாகவும் பிரஸ்தாபித்தார். இந்தப் பிரஸங்கத்தால் நமதன்பர்சாதித்தது ஒன்றுங்காணேம். யதா என் பதை அநுவாதமென்றேகொள்ளவேண்டிய அவசியமில்லையென் று "யதாக்னேயோஷ்டாகபாலம்" என்கிறஸாக்ஷிகாட்டிச் சைவர் கள் சாதித்துக்கொள்வதாக நமதன்பர் பிரஸ்தாபித்தாரேயன்றி அந் தஸாக்ஷியை ரத்துசெய்யவில்லை. அதனை அவரழிக்காமையால் யதா-ததா முதலியன அநுவாதத்தினறிகுறிகளென்று அவரெழுதிய து நின்றுவற்றியதாயிற்று. இதனாலும், எங்களதுமுதற்பாகத்தி லிவ்விஷயம் பரிஷ்கரிக்கப்பட்டதனாலும், சுபாலத்திற்போந்த நாராயணர் சிவதுரீயத்திற்கடங்கினமையாலும்சுவேதாசுவதரத்தை அநுவாதமென்று நமதன்பரலறியவாதம் அபவாதமாகவேமுடிந் தது. இவர் இந்தஸந்தர்ப்பத்தில் "நாராயணனே பிரளயதசையில் விஞ்சியிருக்குஞ்சேதனன்" என வோர்பிரயோகஞ்செய்தார். இந்த ஸமயத்தில் ஜடதுரீயவிஷ்ணுவைத் தெருவிலேவிட்டார். சேத னன் விஞ்சியிருக்குமென்கையால், இவரது துரீயஜடம் அசேதன

மும், விஞ்சியிராதவஸ்துமென்பதற்கு ஐயமுளதேயோ? முன்னொ
டுபின்முரணக்கூறுத விவரதியற்கையென்க. இவரதுமுக்கியசேத
னன் மூவரிலடங்கினமையால், அவன் நகாரணம் என்று ஓதுக்கப்
பட்டான். இவர்தேடியஜடமுஞ் சேதனமுமாகிய இரண்டும் பிர
ளயதசையில் விஞ்சுதலொழிந்தமையால் சுவேதாசுவதரத்திற்போந்
த (சிவஎவகேவல:) என்னும்வசனம் இவரது கூறப்புநாராயணனது
என்று போராடவந்தது வேரோடறுந்தது. நாராயணன் ஜலசாயி.
இவனைவிழுங்குகிறவன் உருத்திரன். "அர்த்தசந்த்ராக்ருதிஜலம்-
விஷ்ணுஸ்தஸ்யாதிதேவதா, த்ரிகோணமண்டலம்வஹ்நீ - ருத்ரஸ்
யாதிதேவதா" என்று விஷ்ணுருத்ரர்களுடைய யோக்யதையைக்
கூறி, "ஆகாசமண்டலம்வ்ருத்தம் - பரவஸ்த்வதிதேவதா" என்று
யோகசிகோபநிஷத்து முடிவுகூறியது. பரவஸ்து இதுவென்பது
தோன்ற மற்றோரிடத்தில் "ஆகாசமண்டலம்வ்ருத்தம்-தேவதாஸ்ய
ஸதாசிவ:" என்றுகூறியது. இதனால், ருத்ரனுக்குஅடங்கினவர்
விஷ்ணுவெனல் ஸித்தம். இவ்விருவரையுங்கடந்த பரவஸ்து ஒன்
றும் இதிற்கேட்கப்பட்டது. இதனால், நாராயணர்தான் விஞ்சிய
பொருளென்று நகைக்குநாணமல் நமதன்பர்கூறியது துக்கிக்கத்தக்
கதாயிற்று. அன்றியு மவ்வுபநிஷத்தில், "விஷ்ணுரூபீமஹாயோகீ-
பாலயேதகிலம்ஜகத்-ருத்ரரூபோமநோயுஞ்ஜந் - ஸம்ஹரத்யேவதேஜ
ஸா" என்றுகூறப்பட்டிருக்கின்றது. இம்மட்டோ, தேஜோபிந்துபநி
ஷத்து "ரக்ஷகோவிஷ்ணுரித்யாதி-ப்ரஹ்மாஸ்ருஷ்டேதுகாரணம்-
ஸம்ஹாரேருத்ர இத்யேவம்" என்றுகூறுகின்றது. இப்படியே எல்
லாவுபநிஷத்துக்களுங் கூறுகின்றன. ஸம்ஹாரகர்த்ருத்வம் விஷ்
ணுவுக்கு யாண்டுங்கூறவேயில்லை. விஷ்ணுவுக்கு ஸம்ஹாரகிருத்யம
நைஜமாகாமையினாற்றானன்றோ இராமன் உருத்திராம்சத்தைத்
தாங்கி இராவணனை ஸம்ஹரித்தானென்று இராமாயணம்கூறியது.
"நப்ரஹ்மாநேசாந:" என்றது மஹாப்ரளயத்தைச் சுட்டியதன்று
இவற்றையோராது உருத்திரனது ஸம்ஹாரத்திலடங்கிய நாராயண
னை ஸர்வஸம்ஹாரமூர்த்தியாகக் கூறவந்தது நமதன்பரது தெளிவி
ன்மையேயாம். "ப்ரத்யக்ஜநஸ்திஷ்டதிஸஞ்சுகோசாந்தகாலே-ஏ:
யேவருத்ரோநத்விதீயாயதஸ்தே-நப்ரஹ்மா நவிஷ்ணுர் நஸூர்யே
நாக்னிசந்த்ரதாரகா:" எனவெழுந்து மஹாப்ரளயத்தில் விஞ்சிய
சேதனன் சிவனென்று ஒரு சுருதிகூறியது. "அதகஸ்மாதுச்யதே
மஹேச்வர:-யஸ்ஸர்வாந் லோகாந்ஸம்பக்ஷதி ஸம்பஜத்யஜஸ்ரம
ஸ்ருஜதிவாஸயதிவா-தஸ்மாதுச்யதேமஹேச்வர:" எனவெழுந்து
ஸகலவிசுவங்களையும் பக்ஷிக்கின்றவனும், ரக்ஷிக்கின்றவனும், ஸ
ஸம்ஹாரகர்த்தாவாய

ஜிக்கின்றவனும், தன்னில் வசிக்கச்செய்கின்றவனுமாகிய காரணத்தாலேயே சிவன் மஹேசுவரனென்று சொல்லப்படுகின்றார் என்று வேறொருசுருதிகூறியது. "யோவிஸ்புலிங்கோலலாடஜோஸர்வம் ஜகத்பஸ்மஸாத்கரோதி - புனச்சஸ்ருஷ்ட்வாபுநரப்யரக்ஷ - தேவம்ஸ்வதந்த்ர:ப்ரகடீகரோதி" என மற்றொருசுருதியெழுந்து நெற்றியிற்கண்படைத்த சிவபரஞ்சுடரே ஸர்வஸம்ஹாரத்தையும், ஸ்ருஷ்டிஸ்திதிகளையுஞ் செய்கின்றானெனக் கோஷிக்கின்றது. "யோந்தகாலே ஸர்வலோகாந் ஸஞ்சஹார" எனப் பின்னொருசுருதியெழுந்து சிவனே ஸம்ஹாரகர்த்தா என்று ஸ்தாபிக்கின்றது. "யஸ்ஸர்வேபரமகாலே ஸர்வாநாத்மந்யுபஸம்ஹ்ருத்ய-ஸ்வாத்மாநந்தேஸுகேமோததே ப்ரகாசதேவாஸதேவ:" என வேறொருசுருதியெழுந்து எவர் பரமகாலத்தில் ஸர்வத்தையுந் தன்னிடத்திலேயே யுபஸம்ஹாரஞ்செய்து தன்னாத்மாநந்தஸுகத்தில் ஸந்தோஷித்துக்கொண்டிருக்கின்றாரோ, எவர் தனக்குத்தானே பிரகாசித்துக்கொண்டிருக்கின்றாரோ அவரோதேவர் என்று ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியாகிய சிவபரஞ்சுடரை விதந்தோதியது. "பஞ்சக்ருத்யநியந்தாரம்" எனவும், "பஞ்சப்ரஹ்மோபஸம்ஹாரம்-க்ருத்வாஸ்வாத்மநிஸம்ஸ்திதம்" எனவும், வேறொருசுருதியெழுந்து சிவபெருமான் ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரதிரோபவாநுக்ரகங்களைச் செய்பவரெனவும், பிரஹ்மமாகியதனது பஞ்சகிருத்யங்களதிஷ்டித்தலால் பஞ்சப்ரஹ்மங்களென் றுபசரிக்கப்படும் பிரஹ்மவிஷ்ணுருத்ரமஹேச்வர ஸதாசிவமூர்த்திகளைத் தன்னிடத்தி லுபஸம்ஹாரஞ்செய்து ஸ்திரமாகவிருப்பவரெனவும் விசதப்படுத்தியது. அதேசுருதியானது "ஸ்வமாயாவைபவாத்ஸர்வாந்-ஸம்ஹ்ருத்யஸ்வாத்மநிஸ்தித:" எனவெழுந்து தனதுசக்தியின் வல்லமையினால் ஸர்வஸம்ஹாரஞ்செய்து தனக்குத்தானே சிவம்பிரகாசித்துக்கொண்டிருக்கின்றதென ஸ்தாபிக்கின்றது. இன்ன பலசுருதிகள் சிவனே ஸர்வஸம்ஹாரஞ்செய்து விஞ்சியசேதனன் என்று முழங்குவதற்குமாறாக நாராயணனே விஞ்சியசேதனன் என்றுகூறிச் சுவேதாசுவதரம் சுபாலத்திற்கநுவாதமென்று நமதுஐயங்கார் நாணின்றி நாவசைத்தது நடுநிலைமையைக் கடந்ததாயிற்று. இனிப் புரோவாதம் முந்தியது, அநுவாதம்பிந்தியது என்பது எமக்கும், அவருக்கும், எவருக்குமுடன்பாடேயன்றோ? உபநிஷத்துக்கள் நூற்றெட்டெனவெளிப்பட்டு முதல், இரண்டாவது, மூன்றாவது எனக் கிரமமாகவோடும். இந்தமுறையில் சுவேதாசுவதரம் பதினாலாவது உபநிஷத்து. சுபாலம் முப்பதாவது உபநிஷத்து. பிந்தியசுபாலத்திற்கு முந்தியசுவேதாசுவதரம் எப்படி அநுவாதமாகலாம்? இந்த நியாயத்

தாலும் ஈடிதன்பரது அநுவாதப்பிரஸங்கம் அவிப்பிரஸங்கமாயிற்று. இன்னும்விரிக்கிற்பெருகும்.

இனி, இவர் "மூலகாரண வஸ்துவினுடைய ரூபம் உமாபதித்வாதி லிங்கமுடையதென்பதில் பிரமாணங்களில்லை" எனவொன்றுகூறினார். "காரணந்துத்யேயச்சம்புஃ" என்றதே யாம்கொண்ட மூலகாரணவஸ்து. இதுவே பிரஹ்மவிஷ்ணுருத்ரர்களைக் கீழேதள்ளி மேலேநிற்குந் துரீயத்தைப்போதிப்பது. சம்பு என்னுநாமத்தையுடையபொருள் "உமாஸஹாயம் பரமேச்வரம்ப்ரபும்-த்ரிலோசநம் நீலகண்டம்ப்ரசாந்தம்" என்னும் அடையாளங்களோடு வெளிப்பட்டிருக்கின்றது. முந்தியது அதர்வசிகையும், பிந்தியது கைவல்யமுமாம். இந்தக்கைவல்யம் துரீயத்தைப்போதிப்பதென்னும் வாய்மையை மேலேவிளக்கினும். அன்றியும், மண்டலப்ராஹ்மணத்தில், "புத்திகுஹாயாம் ஸர்வாங்கஸுந்தரம்-புருஷரூபமந்தர்லக்ஷ்யமித்யபரே - சிரஷாந்தர்க்கதமண்டலமத்யகம் - பஞ்சவக்த்ரமுமாஸஹாயம்-நீலகண்டம்ப்ரசாந்தம்-அந்தர்லக்ஷ்யமிதிகேசித் - அங்குஷ்டமாத்ரஃபுருஷோந்தர்லக்ஷ்யமித்யேகே" என்பது அங்குஷ்டமாத்ரமாய் ஹ்ருதயபுண்டரீகத்தில்வசிக்கும் பரவஸ்துவினுடைய அடையாளங்களைப்பிரகாசப்படுத்தியது. இனி, யோகதத்வோபநிஷத்தில் "த்யாயம்ச்சதுர்முகாகாரம்-சதுர்வக்த்ரம்ஹிரண்மயம், தாரயேத்பஞ்சகடிகா:- ப்ருதிவீஜயமாப்நுயாத்" என்று பிரஹ்மாவையுபாஸித்தலால்பிருதிவியைஜயித்தலும், "ஸ்மரந்நாராயணம்தேவம்-சதுர்ப்பாஹுங்கிரீடிநம் - சுத்தஸ்படிகஸங்காசம் - பீதவாஸஸமச்யுதம், தாரயேத்பஞ்சகடிகாஸ்-ஸர்வபாபை:ப்ரமுச்யதே, ததோஜலாத்பயம்நாஸ்தி" என்று நாராயணனையுபாஸித்தலால் அபபுவை ஜயித்தலும், "த்ர்யக்ஷந்துவரதம்ருத்ரம்-தருணாதித்யஸந்நிபம், பஸ்மோத்தூளிதஸர்வாங்கம்-ஸுப்ரஸந்நமநுஸ்மரந், தாரயேத்பஞ்சகடிகா-வஹ்நிநாஸௌநதஹ்யதே" என்று உருத்திரனை யுபாஸித்தலால் அக்னியைஜயித்தலும், "தாரயேத் தத்ரஸர்வஜ்ஞ - மீச்வரம் விச்வதோமுகம், தாரயேத்பஞ்சகடிகா-வாயுவத்வ்யோமகோ பவேத், மரணம்நதுவாயோஸ்து" என்று மஹேசுவரனை யுபாஸித்தலால் வாயுவைஜயித்தலும், "ஆகாசேவாயுமாரோப்ய-ஹகாரோபரிசங்கரம்-பிந்துரூபம் மஹாதேவம்-வ்யோமாகாரம்ஸதாசிவம், சுத்தஸ்படிகஸங்காசம்-த்ருதபாலேந்துசேகரம், பஞ்சவக்த்ரயுதம்ஸௌம்யம்-தசபாஹுந்த்ரிலோசநம், ஸர்வாயுதத்ருதாகாரம் - ஸர்வகாரணகாரணம், ஆகாசதாரணாத் தஸ்ய-கேசரத்வம்பவேத்த்ருவம், யத்ரகுத்ரஸ்திதோவாபி ஸுகமத்யந்தமச்நுதே" என்று ஸதாசிவமூர்த்தியை.

யுபர்வசித்தலால் ஆசாசத்தில் ஓர்கேடுமின்றிவாழ்தலுஞ் சொல்லப்ப ட்டிருக்கின்றது. இந்தச்சுருதி திரிமூர்த்திகளுக்கு வேருகச்சொல் லப்படும் பரவஸ்துவுக்கு உமாஸஹாயத்வாதி லிங்கங்களை ஸ்தாபி க்கின்றது. இவ்வாறு தூரியஸ்வரூபம் வேதத்திற்கேட்கப்பட்டமை யானும், வேதோபப்ரஹ்மணங்களாகிய இதிஹாஸபுராணங்களிலும் அவ்வடையாளங்க ளினிது கேட்கப்படுகின்றமையானும் ஐயங்கா ரதுபிரஸங்கம் நரிபூளையிட்டதற் கொப்பாயிற்று. பாரதசேஷமாகிய ஹரிவம்சத்தில் நந்தகோபனுலே தன்மகனுன கிருஷ்ணனுடைய ரக்ஷணையின்பொருட்டுச் சொல்லப்பட்ட கவசத்தில் "விஷ்ணு ஸ்தேபூர்வத:பாது - ருத்ரோரக்ஷதுதக்ஷிணம், ப்ரஹ்மாசபச்சிமம் பாய-ஸ்கந்தோரக்ஷத்வதோத்தரம்" என்று பெறப்பட்டது. இதில் பிரஹ்ம விஷ்ணு ருத்ர ஸ்கந்தர்கள் படிக்கப்பட்டார்கள். இவர்களு க்குவேருக "ஸ்வஸ்திம்வரோதுபகவான்-பிநாகீவ்ருஷபத்வஜ:" எ ன்று மூலகாரணவஸ்துவும் அடையாளங்களோடு படிக்கப்பட்டது. இனி ஸ்காந்தாந்தர்க்கதமாகிய சூதஸம்ஹிதையில் "உமார்த்தவிக்ர ஹாசுத்தா-த்ரிணேத்ராசந்த்ரசேகரா, நீலக்ரீவாபாரகந்தா-ப்ரமோ தாதாண்டவப்ரியா, ப்ரஹ்மாவிஷ்ணுமகாதேவை - ருபாஸ்யாகுண மூர்த்திபி:" என்று அபபரமகாரணவஸ்துவை அடையாளங்களோடு வர்ணித்திருக்கின்றது. இன்னும்பலவுள.உபநிஷத்துக்களாலும், உப பிரஹ்மணங்களாலுந் தூரியசிவத்தினடையாளங்களை இனிதுவெளி ப்படுத்திளும். இந்த ரூபவியவஸ்தையாலும், "சிவமத்வைதம் சாந்தம் சதுர்த்தம்மந்யந்தே"—"காரணந்துத்யேயச்சம்பு:" என்று சுருதிவிளக்கும் நாமவியவஸ்தையாலும் எமது தூரியஸித்தாந்தம் நமதுஐயங்காருக்கு நளிர்ஜந்நியை யுண்டுபண்ணுமற்போகாது. இ வர் மூலகாரணவஸ்துவினது அடையாளங்கேட்டாரன்ருே? "ஏ கோஹவைநாராயண ஆஸீத் - நாராயணபரம்ப்ரஹ்மா-நாராயணுத்ரு த்ரோஜாயதே-நாஸ்திநாராயணஸமம் நபூதம்நபவிஷ்யதி" என்ற சுருதிகளில் இவரது மூலவஸ்துவினது கரியநிறம், கடுந்தூக்கமுத லிய வியவஸ்தையேற்படாமையால் இவற்றையுமினி நமதன்பர் தள்ளிவிடுவார்போலும். ஐயோ ஏழைமையே! இவரதுமதியை என்னென்போம்?

இனி எமது தூரியசிவத்தினுண்மையை விரிக்கின்ருேம். இவ ரது திருமேனி இவரதுசக்தியேயாம். இது அருவாயும், உருவாயும், அருவுருவாயும்விளங்கும். இவை ஞானவடிவங்களாம். அன்றி இவை சக்தனுக்கு வேருகாதனவாம். இதனுல் ஜடம்வேறு, சேதனம்வேறு என்னும்பிரஸங்கம் இங்குநிகழாது. எம்பெருமானது திருமே

னியை இதுகொண்டே சித்கநத்திருமேனியென்று வேதங்கள்படித்தன. ஜலமேஆலங்கட்டியாகத் தடித்தல்போல அடியார்களுக்கருள "நிறுத்துவனினைந்தமேனி நின்மலனருளினாலே." இது ஒத்து. சுருதியில், "பராஸ்யசக்திர் விவிதைவச்ரூயதே-ஸ்வாபாவகீ ஜ்ஞாநபலக்ரியாச" எனப்போந்த வசனத்தில் (ஸ்வாபாவகீ) என்றது பரனில்வேறாகாத அவனது தாதாத்மியத்தன்மையேயாம். அதுவே ஞானம், கிரியை என வெளிப்பட்டது. அதனையே (ஞானபலக்ரியாச) எனபது தெரிவித்தது. பலம் கிரியையிலடங்கும். இவ்வுண்மைகண்டே சிவாகமங்கள் ஞானக்கிரியாஸ்வரூபன் என்று சிவனைத் தெளிவித்தன. சேதனனைஅறிவிக்க ஞானமும், அசேதனத்தை அசைவிக்கக் கிரியையும் பிரனது சக்திகளாக வியக்தமாயின. இன்னும் விவிதம் என்பது அருவம், உருவம், அருவுருவம் என்றுகொள்ளுங் கோலங்களுக்குமாம். இதனால், வேதத்தில் "ததரூபமநாமயம்" எனவும், "அகாயமவ்ரணம்" எனவும், "அரூபமத்புதம்" எனவும் போந்த பிரயோகங்கள் ஸாமஞ்சஸமாயின. இப்படியே "யத்தேரூபம் கல்யாணதமம் தத்தேபச்யாமி" எனவும், "அங்குஷ்டமாத்ரோ ரவிதுல்யரூபஃ" எனவும், "அவ்யக்தமநந்தரூபம்" எனவும், "உமாஸஹாயம் பரமேச்வரம்" எனவும் போந்தவமைதிகளும் ஒப்பாயின. ஈண்டு அவ்யக்தம் என்றதே அருவுருவத் திருமேனியென்க. இவை நாசமடைகாத சித்கனமேனிகளென்பதுபோதரவே "ஸ்திரோபிரங்கைஃ புருரூபவுக்ரஃ" என்னுஞ்சுருதி எழுந்துகோஷிக்கின்றது. இதனால், துரியமாகிய நாலாவதுபொருள் உருவம், அருவம், உருவருவமென்று மூன்றுமாகலாம். இம்மூன்றிற் றனித்தனி யொவ்வொன்றுமாகலாம். அது உருவமென்றபோது அதனை அருவமன்றெனக்கூறுதல் கூடாது. அருவமென்றபோது உருவமன்றெனத்தாபிக்க முடியாது. உருவருவமென்றவிடத்தும் மேல்நியாயமேசிறக்கும். "செப்பியமூன்றுநந்தங்-கருமேனிகழிக்கவந்த கருணையின்வினைவுகாணே" என்றார் சைவப்பெரியாரும். இது துரியசிவத்தினது சித்கனத் திருமேனியினது இலக்கணம். இனி மாயாகனத்திருமேனிகள் பிரஹ்மவிஷ்ணு ருத்ரர்களுக்கெனவறிக. மூலப்ரக்ருதியின் ஸத்வாமிசத்தில் உருத்திரருக்கும், ரஜோமிசத்தில் பிரஹ்மாவுக்கும், தமோமிசத்தில் விஷ்ணுவுக்குந் தநுவாதிகள் பிரஸித்தம். சாஸ்திரங்களில் ஸத்வாமிசம் விஷ்ணுவுக்குக் கேட்கப்படுகின்றதெனின், அது பஹிஸ்ஸத்வமென்க. சிவனுருக்குப் பஹிஸ்தமசு பிரமாணஸித்தம். 'பிரஹ்மாவுக்கு உள்ளும்வெளியும் ராஜஸம். இவை இரும்பு - வெள்ளி பொன் விலங்குகளாம்.' எந்தவிலங்கும் நடக்கவொட்டாது தடுக்

கும் பிரதிபந்தமேயாகையால், இவற்றையுடைய மூவரும் ஒரு வரிலொருவர் கொஞ்சமுயர்ந்தவர்களேயன்றித் துரீயசிவத்தை நோக்க வோர்பொருளாகவே நில்லாரென்க. ஆகையினாற்றானன்றோ (இவர்களை)நகாரணம் என்று வேதம் பிரதிஷேதித்துவிட்டது? இவர்களைக்கடந்த பரவஸ்துவையேயன்றோ "விச்வாதிகோருத்ரோ மஹர்ஷி:" எனவும், "மாயினந்து மஹேச்வரம்" எனவும், "ய:பரஸ்ஸமஹேச்வர:" எனவும் சுருதிகளெழுந்து கோஷிக்கின்றன? விசுவத்தைக்கடந்தவனெனவும், மாயையைநடத்துபவன்-அல்லது தொழிற்படுத்துபவனெனவும், மாயைக்குவேறானவன்-அல்லது மேலானவன் எனவும் போந்தஅர்த்தபாஹுள்யத்தால் துரீயசிவன் உருத்திரன்-மஹேச்வரன் என்னும்பெயர்களாற் பிரகாசிக்குந் தனிமுதலாகிய உமாஸஹாயத்வாதி லிங்கங்களோடுகூடிய பரவஸ்துவென்பது பசுமரத்தாணியறைந்தாற்போல நாட்டப்பட்டது. கீதையில் "நிஸ்த்ரைகுண்யோ" என்று கண்ணன்கூறியபொருள் குணமூர்த்திகளைக்கடந்த துரீயசிவமேயாம். அதனையே "ஈச்வரஸ்ஸர்வபூதாநாம்" என்று மீண்டும் அவர் பிரகாசிப்பித்தனர். அவரது உபதேசத்தைக் கேட்டுத்தெளிந்த அர்ஜுனன் சாங்காறுஞ் சிவபூசை செய்திருந்தானென்பதே அவருபதேசித்தருளிய பரமதத்வஸ்வரூபமினைத்தென வியக்தமாக்கிவிட்டது. இவற்றை யினிதுநோக்குவார் துரீயதத்வம் உமாஸஹாயத்வாதி அடையாளமில்லாதது, என்று வாய்திறந்த ஐயங்காரை இனி வாய்மாளச்செய்வது வெகுசுலபமென்க. விரிக்கிற்பெருகும்.

இனி, நமதன்பர் "ஒருவேதாந்தத்தில் விதிக்கப்பட்ட பகவதுபாஸநத்துக் கபேக்ஷிதமானகுணம் மற்றொருவேதாந்தத்தில் விதிக்கப்பட்டிருக்குமாகில் அதையுஞ்சேர்த்து உபாஸிக்கவேண்டுமென்பதைக் காட்டவல்லதாம்" எனவொன்று எழுதியிருக்கின்றார். இவர் சிவ சம்பு சங்கர மஹாதேவ ஈசான ருத்ராதிநாமங்களாம்போதருஞ் சுருதிகளையெல்லாம் நாராயணரது அநுவாதங்களென்று அலறுமோரஸம்ப்ரதாயத்தைக் கையாண்டுவருபவர். நாராயணரது அநுவாத நாமங்களாகிய சிவசம்புவாதிசப்தஜாலங்கள் கோஷிக்கப்படும் வேறு வேதாந்தங்களில் பஸ்ம ருத்ராக்ஷ ஸ்ரீபஞ்சாக்ஷர சிவபூசைகள் கேட்கப்படுகையால், அவற்றை நமதன்பர் தாமநுட்டிக்கும் பகவதுபாஸகத்துக்கபேக்ஷிதமானகுணமெனக்கொண்டு ஆசரியாமல்விடுவதென்னையோ? ஊராருண்டமைக்குப் பேயாய்ப்பறப்பதினாலன்றோ கண்மயக்காற் கண்டபடியெல்லாம்பேசிக்காலக்கிளப்பிக்கொள்ளுகிறார்? பஸ்மருத்ராக்ஷங்களில் நமதன்பருக்கு எவ்வளவுத்வேஷமோ அவ்வ

ளவுக்கு அதிகமான த்வேஷம் சிவ சம்புமஹாதேவசங்கராதி நாமஸ்வபவத்திலும் அவருக்கில்லாமற்போகவில்லை. என்செய்வார் பாவம்! அச்சிவநாமங்கள் பரவஸ்துவைப்போதிப்பனவாக விளங்கலின், தமது நாராயணனைப் பரவஸ்துவாக்கிட அவர்தலையி லவர்சுமக்கமுடியாத பாரமாகி அந்தநாமங்களையேற்றி அபராதத்தை விலைகொடுத்து வாங்கினரொன்க. சிவா சம்போ மஹாதேவா சங்கரா என்று வாயாரவுச்சரித்து விபூதிருத்ராக்ஷங்களை யுடம்பெல்லாந்தரித்துவாழும் பெரும் பாக்யம் இவருக்குக்கிடைப்பது ஸாத்யமா? இவற்றை இவரதுதெய்வமாகிய நாராயணரும், அவரது அவதாரங்களாகிய இராமகிருஷ்ணாதிகளுமேயன்றோ பெரும்பாக்யங்களாகப் பெற்றுவாழ்ந்தார்கள்? இவர் ஓரிடத்தில், இவரது அபார்த்தப்ரஸங்கஸந்தர்ப்பத்தில் "ப்ரஹ்மத்தையுபாஸிக்குமவன் ஆசார்யனுகையாலே முன்னம் சிவனைத் தியானித்து, அநந்தரம் விஷ்ணுவை உபாஸிக்கிறான்" எனவும், "விஷ்ணுபக்திக்கு அங்கமாகச் சிவனுடையபக்தி ஆவசியகம்" எனவும் வாய்மணக்கப்பேசினர். அதனால், இவர் சிவத்வேஷமும், பஸ்மருத்ராக்ஷாதி சைவசிந்ஹத்வேஷமும் அற்றவராகவேண்டும். இவர் சிவனைப் பாபியென்றும், அஹங்காரி என்றும் பலவாறுவைது பாவத்திற்கு மடிகட்டிக்கொண்ட பரமபுருஷராகப்பிரவர்த்தித்தல் பிரத்யக்ஷமாகையாலும், இவரினத்தவராகிய பாஞ்சராத்திரிகளுக்குச் சிவத்வேஷம் பாலன்னமாகையாலும், இதற்குச் சாணிச்சாறு, உப்புச்சாறு, சடைச்சாறு என்றுவைது கோமயகோமூத்திரங்களையும், ஸமுத்திரகங்காஸ்நாநங்களையும் சிவஸம்பந்தமுடையவெனக்கழித்து ஏசுமதத்தவருக் கிளையசகோதரராகவெளிப்பட்டு, இவரும் ஏனையவைஷ்ணவருந் திரிதலே சான்றாகையாலும் இவரதுபிரஸங்கங்கள்யாவும் வீணிரைச்சலாகவே வெறுக்கத்தக்கவாயின. இதுநிற்க.

நமது சிற்றூத்துக்காட்டார் "நாராயணபரம்ப்ரஹ்மா" என்றது முதலிய சிலசுருதிகளையுதகரித்து, அவையே பரமகாரணவஸ்துவைப் போதிப்பனவென்று ஸந்தோஷித்தார். அவை லக்ஷ்மீபதித்வாதிலிங்கங்களைவெளிப்படுத்தாமையானும், துரீயவஸ்துவாகிய சிவபரஞ்சுடரை வியாப்பியமாகக்கூறாமையானும், எங்களது முதற்பாகத்தில் முற்றும் பூர்வபட்சமாய்விட்டமையானும் நமதன்பர் அவற்றைத் திலதர்ப்பணம்பண்ணிவிடவேண்டியதே. இப்பசுபிராயர் தமதுபாஞ்சராத்திரத்தையும், திருவாய்மொழியென்னுந் தாதபாட்டையும் அவலம்பித்து அம்மிதுணையாகவாறிழிந்தொத்து நரகாழ்வாராயிருத்தலை மறைத்து "ஸர்வாகமமயச்சிவ:"—"வ்ரதமேதத்பாசுபதம்" என்று சுருதிஸித்தமாய்விளங்கும் பாசுபதத்தையும், அவற்

றில்வேறாகாத திராவிடஸூக்திகளையுந் தூஷித்தார். இவற்றாலிவர் கண்டபலன் யாது? எமதுநாயகரவர்கள் "இராமர் சிவபூசைசெய்தது" என்னும்பத்திரிகையில் எங்காவது பாஞ்சராத்திரத்தையும், ஆழ்வார்கள்பாட்டையுந் தூஷித்திருப்பின், இவரது பாசுபதாதிநிந்தைகள் ஆவசியகமாகும். நிர்ஹேதுவாக அவைகளை இவர் தொட்டமையால், யாமும்அவர்ஜோலிக்குப்போகவேண்டிவந்தது. நமதுதோழருந் தமதுமுதற்பாசத்தி லிவ்விஷயத்தைச்செவ்வையாகச் சிங்காரித்திருக்கின்றனர். நாயை எங்கடித்தாலும் அது காலைத்தூக்குவதுபோல் நமதுபாஞ்சராத்திரிகள் எந்தப்பிரமேயம்வந்தாலும் பாசுபததூஷணம், தேவாரதூஷணம், சிவலிங்கதூஷணமுதலியவைகளி லிறங்கியழுவது அவரதியற்கையென்க. அவை எமக்கு வெகுதுச்சமென்க. இதுநிற்க.

இப்பண்டிதசிரோமணியார் ஸங்கர்ஷணஅநிருத்த பிரத்யும்நர்களைப் பிரஸ்தாபித்து, இவருள்ஸங்கர்ஷணரிடத்திலிருந்து உருத்திரன்பிறந்தானென்றும், ருத்ரன் ஆதிசேஷனிடத்திலிருந்துண்டானென்றும் பிதற்றி, இவ்வாறு விஷ்ணுபுராணங்கூறுகின்றது எனவும், இது கூர்மபுராணத்திலும் படிதமெனவும் அஸங்காத்மவாதத்திலாழ்ந்தார். சுருதிவிசாரத்தின்முன்னில்லாது சோர்ந்துகீழே வீழ்ந்து திரும்பிப்பாராதோடியஇவர் பாஞ்சராத்திரஸித்தமான பரிபாஷைகளிலிறங்கித் தமதுஅவைதிகத்தைஸ்தாபிப்பது நரியானது ஸிம்ஹத்தையெதிர்த்துப்போராடவெழுந்ததற்கேயொப்பாகியது. சிவோத்கர்ஷங்கூறுவதானால் கூர்மபுராணம் அப்பிரமாணமும், விஷ்ணூத்கர்ஷங்கூறுவதானால் அக்கூர்மம் பிரமாணமும் நமதன்பருக்காயிடுதல் கலிதர்மவிசேஷமென்க. சிவோத்கர்ஷங்கூறுங் கூர்மத்தில் விஷ்ணூத்கர்ஷம் கல்பிதமென்பது சொல்லவும்வேண்டுமோ? கல்பிதமாயினும், அகல்பிதமாயினும் நமதன்பர் வேதாவிருத்தமாகநாட்டித் தமதுஸித்தாந்தத்தைக் காத்துக்கொள்வாராக. இஷ்டவிகாதம்பண்ணிக்கொள்ளாமல் தப்புதஸ்தாவேசுகளைச் சிருட்டித்துவிடுத்து வைதிகர்ஸபையில் அவர்முகமிறங்கிப்போவதும் அவரதுதவமென்க. சிவபுராணங்களை அப்பிரமாணங்களென்று கொள்ளுமிவரது விஷ்ணுபுராணத்தை வேதவிரோதமாயின், யாம் அடியோடேதள்ளிவிடுவோமென்று அறியாது இவர் அதன்பேரைப் பிரஸ்தாபித்தது மதியீனமேயாம்.

இதுகாறுஞ்செய்தவிசாரத்தால் சுருதிஸித்தமான பரத்துவஸ்தாபகம் ஸ்ரீஉமாகாந்தனிடத்திற்றானே இனிதுஸித்தித்தமை

யால், நமது ஐயங்கார் தீக்ஷிதரவர்கள்மேலேற்றிய கோடிகள் நாடி வாங்கிப்போயின. இதனால், நமதன்பர் கல்பிதம்-தாமசம் என்றொதுக்கிய பாரதம்-பாகவதம்-கூர்மம்-சைவமுதலியயாவும் ஸாமஞ்சஸமேயாயின. இன்னும் பிரஹ்மவித்யோபநிஷத்து எழுந்து "த்ர்யக்ஷரஸ்யஸிவஸ்யது" என்று சிவனே பரமாத்மாவாதலை ஸ்தாபித்துவிட்டது. அதனமிசமாக "அகாரஸ்யசரீரந்து-வ்யாக்யாதம்ப்ரஹ்மவாதிபி:" என்று பிரஹ்மாவையும், "விஷ்ணுச்சபகவான்தேவ-உகார:பரிகீர்த்தித:" என்று விஷ்ணுவையும், "ஈச்வர:பரமோதேவோ-மகார:பரிகீர்த்தித:" என்று உருத்திரமூர்த்தியையும் பிரகாசப்படுத்தியது. அக்ஷரத்ரயாத்மகராகிய ஓங்காரவாச்யர் சிவன் என்று இனிது பரிஷ்கரித்தமையால், பிரஹ்மசிவசப்தங்கள் பரியாயவாசகமெனல் ஸித்தாந்தமாயிற்று. இதனால், சிவனே ஸர்வரக்ஷகரென்னும் தீக்ஷிதரது சைவஸித்தாந்தம் நமதன்பரோ றெடுத்துப்பார்க்கவும் முடியாமல் "இயல்பென்றுந்திரியாமல்" நிலைபெற்றிருக்கும் ஸத்தியமே வெளிப்பட்டது. இது நிற்க.

நமது ஐயங்கார் யோகயாஜ்ஞ்யவல்க்யம் சைவர்களுக்கு நமனும் என்று பிரஸ்தாபித்தார். அதனை நிறுத்தவேண்டி அதில் துரீய சிவனைப்பிரஸ்தாபித்து, அநந்தரம் நாராயணனே மோக்ஷகர்த்தா என்று கூறியிருப்பதாக எழுதினார். இதனால், சிவனாரது துரீயத்வம் அழிந்தவிதம் யாதோ? துரீயசிவனது அமிசமாதலாலன்றோ விஷ்ணுவுக்கு ஆண்டு மகிமைகற்பிக்கப்பட்டிருக்கின்றாம். அமிசத்தை வியந்ததுகொண்டே அமிசிக்குக் கௌரவங்குறைந்ததாக நம்மவர்கண்டுபிடித்தது விந்தையே. துரீயசிவனுக்குமேலிட்டவர் நாராயணர் என்று ஆண்டுப்படிக்கப்படின், அவரது ஆசைக்குக் கேடுண்டாகாது. அங்ஙனமவர் கண்டுகூறாமையால் அவரது ஆசை நெருப்பினீர்த்துளியாயிற்று.

இவரதுபேராசை இத்தோடேதொலையாமல் "யம்விஷ்ணுரிந்தரச்சம்புச்ச, ப்ரஹ்மாலோகபிதாமஹ:, ஸ்துவந்திவிவிதைஸ்ஸ்தோத்தோத்ரை:, தேவதேவம்மஹேச்வரம், தமர்ச்சயந்தியேசச்வத், தார்க்காண்யதிதாரந்திதே" என்னும் பாரதவசனத்தில் (மஹேசுவரம்) என்னுஞ்சப்தம் பரவாசுதேவனையே தெரிவிக்கின்றது எனவும்; இதற்குச் சிவபரமாக அர்த்தங்கூறுவது சுருதிவிலக்காகுமெனவும் பிரலாபித்தனர். உருத்திரருக்குமேலிட்டவர் மஹேசுவரரோயன்றி அவருக்குக்கீழிட்டவரன்று. விஷ்ணுவோ, உருத்திரருக்குக் கீழிட்டவர். விஷ்ணுவை உருத்திரருக்கு மேலாக்கவேண்டி

மஹேசுவரப்பெயரைத்திருடி அவர்தலையிலேற்றினால், அவர் எங்ஙனஞ்சுமப்பர்? துரீயவிஷ்ணு ஜடமாகையால், வருந்தாமல் சுமக்குஞ் சுமைதாங்கியாக நமதன்பர் தேடிவைத்தார்போலும். ஜடமாகிய வோர்சரீரம் இரத்னமுடியைத்தாங்குதலால் என்னபயன்? சைதன்யமிருந்தாலன்றோ மகிமை? துரீயசைதன்யமாகிய சித்கனஸ்வரூபமே சிவமாகையால், அதற்கே மஹேசுவரத்திருநாமம் உரியதென்க. "தமீச்வராணாம்பரமம் மஹேச்வரம்" என்று சுவேதாசுவதரம் சிவபரஞ்சுடரையேயன்றோ துதித்திருக்கின்றது? ஈசுவரன்-பரமேசுவரன்-மஹேசுவரன்-ஸர்வேசுவரன்-விச்வேசுவரன் என்னுந் திருநாமங்கள் விஷ்ணுவுக்கு இரவலேயன்றிச் சொந்தமாகமாட்டா. விஷ்ணுவுக்கேயன்றிப் பிரஹ்மேந்திரர்களுக்குஞ் சிலசமயங்களில் அவை இரவலாகக் கொடுக்கப்படும். சொந்தக்காரர் அவைகளைத் தரிக்கவருங்காலங்களில் இரவலாளிகள் தூரவிலகவேண்டியதே. துரீயமூர்த்தியினது சாரூப்பியம்பெற்றுத் தவத்திற்சிறந்த உருத்திரமூர்த்திக்குமாத்திரம் அவை இரவலாகா. அவற்றை அவருக்குச் சொந்தமாகவே துரீயமூர்த்தி கொடுத்தருளினார். இந்தவுண்மையை நோக்கினோர் பிரகிருதவிசாரத்தில் குணருத்ரருக்கு மஹேசுவரநாமஞ் சூட்டினுஞ் சூட்டலாம். அவருக்கு அவை ஆகந்துகமேயன்றி ஸஹஜமல்லவாகையால், அவற்றை, ஸஹஜமாகவுடைய பரம்பொருளின் ஸந்நிதியில் அவருக்குச் சூட்டிக்கொண்டாடப் பின்னிடைகின்றனர். துரீயமூர்த்திக்கு அவை எபபோதும் ரூடியும், யோகமுமாம். குணருத்ரருக்குத் துரீமூர்த்திஸந்நிதியில் ரூடியும், பிரஹ்மவிஷ்ணுக்களோடுசேர்கையில் ரூடியும், யோகமுமாம். குணருத்ரருக்குந் துரீயருத்ரருக்குமுள்ள வொருமை திருக்கோயில்களில் வீற்றிருக்கும் சிவமூர்த்தத்திற்கும், சிவசைதன்யத்திற்குமுள்ள ஸம்பந்தம்போல்வதாம். இவ்வாறு விசாரிக்கும்புத்திமான்கள் துரீயமூர்த்தியாகவெளிப்பட்டமஹேசுவரனை ஜடவிஷ்ணுவென்று ஸ்தாபிக்கவந்த ஐயங்காருக்குத் தக்கபகுமானங் கொடாமற்போகார்கள். குணமூர்த்திகள்மூவரும் பசுக்கள். இம்மூவரையுங்கடந்த நாலாவதுபொருள் சிவம், இதுவேபதி. முதன்மூவரும் சிருட்டி திதி சங்காரங்களென்னுங் கிருத்தியங்களை ஜடங்களினிடத்திற்றானே செய்யத்தக்கவர்கள். தேகேந்திரியாதிகளையே படைத்தும், நிறுவியும், கலைத்தும் அவர்கள் தொழில்புரிவர். ஆத்மாக்கள் நித்தியமாகையால், அவற்றைப்படைத்தல்-காத்தல்-அழித்தல் என்னுங்காரியங்களைச் செய்யார்கள். ஆத்மாக்களுக்கு மறைத்தல், அருளல் என்னுங் கிருத்யங்களை நாலாவதுபொருளாகிய சிவமே மஹேசுவரசதாசிவரூபங்களாக வெளிப்

பட்டுச் செய்யாகிற்கும். நாலாவதுமூர்த்திக்குமேல் எத்தனைமூர்த்திகள் கேட்கப்படினும், அம்மூர்த்திகள்யாவரும் அந்த நாலாவதுமூர்த்தியினது சித்கராம்சங்களேயாம். துரீயமூர்த்தியாக அவருள் யாரைக்கூறுவதும் ஸாமஞ்சஸமேயாம். இப்பரமசிவம் பிந்துநாதாதிகளாகிய அருவத்திருமேனிகளையு மெய்துதலால், இவையுந் துரீயமேயாம். இவ்வுமைதிகணிலைபெறவே துரீயவஸ்துவை உமாஸஹாயத்வாதி ரூபமாகவும், நாதபிந்துவாதி அரூபமாகவும் சுருதிகள் கோஷிக்கின்றன. இவற்றைத்தேர்ந்திடாமல் தேகாதி ஜடங்களைப்பாலிக்கும் கர்த்தாவாகிய விஷ்ணுவாகியபசுவை ஆத்மநாதராகிய மஹேசுவரராக்கிட நமதன்பர்வருந்தியது மலடுகறந்து மாழ்கியதற்கே ஒப்பாயிற்று. சிவபெருமானே மஹேசுவரர் என்பதைப் பாரதப்பிரமாணத்தைக்கொண்டே இன்னுஞ் சாதிப்பாம்.

> "ஈசாநச்சேதநஃகர்த்தா-புருஷ:காரணம்சிவ:
> விஷ்ணும்ப்ரஹ்மாசஸூர்ய:-சக்ரோதேவாச்சஸாந்வயா:
> ஸ்ருஜ்யதேக்ரஸ்யதேசைவ-தமோபூதமிதம்யதா
> அப்ரஜ்ஞாதம்ஜகத்ஸர்வம்-ததாஹ்யேகோமஹேச்வர:"

என்னும் இந்தவசனம் "ப்ரத்யக்ஜநதிஷ்டதிசஞ்சுகோசாந்தகாலே - ஏகஏவருத்ரோ நத்விதியாயதஸ்தே - நப்ரஹ்மாநவிஷ்ணுர் நஸூர்யோ நாக்னிசந்த்ரதாரகா:" என்னுஞ் சுருதியினுபப்ரஹ்மணமாகப் பிரகாசிக்கின்றது. இதில் சிவபரஞ்சுடரை ஈசானர்-சேதனர்-கர்த்தர்-புருஷர்-காரணர்-சிவம்-மஹேசுவரர் என்று விதந்திருக்கின்றது. நமதன்பர் இதிலுந் தமதுஜடத்தைநுழைக்கப் பாடுபடுவார்போலும். இதிற்போந்த ஒவ்வொருசப்தமும் ஜடவிஷ்ணுவைத் துரத்தியடிப்பினும் சேதனம் என்னுஞ்சப்தம் அதனைக்கீழே தள்ளிக் கழுத்தை யறுத்துவிட்டது. இவைகளேயன்றி எங்களது முதற்பாகத்தில் பாரதம் கேவலம் சைவபரமென்பது இனிது பிரகாசம்பண்ணப்பட்டிருக்கின்றது. இவற்றைத் தெளிந்திடாத மூடர்களே ஐயங்காரது அல்பபோதத்தால் மயங்கி மடிவார்கள். இனி இவ்வைஷ்ணவப்பிஞ்சு இந்தவசனங்கள் கற்பிதங்களென்று கதிகாண்பதே விஷ்ணுவினது ஜடதுரீயம் பிழைத்தற்காதாரமாகும். இவரதுஜடம் இவரை எந்தவழியில்விடுமோ? அந்த ஜடத்தை இவர் எந்தவழியில்விடுவாரோ? அறிந்திலம். இதுநிற்க.

இந்தப்புத்திமான் விஷ்ணுதர்மம், விஷ்வக்ஸேநஸம்ஹிதை முதலிய நூலத்தைக்கொண்டுவந்து உபநிஷத்துக்களாகிற எமது வாதூலத்தின்முன்காட்டித் தமதுஜடதுரீயத்தைச் சாதிக்கப்புகுந்

தார். அவர்காட்டியவை வேதமூலகத்வம்பெறாமையாலும், வேதத தை விரோதிக்கின்றமையாலும், "ஸலிலாநீவபாடபம்" என மஹோபநிஷத்து எழுந்து விஷ்ணுவுக்குத் தேடிவைத்த கதியையே யடைந்து நிர்மூலமாயின.

இனி இவர் சிவாகமங்களை வேதவிரோதமெனத் தூஷித்தும், விஷ்ணுவானவர் சிவனுரைத சக்தியென்பதைத்தூஷித்தும், சிவன் பிரமனது தலையைக்கிள்ளி ஹத்திக்குள்ளாயினானெனத்தூஷித்தும், சிவன் பஸ்மாசுரனுக்கு வரங்கொடுத்து ஓடிப்போயினானெனத்தூஷித்தும், திரிபுரஸம்ஹாரகாலத்திலும், விஷபாநஸமயத்திலும் சிவன்விஷ்ணுவால் ரக்ஷிக்கப்பட்டானென்று தூஷித்தும் ஸந்தோஷித்தார். இவற்றுள் சிவாகமதூஷணத்தை வெட்டியெறிந்து எமதுதோழர் தமதுமுதற்பாகத்தில் இனிதுபரிகரித்துவிட்டனர். அதற்குமேல் கோடியுண்டானால் வெளிவரட்டும்பார்ப்போம். ஏனையதூஷணங்களில் சிலவற்றிற்கு யாமே மேலிடங்களில் ஸமாதானங் கூறியிருக்கின்றோம். எமதுநாயகரவர்களது நூல்களைப்பார்த்துத் தெளிந்தவர்களுக்கு நமதன்பரதுஆபாசங்கள் வெகுதுச்சமென்க. அவற்றை மீண்டுவெருவித்துரைத்தலால் நூல்விரியும். நமதன்பர் சிவனாரது ஹத்திநிவர்த்திக்குக் காரணமுரைத்தவிடத்தில் "நாராயணனைப் பிச்சையிரந்து அவருடைய திருவருளால்பெருகிய இரத்தப பெருக்காலே கையில்வைத்திருந்த கபாலநிறைந்து உடைப்பட்டுப் போனதை அம்பிகைக்கரனழுதவண்ணம் மத்ஸ்யபுராணத்தில் காணலாகுமே" என்று அழுதிருக்கிறார். அம்பிகைக்கு அரன்சொன்னார் என வெழுதவிசையாது அரன் அழுதார் எனப் பிருந்தைக்காக அழுதானடித்தொண்டரழுததை யாம் என்னென்று விதப்பது? நமதன்பர் நாராயணரைப்பிரஸ்தாபித்து "அவருடைய திருவருளால்பெருகிய இரத்தப்பெருக்காலே (சிவன்) கையில் வைத்திருந்த கபாலநிறைந்து" எனவெழுதியது "ஆதிநெடுமாலுதிரமத்தனையுங் கைத்தலத்திற் - பாதிதனிலேநிறையப் பண்ணினரார்?" எனவும் "காதியாயிரமால்களைப்பிழிந்து மாங்கனிபோற்-கோதிலீசினுங் கடல்கவிழ்ந்தனைய செங்குருதி - பாதியாயினுநிரம்புறக்கபாலபாணியனுய், மாதுபாதியனவையிடைப்புகுந்தனன்வடுகன" எனவும்போந்த சைவத்திருவாளரதுவாக்குகளை ஸத்தியமென நாட்டியதாயிற்று. நானுமறியேன் அவளும் பொய்சொல்லாள் என்பதற்கிசையவேயன்றோ நமதன்பரதுவாக்கிலும் உண்மைபிறந்து நிலைபெறுகியது? இவைகளை இனியேனுஞ் சித்தஸமாதானத்துடன் யோசித்துப் பூர்வபட்சியார் அடங்குவாராக. அன்றியும், ஏகாநாதர் சிலுவையிலறையு

ண்டு தமது இரத்தத்தைச்சிந்தி உலகத்தவரது பாவத்தைப்போக்கி ஞர் என்று அவரது தாசர்கள்கூறும் அருமையையே நமது நாராய ணதாசராகிய ஐயங்காரது ஸமாதானமுஞ் சேர்ந்திருப்பதாக யாட ஸந்தோஷித்தோம். இதுநிற்க.

இவர் "மூவரில் ஒருவராகிய சிவன் ஜீவாத்மாவென்றும், கர் மபரவசனென்றும், ஸ்ரீராமசந்திரனுடைய பக்தனென்றும் வழியே நடந்து அன்பர்கைஎழுத்துக் கொடுத்தனராகையாலே அதைப்பற் றி நமக்கு ஸந்தோஷமேயாம். அவர் கையெழுத்துக்கொடுத்திருட் பது அவர் வரைந்துவிட்ட "வைகுண்டமையங்காரை வாய்மாளப் பண்ணுதல்" என்னும் பத்திரிகையால் வெளியாகும்" என்று எழுதிச் செருக்கினர். "வைகுண்டம் ஐயங்காரை வாய்மாளப் பண்ணுதல்" என்னும்பத்திரிகை எமதுநாயகர் வெளியிட்டதன்று. அதனை வெ ளியிட்டவர் எமதுதோழர் சுப்பிரமணியமுதலியார். அவ்வைகுண் டம் ஐயங்காரென்பவர் நமது சீநிவாஸாசாரியாரது திருக்குமாரர் அவரை வாய்மாளப்பண்ணிய பத்திரிகையில் மூவரிலொருவராகிய சிவனை ஜீவாத்மாவென்று எம்மவர்அங்கீகரித்துக்கொண்டதாக ந தன்பர் பிரஸ்தாபித்தாரன்றே? அதனால், அவருக்குத் தேறியலாப ம் யாது? குணருத்ரனை ஜீவனென்று ஒப்பியஎம்மவர் தாசரதியைப் பரமாத்மாவாக வொப்பின், அவர் ஸந்தோஷிக்கலாம். அவனை யும் சீவனாகவே படித்திருக்கின்றார். சீவனாகிய விஷ்ணுவினது அ வதாரம் சீவனாவதில் தட்டில்லையாகையால், இராமன் சீவனென் பதே ஸித்தம். உருத்திரனும், விஷ்ணுவும், இராமரும் சீவர்களா யினமையால், ஒருசீவன் மற்றொருசீவனை வணங்குதல் பாவனையா யிற்று. குணருத்ரர் இராமனைவணங்கியதுகொண்டே இராமன் பிர ஹ்மமாயிடமாட்டான். உருத்திரனும் இராமனிற்றாழ்ந்துவிடமாட் டான். திரிமூர்த்திகளுங் கற்பங்கடோறும் மாறி மாறி யொருவரி டத்திலொருவர் பிறந்திடுதல் பராசரபுராணத்தில் கேட்கப்படுகின் றது. விஷ்ணுவானவர் உருத்திரனிடத்து மாத்திரமேயன்றிப் பிர ஹ்மாவினிடத்திலும் பிறந்தியங்குதலை வைதிகநூல்கள் முழங்குகின் றன. இவற்றைத் தெளியாது விஷ்ணுவே பிரஹ்மம், இராமனே பிரஹ்மம், என்று பூர்வபட்சிகள் புலம்புவது புதஜநஸம்மதமாகு மோ? பாரதத்தில், "தத்ரவிஷ்ணுர்மஹாதேவ - ஸ்தத்ராக்னிர்வா யுநாஸஹ, நக்ஷயுஸ்ஸர்வஸைவதே - பிதாமஹமுபாஸதே" என்று சொல்லப்பட்ட ஸந்தர்ப்பத்தில் சிவனும், விஷ்ணுவும், ஏனையோ ரும் பிரஹ்மதேவனை யுபாஸித்துக்கொண்டிருந்த வைபவம் கேட்கப் படுகின்றது. இதனால், விஷ்ணுவைக்காட்டிலும் பிரஹ்மாவை அதி

சராக நமதன்பர் ஒப்புவாரா? இந்நியாயமே இராமனை உருத்திரர் வணங்கினர் என்றவிடத்திலுங் கொண்டொதுங்குவாராக. திரிமூர்த்திகளுஞ் சீவர்க்களேயானாலும், அவருள் பிரஹ்மா தாழ்ந்தவர். அவரில் விஷ்ணு உயர்ந்தவர். அவரினும் உருத்திரருயர்ந்தவர். இம்மூவரினும் பரமாத்மாவாகிய பரசிவமுயர்ந்தது. ஆகையால், இராமதாபினியில் இராமனைக் குணருத்ரர் வணங்கியது ஓரவசரமென்றே தெளியவேண்டியது. குணருத்ரருக்கே இராம ரதிகாரகாமெனின், அவர் துரீயமூர்த்தியாகிய சிவபரஞ்சுடரின்முன்னரோர் பொருளாகவும் படிக்கப்படுதல் யாங்ஙனம்? துரீயசிவனது நிலைமை ஆகாசத்தாமனை என்று கூபமண்டூகமொத்து ஐயங்கார் பிரஸ்தாபித்துவந்தது அடியோடே சாய்ந்துவிட்டமையாலும், உபநிஷத் பிரமாணங்களால் துரீயத்வம் சிவனுருக்கு நிலைபெறுயினமையாலும், இராமதாபினியிற்போந்த இராமஸேவ்யத்வம் துரீயசிவத்தைப் பாதியாமையாலும், நமதன்பர் பிரஸ்தாபித்த வைகுண்டம் ஐயங்கார் வாய்மாண்டேபோயினமையாலும் பூர்வபட்சியார் (நமக்குஸந்தோஷமே) என்றதுகெட்டு அவருக்குத் துக்கமே பிராப்தமாயிற்று.

இனி, நமதன்பர் "சைவபுராணங்கள் அப்பிரமாணங்கள்" என்று பிரஸ்தாபித்தார். அவ்வளவேயன்றி எப்படி அப்பிரமாணமென்பதை நிரூபியாதுவிட்டார். சைவபுராணங்கள் அப்பிரமாணங்களாயின், புராணங்கள் பதினெட்டு என்பதழிந்து, அவை எட்டேயெனச் சிறந்திடும். அன்றி "அஷ்டாதசபுராணாநாம்-கர்த்தாஸத்யவதீஸுதஃ" என்பதும் அழிந்துவிடும், சுருதிநிஷ்டமாகிய சிவபாரம்யத்தையே சிவபுராணங்கள் பிரதிபாதித்தலால் அவை தாமஸமும், அப்பிரமாணமுமாகமாட்டா. சுருதியில், விஷ்ணுவை (நகாரணம்) என்று ஒதுக்கியிருத்தல்போலச் சிவபுராணங்களிலும் ஒதுக்கியிருக்கின்றது. இவ்வுண்மைதோராத சிவபுராணநிந்தையிலிழிந்தது நமதன்பர் கீழ்மையுங்காவம் [illegible]

இவர் இராமதாபிந்யுபநிஷத்து, இராமரஹஸ்யோபநிஷத்து, ஸீதோபநிஷத்து முதலியவை இராமனே பரப்ரஹ்மம் என்று தெரிவிக்கின்றனவெனவும், இராமநாமத்துக்கு ஜப்தாக்கள் சிவன் அகஸ்தியர் முதலாயினோரெனவும், இராமநாமம் பரமபாவநகரமெனவும், இராமாயணம் விஷ்ணுமகிமையே சொல்வதெனவும், இராமர் அவ்விஷ்ணுவினது அவதாரமெனவும், ஆகையால் இராமர் சிவனைப்பூசித்தாரெனல் அஸங்கதமெனவும் ஓர் அழுக்காரம்பித்தார். இவர்காட்டிய உபநிஷத்துக்களில், "ராமப்ராம்ஸௌந்தர்ய, ஸீமா

ம்ஸோமாவதம்ஸகாம், பாசாங்குசதநுர்ப்பாணா, தர்ாம்த்யாயேத்த்ரிலோசநாம், த்யாயந்நேவம்வர்ணலட்சம், ஜபத்பரணதத்பர:, பில்வபத்ரை:பலை:புஷ்பை, ஸதிலாஜ்யை:பங்கஜைர்ஹுநேத்" என்ற பகுதியில் சந்திரசேகரனும், முக்கண்மூர்த்தியுமாகிய முதல்வனே இராமனென்று இனிது படிக்கப்பட்டிருக்கின்றது. நாராயணரது அவதாரமாக இராமாயணத்திற்படிக்கப்பட்ட இராமரிடத்தில் "ராமம்த்ரிணேத்ரம் ஸோமார்த்ததாரிணம் சூலிநம்பரம், பஸ்மோத்தூளிதஸர்வாங்கம்-கபர்த்திநமுபாஸ்மஹே" என்று மூன்றுகண்ணும், உமையொருகூறும், சூலதாரணமும், திருநீற்றெழிலும், திருச்சடைப்பொலிவுமுடைய சிவபிரானது இராமநாமத்தை ஆரோபணஞ்செய்தே உபநிஷத்துகள் கொண்டாடினவென்க. அவ்வுபநிஷத்துக்களில் துரியசிவனாரது மகிமையே சிறந்திடுதலால் நமதன்பர் எவ்வளவு சிறப்பித்துக்கூறினும் தமது தாசரதிக்கு அத்துரியமூர்த்தியைக் கடந்தொளிருந்தன்மை ஸித்தியாமற்போயிற்று. எங்களது முதற்பாகத்தில் இத்தாசரதியைக்குறித்த பலவிஷயங்களும் வந்துவிட்டமையாலும், நமதன்பர் கூறினதையேகூறுகின்றமையாலும், இராமாயணம் விஷ்ணுபாரம்யம்கூறுவதுகொண்டே சிவபாரம்யம் கெடுமென்பது மூடர் கூற்றேயாகின்றமையாலும், அவ்விராமாயணம் சிவபரத்வம்கூறியதை எமதுதோழர் இனிதுபிரகாசம்பண்ணியிருத்தலாலும் நமதன்பரது துராவலம்பநம் கேவலம் நிஸ்ப்ருஜனமென்க. விரிக்கிற்பெருகும்.

இம்மட்டோ இவர் வாமனபுராணம்-பவிஷ்யோத்தரபுராணம்-மார்க்கண்டேயபுராணம்-கூர்மபுராணம்-சைவபுராணம் - பாகவதபுராணம் என்பவைகளால் சிவாபகர்ஷமும், விஷ்ணூத்கர்ஷமும் ஸித்திப்பதாக வோர்கூச்சல்போட்டிருக்கின்றார். எத்தனைபுராணங்களைத்தேடினும் வேதாவிரோதமாயிருந்தான்மாத்திரமே சிஷ்டர்கள் ஒப்புவார்கள். இவர்கண்டெடுத்த வசனங்களில் சிலகல்பிதங்களும், சில அர்த்தவர்தங்களுமாம். இவர் பிரஸ்தாபித்த புராணங்களிற்றானே விஷ்ணுவினது அபகர்ஷமும், சிவோத்கர்ஷமும் பஹுளமாய்க் கிடக்கின்றமையால், பூர்வபட்சியினது பிரஸங்கம் நிரஸ்தமென்க. இம்மஹாபண்டிதர் இவர்காட்டியபிரமாணங்களில் பவிஷ்யோத்தரகண்டம் என்பதற்குப் பவிஷ்யோத்தரபுராணம் என்று எழுதித் தடுமாறிப்போயினர். என்செய்வார்பாவம்! இனியேனும் "ஸாங்க்யம்யோக:பாஞ்சராத்ரம், வேதா: பாசுபதம்ததா, ஜ்ஞாநாங்யேதாநிபஞ்சைவ, ஜ்ஞேயச்சைகோமஹேச்வர:" என்னும் பாத்மவசனப்படி எல்லாஞானங்களாலும் அடையத்தக்க பரம்பொ

ருள் சிவபரஞ்சுடராயிடுதலோர்ந்து, எந்தப்பிரமாணத்தாலுஞ் சிவோபகர்ஷமுண்டாகமாட்டாதெனத் தெளிந்து நமதன்பர் குணப்படுவாராக. விரிக்கிற்பெருகும்.

இனி, யாம் ஒன்றுசொல்லுகிறோம். "ஸர்வேதேவா:பசுதாமவாபு:" என்று சுருதியெழுந்து தேவர்க்களையெல்லாம் பசுக்கள் என்று நிர்ணயித்தது. "ஸ்வயம்தஸ்மாத்பசுபதிஸ் ஸம்பபூவ" என்று எழுந்து அத்தேவர்களாகிய பசுக்களுக்குப் பதியாதலெக்கிச் சிவபெருமானைப் பசுபதியென்று நிச்சயித்தது அன்றியும்; "ஸ்வதச்சிவ: பசுபதிஸ்ஸாக்ஷீ" என்று அவரே ஸர்வஸாக்ஷி என்பதைப் பிரகாசப்படுத்தியது. இம்மட்டோ, "பரமாத்மாதேவதா பசுபதி:, ஸஜ்யோதி:பசுபதி:, ஸ்வயம்பசுபதி: புமான்" என மீண்டுமெழுந்து பரமாத்மாவாகியஅவரே பசுபதி என விசதப்படுத்தியது. இவ்வுண்மைகளை யூன்றிவிசாரியாத நமதன்பர் பசுபதி என்பது சிவனுக்கு இடுகுறிநாமமா? காரணநாமமா? எனத் தொடுத்து, இடுகுறிநாமமாகில் இயக்கனைப் புண்யஜநன் என்பதுபோலாம் எனவும், காரணப்பெயராகில் சுரபதி - நரபதி என்னுமாபோலாம் எனவும் விளக்கி, இந்திராதிகளுக்குச் சுரத்வாதிளுடன் பதித்வமுங் கூடவேயிருப்பதுபோல் சிவனிடத்திலும் பசுத்வமும் பதித்வமுங்கூடியிருக்கலாமன்றோ என்று வீண்பிரஸங்கக்கடையை விரித்தார். இவரது பேய்மதியை யாமென்னென்று விதப்பேம்? பெட்டையாகிய நாராயணனுக்குப் புருஷநாமம் ரூடியாயினாற்போலும், அழிந்து நிர்மூலமாகுந் தேவர்களுக்கும், ஸ்ரீகாந்தனுக்கும் அமரர், அச்சுதன் என்னுநாமங்கள் ரூடியாயினாற்போலும் நமதன்பர் பசுபதிநாமத்தையும் சிவனுக்கு ரூடியாகவொப்பினார். தமக்குப் பின்வருங்கதிதெரியாமல் இவர்தேடிக்கொண்ட யக்ஷன் தன்னுடைய ஸ்தானத்தில் நாராயணனையுஞ் சேர்த்துக்கொண்டுநின்றதை இனியேனும் ஐயங்காரறிந்தடங்குவாராக. இனி எம்பெருமானுக்குரிய பசுபதித்வம் சுரபதித்வம் - நரபதித்வம் போல்வதன்றாம். சுருதியில் "காதபதிம் மேதபதிம் ருத்ரம்ஜலாஷபேஷஜம்" என்றும், "ஆவோராஜாநமத்வரஸ்யருத்ரம்" என்றுங் கூறப்படுஞ் சிவனாது யஜ்ஞபதித்வம் போலவே தோன்றும். சிவன் யஜ்ஞபதியாகுகையில் அவர் யஜ்ஞங்களுக்குப் பதியாதலேயன்றி அந்தயஜ்ஞமுமாதல் யாங்ஙனம்? அப்படியே சிவன் பசுபதியாகுகையில், அவர் பசுக்களுக்குப் பதியாதலேயன்றி அந்தப்பசுக்களிலுமொன்று ஆகவேண்டியது ஆவசியகமோ? காதபதி-மேதபதி-யஜ்ஞபதி என்னும் பிரயோகங்களைத்தெளிந்து நமது ஐயங்கார் இனியேனும் ஊளையிடாதொழிவாராக. இம்மட்

டோ, நவநிதிகளுக்கும் பதியாதலால் நிதிபதி எனவும், சதுர்த்தசபுவனங்களுக்கும் பதியாதலால் புவனபதி எனவும், பல தாரைகளுக்கும் பதியாதலால் தாராபதி எனவும் வழங்கும்வழக்குகள் பலவுளவாகையால், அவற்றோடுதானே பசுபதி என்னும்வழக்குஞ் சேர்ந்து நிலைபெறும். நமதன்பர் தமதுபட்சமாகிய சுரபதி-நரபதி-மிருகபதி என்பவைகளோடு கோபதி என்பதையும் அமைத்தாரன்றோ? கோபதி என்னுங்கால் அந்தப்பதித்வம் கோவினிடத்தன்றி அதனைப்பரிபாலிக்குந் தலைவனிடத்துந் தாண்டிச்செல்லுதலால், எடுத்தகட்சியை நமதன்பர் வியபிசரிக்கச் செய்துவிட்டனர். இவரது புத்திநுட்ப மிவ்வளவினதாக, இவருமொருவாதியாகப் புறப்பட்டது ஆச்சரியமேயாம். சுருதியில், "அச்வேப்யோச்வபதிப்யச்சவோநமோநம:" என்றும், "ச்வப்யச்வபதிப்யச்சவோநமோநம:" என்றுங் கூறப்படுதலை நமதன்பர் பார்த்துங்கேட்டுமிரார். இதில், குதிரைகளாயும், குதிரைகளுக்கு எஜமானனாயும், நாய்களாயும், நாய்களுக்கு எஜமானனாயும் விளங்குந்தன்மை பரனிடத்திற்கேட்கப்படுகின்றது. அசுவபதி-சுவபதி என்னும் பிரயோகங்களில் பதி என்னுஞ்சொல்லுக்கு எஜமானத்வமேயன்றிக் குதிரையும், நாயும் பொருளாயிடுதல் அஸம்பாவிதம். இந்தச்சுருதிகளினுடைய தாத்பரியம் குதிரைகளிடத்தும், நாய்களிடத்தும், அவைகளைப்போஷிக்கும் எஜமானர்களிடத்தும் பரன் அந்தர்யாமி என்பதேயாம். இன்னும் "குலாலேப்ய: கர்மாரேப்யச்சவோநமோநம:" என்றுங் கூறப்பட்டிருக்கின்றது. இதற்குக் குலாலர்களையதிஷ்டித்தும், கம்மாளர்களையதிஷ்டித்துங் காரியகோடிகளையுண்டுபண்ணுகின்றவர் பரமாத்மா என்பதே பொருளாம். இந்தவியவஸ்தையால் அசுவபதி சுவபதி என்பனவும் சிவனாரது பசுபதித்வத்தைச் சாதித்துப் பூர்வபட்சியினது அகங்காரத்தைப்புடைத்துப் புடைபெயரச்செய்தனவாயின. மேல் யாமுதகரித்த சுருதிகளில் "பரமாத்மாபசுபதி:" என்று படிக்கப்பட்டமையாலும், "பசுபதிஸ்ஸாக்ஷீ, ஸஜ்யோதி: பசுபதி:" என்னும் வசனங்களால் அதுவேபொருள் வியக்தமாயினமையாலும் சுரபதிநரபதிகளைப்போலப் பசுபதியையுங்கொள்க என்றுஅழுத ஐயங்காரதுவாதம் அழுமூஞ்சிவாதமாயிற்று.

சிவனே பரமாத்மா என்பதை இன்னும் விரிக்கின்றோம். 'த்மாநம் பரமாத்மாநம்-அந்தராத்மாநமேவச, ஜ்ஞாத்வாத்ரிவிதமாத்மாநம்-பரமாத்மாநமாச்ரயேத், அந்தராத்மா பவேத்ப்ரஹ்மா-பரமாத்மா மஹேச்வர:, ஸர்வேஷாமேவ பூதாநாம் விஷ்ணுராத்மாஸநாதந:" என்னுஞ் சுருதியால் பரமாத்மாவையே ஆச்ரயிக்கவேண்

டியதெனவும், அந்தப்பரமாத்மா மஹேசுவரர் எனவும், பிரஹ்மாவும் விஷ்ணுவும் அந்தராத்மாவும், ஆத்மாவுமாகின்றானெனவும், பெறப்படுகின்றது. அன்றியும், "கார்யம்விஷ்ணு:க்ரியாப்ரஹ்மா - காரணந்துமஹேச்வர:" என்னுஞ்சுருதியில் சிவனே காரணவஸ்துவென்பது ஸித்திக்கின்றது. முடிவில் "அத்வைதம்பரமாநந்தம் - சிவம்யாதிதுகேவலம், அதிஷ்டாநம்ஸமஸ்தஸ்ய - ஜகதஸ்ஸத்யசித்கநம்" என்று துரீயவஸ்துவினதுஸ்வரூபம் இனிது வெளியாகின்றது. குணருத்ரருக்கும் துரீயருத்ரருக்கும் நாமரூபவொற்றுமைகேட்கப்படுதலால் குணருத்ரரிடத்தில் பிரஹ்மத்வாரோபணம் சண்டுப்படுதமாயிற்றென்க. இதனைக் குணருத்ரபரமாகவே கொண்டாலோவெனின், அதுவும் குணமேயாம். பிரஹ்மேந்திரர்களைநோக்க விஷ்ணுவுக்குக் காரணத்வங்கேட்கப்படுதல்போல விஷ்ணுபிரஹ்மேந்திரர்களைநோக்கக் குணருத்ரருக்குக் காரணத்வம் கேட்கப்படுதல் அமைவுடைத்தே. தேகத்தைநோக்க இந்திரியமும், இந்திரியத்தைநோக்கப் பிராணனும், பிராணனைநோக்கக் கரணமும், கரணத்தைநோக்கச் சீவனும், சீவர்க்களிலே புல் - பூடு - புழு - மரம் - பட்சி - மிருகங்களைநோக்க மனுஷ்யர்களும், மனுஷ்யர்களைநோக்கத் தேவர்களும், தேவர்க்களில் இந்திரனைநோக்கப் பிரஹ்மாவும், பிரஹ்மாவைநோக்க விஷ்ணுவும், விஷ்ணுவை நோக்க உருத்திரனுங் காரணர்களாக வுபசரிக்கப்படுதல் வேதஸம்மதம். இந்தநியாயத்தாலும் உருத்திரரே காரணவஸ்துவென்று எழுந்துகூறியசுருதி ஸத்தியநிலைத்தது. மேலேகூறிப்போந்த பாசபசுக்களாகிய பொருள்களில் உருத்திரன் பதியானசிவத்தை ஸமீபித்துத் தந்மயமானநிட்டையினின்று அதனோடுவேறறக்கலந்து சிவோஹம்பெறுதலால், அவ்வுருத்திரனையே காரணம் என்று சுருதி கூறியது ஸஹஜமாயிற்று. நாராயணர்முதலியோருஞ் சிவோஹம் பெறினும் அவர்க்கு அந்தர்ப்பாவனையேயன்றிப் பாஹ்யத்தில் தேகம் சிவரூபமானதில்லை. உருத்திரருக்கு உள்ளும்வெளியும் சிவரூபப்பிரகாசம் கேட்கப்படுதலால், அவ்வுருத்திரனையே பரமகாரணர் என்று வேதந்துதித்தலும், உயிர்களவரைவழிபட்டு மோக்ஷமடைதலும் ஸர்வஸம்ப்ரதிபந்நமாயிற்று. இந்தவிசாரத்தால் விஷ்ணு பரமாத்மா என்று ஏற்படாமல் ஜீவாத்மாவென்றே வெளிப்பட்டமையால், அவரைப்பசுவென்றும், சிவனைப்பதி என்றும் பிரஸ்தாபிக்குஞ் சைவர்களதுபட்சமே வேறுன்றிப் பொலிவெய்தியது. இவ்வுண்மை போதரவே நமது நாயகரவர்கள் "ப்ரஹ்மவிஷ்ணுஸுரேந்த்ராத்யா:- பசவ:பரிகீர்த்திதா:" என்னும் ஆதித்யபுராணவசனத்தாலும், "ஸர்

வேதேவா:பசுதாமவாபு:-ஸ்வயம்தஸ்மாத்பசுபதிஸஸம்பபூவ'' *என்னுஞ்சுருதியாலும் விஷ்ணுவாதிதேவர்களைப் பசுக்களென்றும், எமது சிவபரஞ்சுடரைப் பசுபதி என்றும் பிரகாசம்பண்ணி ஸித்தாந்தப்படுத்தினார்கள். "அரன்பெருமை-இன்னும்பலகோடி யில்லையோ யாமிருந்து, சொன்னபொழுதே தொலையுமோ'' என்று இரட்டையர்கள் சிவனாரதுபெருமையின் முடிவுகாணமாட்டாது இளைத்தவாறு யாமும் இம்மட்டி லுபரதியடைந்தாம். வேதமுஞ் சொல்லிச்சொல்லி யிளைத்து, "யதோவாசோநிவர்த்தந்தே'' என்று உபசாந்தியடைந்துவிட்டது. அளவிறந்தசுருதிகள் பிரஹ்மம்-பசுபதி-பரமாத்மா-பரம்-சிவம்-சம்பு என்னுந் திவ்யநாமங்களாற் கொண்டாடிமகிழும் ஏமதருட்பெருஞ்செல்வத்தை நமதன்பர்துவேஷித்தது நிஸ்புருஷமெனக. விரிக்கிற்பெருகும்.

இந்தாஹஸ்யங்களைக் கண்டுதெளிந்தபேர் (பசுவென்பதற்கு ஜீவன் என்று பொருளுண்டாகாது, பிரமன் திருமால் முதலினோர் நாலுகால்களையுடைய ஜந்துக்களல்லவாகையால், அவர்கள் பசுக்களாகார், விஷ்ணுவாதிகள் ஸர்வஜ்ஞராகையால் [illegible],வர் பசுவாகமாகமாட்டார்) என்று பெருமைபேசிக்கொண்ட ஐயங்காரது புத்தியைமெச்சி யாதுபஹுமானஞ் செய்வார்களோ தெரியாது. யாம் வஞ்சனையின்றி எம்மாற்கூடியதை எண்டுபகரிக்கின்றோம். சுருதியில் "ஸர்வேதேவா:பசுதாமவாபு:'' என்றுகூறியதன் பொருடான் என்னை? தேவர்க்கள் பசுக்கள் என்பதேயன்றோ? அத்தேவர்கள் இவரென்பதும் போதரவேயன்றோ "ப்ரஹ்மவிஷ்ணுஸுரேந்த்ராத்யா:-பசவ:பரிகீர்த்திதா:'' என்று ஆதித்யபுராணம் இனிதுவிளக்கியது! இவற்றைநேரேகண்டும் நமதன்பரது உள்ளத்திருக்கு அகலாதது அவரது பாவமேயாம். சுருதி "மோஹாந்தஜாதந்தி ஸுரேந்த்ரமுக்யா:'' எனவெழுந்து இந்திரன்முதலியதேவர்கள் மோகத்தால் சிவனையறியார்கள் எனவும், "யோப்ரஹ்மண: பஞ்சமவக்த்ரஹந்தா'' எனவெழுந்து பிரமனது ஐந்தாவதுதலையைச் சிவனார்சேதித்து மோகத்தையழித்தார் எனவும், "விஷ்ணும்பபந்தோருபாசேந வீர:'' எனவெழுந்து சிவபெருமான் விஷ்ணுவை நாகபாசத்தாற்கட்டியுநுட்டி அவரது அகந்தையை அறுத்தார் எனவும், "ஸுரேசம்புஸ்தீக்ருத்ய மந்மதம் யமஞ்ச'' எனவெழுந்து சுரேசனையும், மந்மதனையும், யமனையும் சிவன் அழித்து அவர்களதுபாசத்தைத் தகித்தாரெனவும் வெளிப்படுத்தியது. அன்றியும், அது "ப்ரஹ்மாங்கவிஷ்ணுஹரிருத்ரமுக்யா:'' எனவெழுந்து திரிமூர்த்திகளுக்குஞ் சிவனே உத்திஸ்தானமாயுள்ளவர் எனப் பிரகாசப்படுத்தியது. இவற்றை

பரியாலோசிப்பவர்கள் ஸர்வதேவர்களும் பசுக்கள் என்றுகூறவென் பின்னிடுவார்கள்? இவற்றை நமதன்பரான் மறைக்கமுடியுமோ? அல்லது மறுக்கத்தான்முடியுமோ? இவர் (தேவர்:) என்பதற்குப் பூதகணங்கள்-பிரமதகணங்கள் என்று நவநவமாகப் பிரஸங்கித்து வந்த பித்தவாசகங்கள் இனிப் பண்டிதரவைக்கண் என்னுமோ? மேலுதகரித்த சுருதிகளால் உருத்திரன்-விஷ்ணு-பிரஹ்மா-இந்திரன்-மந்மதன்-இயமன் முதலிய ஸர்வதேவர்களும் பெறப்பட்டமையால், இன்னோர் பசுக்களாதலிற் றவிர்ந்திலர். இவர்களைத் தன் னாணைவழிச்செலுத்தினவராகப் பெறப்படுஞ் சிவனார் பசுபதியாதலிலுந் தவிர்ந்திலர். தேவர்கள் பசுக்கள் என்று சுருதியும், அந்தப் பசுக்களாகியதேவர்கள் பிரஹ்மா-விஷ்ணு-இந்திரன் முதலாயினரொன்று ஆதித்யபுராணமுங் கூறியவுண்மையையே யன்றோ எமது நாயகரவர்கள் தெரிவித்தனர்? அதற்கு நமதன்பர் குறும்பியது தகுதியோ? சுருதியிற்றானே விஷ்ணுபசு என்பதற்கு ஈண்டு யாம் பிரமாணங்காட்டுகிறோம். நிராலம்போபநிஷத்து "ப்ரஹ்மவிஷ்ணவீசாநேந்த்ராதீநாம் நாமரூபத்வாரா ஸ்தூலோஹமித்யத்யாஸவசாஜ்ஜீவ:" என்று கூறுகின்றது. இதற்கு நமதன்பர்செய்வது யாதோ? பிரஹ்ம விஷ்ணு ருத்ரேந்திரர்களை நகாரணம் எனவும், ஜீவர்கள் எனவும் சுருதிகள் கோஷிக்கையால், ஐயங்காரதுவாதம் தொய்யலாடிவிட்டது. அதர்வசிகையும், நிராலம்பமும் பிரஹ்மவிஷ்ணுருத்ரர்களோடு இந்திரனையுஞ்சேர்த்து நிஷேதித்தமையால், அன்னோர் ஓரினத்தவரேயாயினர். நமதன்பர் இந்திரனை ஜீவனென்று ஒப்பியிருக்கின்றாராகையால், அவனோடு ஸமானராக நகாரணம் என்று ஓதுக்கப்பெற்றும், அவனைப்போலவே ஜீவர்களென்று படிக்கப் பெற்றும் பிரதிஷேதிக்கப்பட்ட விஷ்ணுவாதிதேவர்களது யோக்யதையை எண்ணியாமறிவித்த லவசியமாயிற்று. இவ்வுண்மைதெரிந்தபேர் பூர்வபக்ஷியினதுபோதத்தை இனி எங்ஙனே மதிப்பார்கள்?

இவர் பசுவென்பது ஜீவவாசகமாகாதென்று புலம்பினராகையால், அதனையும்விசாரிப்பாம். ஜாபால்யுபநிஷத்தில் "கோஜீவ க:பசு: க ஈசாந:" என்று பிறந்தகேள்விகளுக்கு "அஹங்காராவிஷ்டஸம்ஸாரீ ஜீவஸ்ஸஏவ பசு:, ஸர்வஜ்ஞ பஞ்சக்ருத்யஸம்பந்நஸ் ஸர்வேச்வர ஈச:பசுபதி:, கேபசவ இதிபுநஸ்ஸப்ரமுவாச, ஜீவா: பசவஉக்தா:, தத்பதித்வாத்பசுபதிஸ்ஸபுநஸ்தமஹோவாச, கதம் ஜீவா: பசவ இதி, ஸதமுவாச யதாத்ருணாசிநோ விவேகஹீநா: பராதீநா: க்ருஷ்யாதிகர்மஸு நியுக்தாஸ் ஸகலது:கஸ்

ஹாஸ் ஸ்வஸ்வாமிபத்யமாநா கவாதய:பசவ:, யதாதத்ஸ்வாமிந இவ ஸர்வஜ்ஞ ஈச: பசுபதி:" என்னும் விடைகளுண்டாயின. அவை திகப்பழமாகிய ஐயங்காருக்கு இவ்வுண்மைதெரியாதது அதிசயமோ? ஸம்ஸாரியாகிய ஜீவனே பசு எனவும், ஜீவன்றான் பசுவென்று சொல்லப்படும் எனவும், கோவானது அதனது எஜமானனது அதீனப்பட்டு அஸ்வதந்திரமுதலியதர்மங்களை யடைந்திருப்பதுபோல ஜீவனும் பரனது அதீனப்பட்டு அஸ்வதந்திரமுதலியதர்மங்களை யடைந்திருத்தலால் இரண்டும் பசு என்று வெளிப்பட்டனவெனவும், ஜீவர்களாகியபசுக்களுக்குப் பதி பசுபதிப்பெயரினர் எனவும், அவர் ஸர்வஜ்ஞரும், பஞ்சகிருத்தியஸம்பந்நரும், ஸர்வேசுவரரும், ஈசரும், பசுபதியும் ஆவாரெனவும் வெளிப்படும்வேதார்த்தங்களை இனியேனும் வைதிகர்பாற்சென்று தெளிந்து குணப்படுவாராக. இந்தச் சுருதியில் "பஞ்சக்ருத்யஸம்பந்ந:" என்று சிவனுரது பஞ்சக்ருத்யம் படிக்கப்பட்டிருக்கின்றது. பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும் இதனை நிறுத்துகின்றது. சிலமூடர்கள் பஞ்சகருத்யம் ஆகமபரிபாஷை என்றும், வேதத்தில் மூன்றுக்ருத்யமே படிதமெனவும் புலம்புவதுண்டாகையால், அவரோடுசேர்ந்து ஐயங்காருங்கெடாவண்ணம் யாம் எடுத்துக்காட்டியது உபகாரமேயாயிற்று. "சைவம்வேதமயம் யஜேத்" என்னும்வசனம் ஸத்தியமென்பதை இனியேனும் பூர்வபட்சிகள் யோசிக்கவேண்டியது. இம்மட்டோ, நாதபிந்தூபநிஷத்தில், "ருத்ரம் பசூநாஞ்சபதிம்தது" என்று படிக்கப்பட்டிருக்கின்றது. தேவ்யுபநிஷத்தில் "விச்வரூபா: பசவோ[illegible]தந்தி" என்று கூறப்பட்டிருக்கின்றது. பஸ்மஜாபாலத்தில், "பசுபாசவிமோசக: பசவச்சாமாநவாந்தம்" என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வுபநிஷத்திற்றானே "ருஷயச்சாம்பவா: பாசுபதா மஹாசைவா வேதாவதம்ஸம் சைவம் பஞ்சாக்ஷரம்ஜபம் தஸ்தாரகம்-ப்ரணவம்மோதமாநாஸ்திஷ்டந்தி" எனவும், "தக்ஷிணாமூர்த்திசிவிஷ்ணு: க்ருத்வைவமூர்த்தஞ்சவிமுபாஸ்தே" எனவும் பிரகாசம்பண்ணப்பட்டிருக்கின்றது. அதர்வசிரசில், "வ்ரதமேதத்பாசுபதம் பசுபாசவிமோக்ஷாய" என்று பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. சுவேதாசுவதரத்தில் "ஜ்ஞாத்வாதேவம் முச்யதேஸர்வபாசை:" என்று ஸ்மரிக்கப்பட்டிருக்கின்றது. தக்ஷிணாமூர்த்யுபநிஷத்தில், "பாசேநபத்தம் த்வைதபயாதுரம்" என்று உச்சரிக்கப்பட்டிருக்கின்றது. தாரகோபநிஷத்தில், "தேகபாசாபஹாரீஸ்யாத்-ஜ்ஞாத்வாதேவம்ஸதாசிவம்" என்று உணர்த்தப்பட்டிருக்கின்றது. ஸ்கந்தோபநிஷத்தில், "பாசபத்தஸ்ததாஜீவ:, பாசமுக்தஸ்ஸதாசிவ:" என்று பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கி

றது. இந்தப் பிரவசனத்தால் பதி-பசு-பாச பதார்த்தத்ரயப்பிரஸ
ங்கம் வைதிகமோதல் ஸித்தமாயிற்று. பசுசப்தப் பிரயோகத்தில் விச்
வரூப-மாநவ-ருஷய-சாம்பவ-பாசுபத-மஹாசைவ-விஷ்ணுவாதி
பதங்கள் படிக்கப்பட்டமையால், "ஸர்வேதேவா:பசுதர்மவாபு: - ஏ
தாவந்தோவை பசவோ, த்விபாதச்சதுஷ்பாதச்ச" என்னுஞ்சுருதி
கள் பசுக்கள் ஜீவர்க்களென்பதைத் தெரிவிக்கும் முக்யாதாரங்க
ளாகினிலைத்தன. "பிரமன் - திருமால் முதலினோர் நாலுகல்களையு
டைய ஜந்துக்களல்லவாகையால் அவர்கள் பசுக்களாகார். விஷ்ணு
ஸர்வஜ்ஞராகையால் அவர் பசுவாகமாட்டார்" என்று ஐயங்கா
அழுதனவும் அழிந்துபோயின. இதுநிற்க.

நீமதன்பர் விஷ்ணுவை ஸர்வஜ்ஞரென்று பிரஸ்தாபிந்தா
ன்றோ? அதனையுங் கொஞ்சம்யோசிப்போம்.

(அவர்ஸர்வஜ்ஞரானது)

மாயாசிங்கை வெட்டுண்டபோது கண்டுபுரண்டழுத மாட்சி
யினாலோ?

மாயாஜநகன் வெட்டுண்டதைக் கண்டுபுலம்பியசிறைக்குமா
ப்பிள்ளையாயினதாலோ?

சீதையை அபகரித்துக்கொண்டுபோனவன் இன்னானென்று
தெரியாமல் குரங்குகள்காலைக் கட்டிக்கொண்டுகுமுங்கிய சோமக
ளாயினதாலோ?

வாலிசுக்ரீவர்களது அடையாளந்தெரியாமல் வாடிவதங்கிய
வள்ளலாயினதாலோ?

நம்மைப்போல் பெண்டிழந்துவருந்துஞ் சின்னகுரங்குக்கா
இப்பெரியகுரங்கை நாமிப்போது மறைந்திருந்துமாட்டினால்,
இது நம்மைப் பின்பு வேடனாகிவந்துமாட்டுமே என்றுதெளியாத
மேதாவியாயினதாலோ?

வேடன் சரந்தொடுத்தது தெரியாதிருந்து கொம்பில்வெ
ந்து பிணமாகவுறைந்துகிடக்கும் விசேடத்தினாலோ?

அர்ஜுனன் சுபத்திரையை அடித்துக்கொண்டு போன
போது அவன் இன்னானென்றறியாமல் அவன்மேற் போர்க்கெ
ழுந்த*அண்ணனாயினதாலோ?

ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் சண்டைபட்டுத் தம்மில்கலி
மெலிந்த அவதாரபாகங்களாயினாலோ

* பலராமர்.

மீன்-ஆமை முதலிய ஜன்மங்களெடுத்துழலத்தக்க பிருகுசா பம் பின்னேவருமென்றுன்னாமல் அவரது பத்தினியைக்கொன்ற பராக்ரமசாலி யாயினதாலோ?

தமதுசக்கரத்தை விழுங்கியபூதம் இன்னதுஎன்று தெரியா மல் அதனைப்பெறுமாறு சிவபூதங்களின் முன்னின்றுகெஞ்சிக் கோ ணங்கிக்கூத்தாடி யாயினதாலோ?

தான் மலைப்பாம்பாகப்பிறக்க நேரிடுமேயென்று அறியாமல பொய்பேசியிழிந்த புருஷரத்நமாயினதாலோ?

வீரபத்திரமூர்த்தி தம்மை நாகபாசத்தாற் கட்டியுருட்டுவா ரென்றறியாமல் தக்ஷயாகத்திற்குத் தலைவராயினதாலோ?

பிறன்பெண்டை விழைதல் பிழையென்றுன்னாமல் ஜலந்த ரன்பெண்டைக் களவிற்புணர்ந்த காமுகனாயினதாலோ?

அமிர்தத்தைநாடிய நம்மை விஷந்தோன்றிவெதுப்பி நமது வெளுத்தவுடலைக் கறுப்பாக்கிவிடுமேயென்று கருதாத கார்வண் ணனாயினதாலோ?

இத்தகைய ஸர்வஜ்ஞாதிசயங்களுக்கு இருப்பிடமாயுள்ள வர் விஷ்ணுவென்பதை யாம் ஆட்சேபிக்கமாட்டோம். இவரது தெய்வத்தின்கதியை யோசித்துப்பாராமல் எமது அப்பனாகிய ஒப் பில்லாமணியைப் பிரஸ்தாபித்து, "பின்விளைவறியாமல் விருகா சுரனுக்குவரமளித்துத் திண்டாடியபடியாலும், புருஷோத்தமன் கொண்ட பெண்கோலத்தைக்கண்டு நாரியென்று மயங்கினபடியா லும், பிருகுமுதலிய முனிவர்களுடையமுன்பாகத் திகம்பரனாய்ச் சென்று அம்முனிவர்களுடைய சாபத்தினால் குறியிழந்தபடியாலும், சுடலைதேடி நடனம்புரிந்தமையாலும்" என்று தூஷித்தாராகையால், எமது கையிலேந்தியஇறகை கண்டுகொஞ்சம் யாம் சலியாதோ டச்செயதோம். இவர்புலம்பிய சிவதூஷணங்களுக்குச் சிவபாரம் யப்பிரதரிசினி, சைவசூளாமணி முதலியநூல்களில் பரிகாரந்தேடி யிருத்தலால், யாம் இம்மட்டி லுபரதியடைந்தாம். இனிமேலும் இவற்றை நமதன்பர்யோசித்துச் சிவநிந்தையிலிறங்காமல் விஷ்ணு ப்ரஹ்மேந்த்ராதி ஸர்வசேதநபதித்வம் சிவனிடத்தி னிலைபெற் றிருப்பதுணர்ந்து, பசுபதியாகிய அப்பரஞ்சுடர்ப்பிரானைப் பணிந்து அஞ்ஞானபசுவாகிய தமதுபாசநிவர்த்தியைத்தேடி ஸுகிபாரா... விரிக்கிற்பெருகும்.

இனி நமதன்பர் எஜுர்வேதம் ஆறுவதுகாண்டத்தில "ருத் ரோவைக்ரூர: ஸோஸ்யத்விதிஸோப்ரவீத் வரம்வ்ருணே அஹமேவ

ப்ஸ்ரீநாமதிபதிரஸாநீதி தஸ்மாத்ருத்ர:பசூநாமதிபதி: தாம் ருத்ரோ வாஸ்ருஜத்ஸதிஸ்ர: புரோபித்வைதேப்யோ லோகேப்யோ ஸுரா ந் ப்ராணுதத" என்னும்வாக்கியம் "சிவன் கொடூரமுள்ளவராகை யாலே வேதியர்களாகிய திரிபுரர்களை அஞ்சாமல் கொல்லத்துணிந்த வரொன்று தேவதைகள் அவ்வசுரர்களைக்கொல்லும்படி சிவனுக்கு உத்தரவுசெய்தார்கள். சிவனார் பாவம்பாராமல் அந்தப்படுகொலை யைத் தாம்செய்வதாகவொப்பி அந்தத்திரிபுரஸம்ஹாரத்திற்குப் பிர திப்ரயோஜநமாகத் தான்பசுக்களுக்குப் பதியாகும்படி வரமளிக்க வேண்டுமென்று தேவதைகள்பால் வேண்டிக்கொண்டார். அவர் கள் அந்தப்படி சிவனுக்குவரமளித்தார்கள். அப்பால் சிவன் முப் புரங்களையுஞ்சுட்டெரித்துத் தேவதாவரப்பிரஸாதத்தினாலே பசுபதி என்னும் பட்டப்பெயர்பெற்றார்" என்று தெரிவிக்கிறதெனவும், மூதற்காண்டத்தில் "ஆகுஸ்தேருத்ரபசுஸ்தம்ஜுஷஸ்வைஷ்த ருத்ரபாகஸ்ஸஹஸ்வஸ்ராம்பிகயாதம்ஜுஷஸ்வ" என்னும் வாக் கியம் உருத்ரனுக்குரித்தானபசு ஆகுவென்றும், அதைச் சகோத ரிபோல் இதஞ்செய்யுமவளாகிய அம்பிகையோடு ருத்ரா நீஅடைய க்கடவாயென்று தெரிவிக்கிறதெனவும்விரித்து, "இதனால் சிவன் முப்புரங்களையழித்ததற்குக் கைக்கூலியாகத் தேவதைகளிடத்திலி ருந்து வரத்தின்மூலமாய்ச் சம்பாதித்தபசு ஆகுவென்பது ஸ்பஷ்ட மாகிறதன்றோ? ஆகுவென்பது சிவனார் மூத்தகுமாரர் ஏறிச் சவாரி செய்யும் வாகனமேயாம்" என்று பரிகாசஞ்செய்தார். இவரது திருமகனார் வைகுண்டம்ஜயங்கார் வாய்மாண்டுபோனதுபோல் இவர் சீர்மாண்டுபோகச் சிலவீண்டுக்கூறுவாம்.

இவர் எழுதிக்கொண்ட வாக்கியத்தின்றலைப்பிலுள்ள "ருத் ரோவைக்ரூர:" என்பதும், பின்னர்ப்போந்த "தஸ்மாத்ருத்ர:பசூ நாமதிபதி:" என்பதும் திரிபுரஸம்ஹாரவிஷயமாக எழுந்தவசனங்க ளாகா. இடையிற்போந்த வசனங்களுக்கு சுமதன்பர் தப்பர்த்தஞ் செய்து தமொழியதற்கு அவற்றைஆதாரமாகப் பொருத்திக்கொண் டார். அவரொழுதியவுரையில், (வேதியர்களாகிய திரிபுரர்களை அஞ் சாமல் கொல்லத்துணிந்தவரொன்று தேவதைகள் அவ்வசுரர்களைக் கொல்லும்படிச் சிவனுக்கு உத்தரவுசெய்தார்கள். சிவனார் பாவம் பாராமல் அந்தப்படுகொலையைத் தாம்செய்வதாகவொப்பினார். அவ ர்களைக் கூலிகேட்டார். தேவதாப்பிரஸாதத்தினாலே பசுபதி என் னும் பட்டப்பெயர்பெற்றார்)எனப்போந்த பிரயோகங்களுக்கு அவ ர்தேடிய சுருதியில் ஆதாரமாய்நின்ற பதங்கள்யாவை? இஷ்டவிகா தம் பண்ணிக்கொள்ளாமல் மூலத்திலில்லாத அபார்த்தங்களெழுது

வது அல்பருக்கேஅடுக்கும். இனி அதனுண்மையை யோசிப்பாம். அதில், "அஹமேவபசூநாமதிபதி:" என்று சிவன் தேவர்கள்முன்பு கூறினதாகப்பேசப்படுகின்றது. அந்தத்தேவர்கள் விஷ்ணுமுதலானவர்களே. விஷ்ணுவை அத்தேவகூட்டத்தினின்றுந் தப்பவைக்க ஐயங்காரால்முடியாது. ஏனெனின், சிவபெருமான் இரதிகரானபோது அவரதுஹஸ்தத்தில் ஜடமாகிய பாணரூபந்தாங்கிநின்றவர் அவ்விஷ்ணுவே. இப்படியே பிரஹ்மாமுதலாயினோரும் அவருக்கு ஸாரதிமுதலான ஏவலாளராக அமைந்தார்கள். இப்பெருந்தேவர்களுக்கு முன்னின்று "நானேபசுபதி" என்று சிவன் பிரஸ்தாபித்தலையால், விஷ்ணுமுதலிய பசுக்களுக்கே அவர் பதியாயினரென்பது ஸித்தம். அதில்,"வரம்வ்ரணே" என்று படிக்கப்பட்டமையால், அஹமேவபசூநாமதிபதி: என்பது சிவனார்கேட்ட வரமாகவன்றோ பெறப்படுகிறதெனின், அங்ஙனமாகாது. சிவனார் வரங்கேட்டதுண்டாயின், அவருக்கு அவ்வரங்கொடுக்கத்தக்கவர்கள அவரினுயர்ந்தவராகவேண்டும். அவருள் விஷ்ணுவை யோசிக்கின், அவர் சிவன்கையில் அம்பாகச்சமைந்தார். அம்பானது எய்பவனது பரிசம்பெறுதபோது அசையவும் யோக்யதையற்றுக்கிடக்கும். அசைவித்தாலே அசையும். இதனால் சிவனாரதுஸந்நிதியில் விஷ்ணுவினது அளவு ஏற்பட்டது. பிரஹ்மாவோ எனின், அவர் சிவனுக்கு ஸாரதியாயினர். சாரதியினதுயோக்யதை எஜமானனுடைய ஆஜ்ஞையைப் பின்செல்லத்தக்கது. இதனால், சிவஸந்நிதியில் பிரஹ்மா அஸ்வதந்திரரென்பது ஸித்தித்தது. பெரியதேவர்களுக்கே இவ்வாறுமுடிந்தால் நாரியாகிய சேஷனையும், குதிரைகளா[illegible]தங்களையும், இரதமாகிய பூமியையும், இரதாங்கங்களாகிய ஏனையதேவர்களையும் சிவஸந்நிதியில் ஓர்பொருளாகவும் மதித்தல்கூடுமோ? இவர்கள்யாவரும் இரதிகரும், நியாயமகருமாகிய சிவனாரது ஆணையில்அடங்கினவரேயாயினர். இந்த முடிவால் பிரபுவாகியபரமேசுவரர் ப்ருத்யர்களாகிய விஷ்ணுமுதலாயினோரை வரங்கேட்டாரென்பது அஸங்கதமேயாம். இனி "வரம்வ்ரணே" என்புதற்குக் கதியென்னையெனின், அதனையோசிப்பாம். சுருதி "ப்ருதிவ்யோபவ, ஆபச்சர்வ, அக்னேருத்ரோ, வாயுர்ப்பீம, ஆகாசஸ்யமஹாதேவ, சூர்யஸ்யோக்ர:, சந்த்ரஸ்யஸோம ஆத்மாந:பசுபதி:" என்றுகூறுகின்றது. இதில் சிவனாரதுஅஷ்டமூர்த்தங்கள் கேட்கப்படுகின்றன. இவ்வஷ்ட மூர்த்தத்துள் ஒவ்வொருதநுவுக்குஞ் சைதந்யங்கூறிவந்து ஆத்மாவைப்பிரஸ்தாபிக்கையில், அதனைத் தநுவாகவுடையசைதந்யம் பசுபதி என்று

படிக்கப்படுகின்றது. ஆத்மாவுக்கு ஆத்மாவாயுள்ளது பரமாத்மா என்னும் பெயர்பெறும். கண்டு ஆத்மாவைப் பசு என்றுகொண் டே பரமாத்மைவப் பசுபதி என்று வேதம்படித்தது. இதனால், பசு தி என்பது சிவனாரது சேஷனபதித்வத்தையே வியக்தமாக்கியது. ஜீவா: பசவ உக்தா:" எனவும், "தத்பதித்வாத் பசுபதி:" எனவும் பாந்தசுருதிகளை முன்பே உதகரித்திருக்கின்றோம். இவற்றால், சிவ னருக்குப் பசுபதித்வம் ஆகந்துகமெனலழிந்து ஸஹஜமென்பதே வத்தியமாயிற்று. இந்தச்சுருதிகளோடுதானே "அஹமேவபசூநா திபதி:" என்னுஞ் சுருதியுஞ்சேர்ந்து நிலைபெறும். இவற்றோடு ாண்டும் மூரணாது. இங்ஙனமாக, நமதன்பர் பசுபதித்வம் சிவனு க்கு வந்தேறியென்று சாதிக்கவகைதேடியது என்னமதி? தேவர்க நக்கு "ஸர்வேதேவா:பசுதாமவாப:" என்று வேதம்பேசிட்டமை ாலும், அத்தேவர்களைப்பார்த்து "அஹமேவபசூநாமதிபதி:" என் சிவனார்கூறினமையாலும், விஷ்ணுவாதிகளை "அத்யாஸவசாஞ்சி :" என்று சுருதி நிச்சயித்தமையாலும் இவற்றிற்கு விரோதமாக ான்றைச்சாதித்தல் கூடாது. ஆகையால், தேவர்களிடமிருந் பசுபதித்வமாகியவரத்தைச் சிவனார்வேண்டினார் என்பதற்குப் ன்வருமாறு பொருள்கோடலே அமைவுடைத்து. பசுக்கள் பாச த்தர்களாகையால் அவர்கள் தங்களுக்குப்பதியாகிய சிவனைமறந் தற்போதத்தால் தங்களையே பதிகளெனவகங்கரித்துச் சிக்ஷை கைக்ஷகளையடைதல் அநுபவஸித்தம். இரணியன் - சூரன் - தக்ஷன் - ந்திரன் - பிரஹ்மா - விஷ்ணு முதலினோரே இதற்குஸாட்சிகள். வர்களில் இரணியன்-சூரன்-தக்ஷன் என்பவர்களது கதைகளை யா ருமறிவார்கள். இனி இந்திராதிகள் அகங்கரித்தகதைகளே தெரி த்தக்கவை. இந்திராதிகளுடைய அகந்தையைச் சிவன் ஒரு யக்ஷ ரூபந்தாங்கிவந்து அடக்கியகதை சூதஸம்ஹிதையிற் கேட்கப்படுகின் றது. அதிற்றானே திருமாலகம்பாவத்தை நந்திபிரான்தவிர்த்தருளி யகதை படிக்கப்பட்டிருக்கின்றது. பிரஹ்மவிஷ்ணுக்கள் நானே பரம் நானேபரம் என்று சண்டையிட்டுச் சிவனாரது அடிமுடிதேடி யலுத்ததும், பிரஹ்மாவினது அகந்தை அவரது சிரசுகண்டிக்கப்பட் டதாலழிந்ததும் வேதபடிதமாயுள்ளன. இன்னனபலவுள. இவ் ரோர் ஜீவர்களேயாகையால் இவர்களுக்கு இவ்வகந்தை அடிக்கடிப் பாசிபோல்வந்துமூடுவது ஸஹஜம். அவ்வப்போது இவர்களைச் சி க்ஷிப்பதும், இரக்ஷிப்பதும் சிவனாரதருளியற்கை. இது நிற்க.

திரிபுரர்களால் தேவர்கள் பெருந்துன்பமடைந்து சிவனை அடைக்கலம்புகுந்து எங்களைரக்ஷிக்கவேண்டுமென்று இரந்தார்கள்.

அதனைக்கேட்டசிவபிரான் திருவுள்ளமிரங்கி உங்களை நீங்கள் பதி என்று கொண்டிருப்பதை எமக்கு அர்ப்பணம்பண்ணி விடுவீர்களானால், நாம் திரிபுரஸம்ஹாரம்பண்ணி உங்களைரக்ஷிக்கின்றோம் என்றுகூறினார். அதாவது நீவிர் பசுக்களென்பதை மறந்து நம்மையே பதிகளெனத் தனித்தனி மயங்கியிருக்கின்றீர்க ளாகையால், அந்தத்தீயவெண்ணத்தை மாற்றிவிடுங்கள் என்பதாம். அப்படி அவர்கள்செய்வதனால் அவர்களது சொந்தமாகிய பசுத்வத்தைத் தெளிந்து சிவனாரதுசொந்தமாகிய பதித்வத்தை அவருக்களித்தவராகத் தட்டில்லை. இவ்வுண்மைதேர்ந்தவர்கள் சிவனார்கேட்டவர மீனத்தென்று அறியாமற்போகார். சிவபெருமான் இதமாகப்பேசித் தேவர்களைக் குணப்படுத்தினமையால், வரத்தைக்கோரினா ரென்று படிக்கப்பட்டது. ஒருபிதா தனதுபிள்ளையைப்பார்த்து நானே னதுபிதா என்னும்வரத்தை எனக்குக்கொடு என்று கோரியதாக நாம் ஒப்புவோம். இதற்குப் பொருளென்னை? என்னிடத்தில் பிதா என்கிற மரியாதையும் அச்சமுமின்றி இதுகாறும் நீ கெட்டலைந்தது போல் இனியுங்கெடாமல் பிதா என்னும்உரிமையை என்னிடம் பாராட்டி எனதுகட்டளையினின்று சுசிக்கக்கடவாய் என்று இதங்கூறினதாகவேயன்றோ முடியும்? இதனால் பிதாவுக்குக் கௌரவங்குறைந்துவிடுமா? பிள்ளை கேட்டபடியேதயன்றோ பிதாவுக்கு முதன்மை? இப்படியே பசுபதியாகிய சிவன் பசுக்களை இதஞ்செய்தால் தமதுவசப்படுத்திக்கொண்டானென வறிக: பசுக்கள்தமது அகங்காரவடிவமாகிய ஸ்வதந்திரமொழிந்து தாம் பரதந்திரரென்று அங்கீகரித்துக்கொண்டமையே அவர்கள் பசுபதித்வம் ஆகிய வரத்தைச் சிவனாருக்களித்ததாம். எனவே, சிவனே சுதந்திரனெனத் தெளிந்து அவருக்கு யாவருமெரோகாலத்தில் ஊழியர்களாகநின்று அடங்கினமையே முடிவாயிற்று. பசுவைநோக்கப் பாசத்துக்கு இயக்கமின்மையும், பதியைநோக்கப் பாசத்துக்கும் பசுவுக்கும் இயக்கமின்மையும் ஸித்தமாகையால், சிவஸந்நிதியில் விஷ்ணுவாதி சேதநங்களும், பூமியாதிஅசேதநங்களும் இயங்கப்பெற்று முறையே பசுவும் பாசமுமாக வெளிப்பட்டன. சிவன் அவற்றை இயக்குந் தலைவராகிப் பசுபதி என வெளிப்பட்டனர். நமதன்பர் பிரஸ்தாபித்த திரிபுரஸம்ஹாரப்பிரஸங்கத்தாற் போதருமுண்மையை ஈண்டு யாம் பிரகாசப்படுத்திவிட்டோமாகையால், இனிச் சிவனாருக்கு அப்ரஷ்டிதடிய ஐயங்காரதுமுகம் அதோமுகமாகவேண்டியதே. இவ்வுண்மைதெளிந்த விவேகிகள் "அஹமேவபசுநாமதிபதி:" என்றுஞ்

சைவாலத்தையறிந்து ஆநந்தியாமற்போகார். விரிக்கிற்பெருகும். இதுநிற்க.

நமதன்பர் சிவனுருக்குத் தேவர்களளித்தவரம் "ஆகுஸ்தே ருத்ர" என்னும்வசனப்படி பெருச்சாளி ஆகியபசுவுக்குப் பதியாவ தொன்றேயெனப் பிரஸங்கித்தாராகையால், அதனையும் சற்றுயோசிப்பாம். இவர் திரிபுரஸம்ஹாரத்துக் காதாரமாகத்தேடிய பிரமாணம் எஜுர்வேதம் ஆறுவதுகாண்டம். அந்தஸம்ஹாரத்தைமெச்சி அவருக்குக் கூலிகொடுக்கத்தேடிய பிரமாணம் எஜுர்வேதம் முதற்காண்டம். முதற்காண்டத்தில் ஸம்ஹாரமும், ஆறுவதுகாண்டத்தில் அதற்குக்கூலியும் பிரஸ்தாபிக்கப்படின், ஒருவாறு அமையும். அங்ஙனமில்லாமையால், ஐயங்காருக்குப் புலம்பலே பிரயோஜனமாயிற்று. இவர்தேடிய முதற்காண்டம் யாகவிஷயத்தைக் கூறுவது, அதில் திரிபுரஸம்ஹாரப்பிரஸங்கமே கிடையாது. திரிபுரஸம்ஹாரத்தைக்கூறும் ஆறுவதுகாண்டத்தில் ஆகுவினது பிரஸ்தாபமே கிடையாது. நமதன்பர் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டுவைத்தார். அந்தமுடி அறுந்துபோகாமல் நிலைப்பதெங்ஙனம்? ஆகுவைப் பிரஸ்தாபித்தகாண்டம் யஜ்ஞவிஷயமாகையால், அதில் "ஹேருத்ர! உனக்கு ஆகுபசு. அதனைக்கிரகித்திடு" என்றது ஸாமஞ்சஸமேயாம். சிவனைக்குறித்து யாகஞ்செய்யுங்கால், யாகபசுக்கள் அஜம், கோ, அசுவம், நரன் எனப் பலவிதமாகச்சிறக்கும். "ரௌத்ரீர்கவேகள:" என்னும்வசனம் கோவானது ருத்ரஸம்பந்தம் என்று தெரிவித்தது. "அயம்ஸோம:கபர்த்திநேக்ருதம்" என்னும்வசனம் ஸோமலதை கபர்த்தியாகிய சிவனதுஸம்பந்தம் என்று தெரிவித்தது. "இமம்பசும்பசுபதே" என்னும்வசனம் ஹேபசுபதி! இந்தப்பசுவை உன்பொருட்டேகட்டுகிறேன் என்றுதெரிவித்தது. "ரௌத்ரம்ஹவி:" என்னும்வசனம் அவிசுஉருத்திரஸம்பந்தம், என்று தெரிவித்தது. "இவற்றோடொன்றாகவே ஆகு உனக்குப்பசு என்னுஞ் சுருதியுஞ்சேர்ந்து சுகம்பெற்றது. ஆகு என்பது பெருச்சாளி, காட்டுப்பன்றி என்னும்பொருள்களைத் தரலால், ஈண்டு ஆகுஎன்பது வராகமேயாம். அவ்வராகம் விஷ்ணுவேயாம். வராகரூபியாகிய விஷ்ணுவை யாகப்பசுவாக்கித் தேவர்கள் யாகஞ்செய்தார்களென்று "யஜ்ஞேநயஜ்ஞமயஜந்ததேவா:" என்று சுருதி படித்தமையால், ஆகுஸ்தானத்தில் விஷ்ணுவாகிய வராகபசுவே நிலைத்தது. நமதன்பர் ஆகுவைப் பிரஸ்தாபித்துச் சகோதரிபோல் 'இதஞ்செய்யுமவள் அம்பிகையென்று தெளிபொருள் நீட்டினரன்றோ? அகு என்னும்வராகம் விஷ்ணுவாயினமையால், அ

ம்பிகைக்கு ஸகோதரியாகக் கூறியது ஸாமஞ்சஸமாகலாம். எமது கருத்தோவெனின், (ஹேருத்ர இந்த ஆகு உனக்குப்பசு. இதனை நீகிரகித்திடு. ஸ்வஸ்ரூரூபியான அம்பிகையோடுகூடிய ஹேருத்ர! இந்தப் பசுபாகத்தைக் கிரகித்திடு'' என்று விளக்குவதேயாம். சிவசக்திகள் முன்னும்பின்னுமாகப்பிரஸ்தாபிக்கப்படும் ஹேதுவால் சிவத்துக்குச் சக்தியைச் சகோதரி என்று உபசரித்ததாயிற்று. மனைவி என்பதும் இதுபோன்றதேயாம். இன்னும் புத்திரி என்பதுங் கூடும். மூன்றுவிதமும் ஸாமஞ்சஸமாயினமையால், ஈண்டுச் சகோதரி என்றது ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்று. இந்தவுண்மையால் நமதுஐயங்காரதுவாதம் அஸங்காத்மவாதமாயினதே ஸித்தம். இது நிற்க.

இவர் தேவர்கள் சிவனுக்குக்கொடுத்த பெருச்சாளியின்மேல் அவரதுமூத்தமகனார்ஏறிச் சவாரிசெய்கின்றார்என்று இழிவுகூறினாராகையால், அதனையுங்கொஞ்சம் யோசிப்பாம். பெருச்சாளி அசுத்தஜந்துவென்பது நமதன்பரதுகருத்து. இவரதுதெய்வமாகிய நாராயணர் ஏறித்திரியும் பருந்து என்ன சுத்தஜந்துவோ? சுடுகாட்டிற் பிணங்களைப் பிடுங்கித்தின்னும் ஈனஜந்துஅது என்பதை இனியேனும் யோசிப்பாராக. கிளி-மயில்-புறவு-நாகணவாய் முதலியபட்சிகளைப்போல அருமைபாராட்டத்தக்கதோ அது? மூஷிகத்தை நமதன்பர் தூஷித்தமையால் பருந்தின்செயலை யாம் பரக்கத்திட்டினோம். சிவனாரது பசுபதித்வத்தையழிக்க இவர்பட்டபாடெல்லாம் பாழாய்விட்டதோடு விஷ்ணுவின் றலையிலேறிய பசுத்வம் இறங்கவழியில்லாமலேபோய்விட்டது. ஆகுவாகியபசுவுக்கே சிவன்பதி என்று அவர் தேடியகதியும் நாராயணமாகியவிஷ்ணுவைத் தொடர்ந்துபற்றி அவருக்கு அநிஷ்டத்தையே யுண்டுபண்ணியது.

இனிச் சிவன் ஆகுவுக்குப் பதியாதலின்றே பசுபதிப்பெயர் தாங்குவராயினல், பருந்துக்கும் குரங்குக்கும் பதியாகிய நாராயணர் பசுபதிஆகாதது என்னே? ஆகு-பசு எனபன பரியாயபதங்களாயின், ஆகுபதி அல்லது பசுபதி என்றழைக்கலாம். அவை பரியாயங்களாகாமையாலும், பசுவாகிய பருந்தையும், குரங்கையு மூர்வாரைப் பருந்தின்பதி-குரங்கின்பதி என்பதேயன்றிப் பசுபதி என்பது வழக்கின்மையாலும் ஆகுவையூர்ந்திடுவாரை ஆகுபதி என்பதேயன்றிப் பசுபதி என்று பண்டிதர்கூறும் பசிவமெய்யுணர்ந்திடுக. தேவர்கள் சிவனுக்குக்கொடுத்த ஆகுவை அவர் விநாயகருக்குக் கொடுத்திருப்பின், அவ்வாகுவை அங்கீகரித்தலால் சிவனாருக்குவந்த பசுபதிப்பெயர் விநாயகருக்கும்வரவேண்டும். சிவனுக்கு ஆகுவாகனர்

என்னும்பேரில்லை. விநாயகருக்குப் பசுபதி என்னும்பேரில்லை. சிவனாரதுபசுபதித்வம் ஆகந்துகமாகாமையால், அது விபசரிக்கமாட்டாதென்க. "அஹமேவபசூநாமதிபதிঃ" என்று கம்பீரமாகப் படிக்கப்பட்டிருக்குஞ் சிவவாசகத்தினருமை வெகுபுண்ணியமுடையார்க்கே விளங்கும். வேதம் எமக்குப்பிரமாணம் என்று சொல்லிக்கொண்டு, அதனை இஷ்டம்போலெல்லாம் நிலைகுலைந்திடச்சிதைத்துச் சீரழிப்பதும் ஒருவைதிகமா? சிவாபராதிகள் கூட்டுறவு அம்மம்ம நஞ்சினுங்கொடிது!

இனி, நமதன்பர் சிவனாருக்குத் தேவர்கள்கொடுத்த கூலியாகப் பசுபதித்வத்தைச் சாதிக்கத்தேடியசுருதியில், "தாந் ருத்ரோவாஸ்ருஜத்" என்று படிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு அந்தப்பசுக்களை உருத்திரர் சிருஷ்டித்தார் என்று பொருளுண்டாகின்றது. அன்றியும், "ஸுராந்ப்ராணுதத" என்னும் பகுதியானது சிவனார் திரிபுரங்களைப்பேதித்துத் தேவர்களைரக்ஷித்தார் என்று தெரிவிக்கின்றது. இவற்றுள், அந்தப்பசுக்களைச் சிருஷ்டித்தார் என்பது விஷ்ணுவைபாணமாகவும், பிரஹ்மாவைச் சாரதியாகவும், மற்றவர்களை மற்றும் ரதாங்கங்களாகவும் சிவனார் அமைத்துக்கொண்டமையேயாம். தேவர்களை ரக்ஷித்தாரென்பது திரிபுரங்களை நகையாலழித்து அவர்களதுபயத்தைப் போக்கினாரென்பதேயாம். இதன்விரிவைச் சிவாதிக்யரத்நாவளி 2-வதுபாகத்திற் கண்டுதெளிக. இவ்வண்ணங்களால், "அஹமேவபசூநாமதிபதிঃ" என்றசுருதி சிவஸர்வோத்தமத்தைப் பிரதிபாதித்ததெனலே சரதமாயிற்று. இதனருமையை அழிக்கத்தலைப்பட்ட ஐயங்காரதுமனோரதம் இனிஜீவிப்பதெங்ஙனம்? ஜீவிப்பது கஷ்டமேயாம். இதுகாறும் யாம்விவகரித்த சுருதிகளையன்றி "ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்தாந்-பசூந்பத்வாமஹேச்வர:" எனவும், "யூயந்துபசவஸ்ஸர்வே, பசூநாம்பதிரீச்வரঃ" எனவும், "ஸ்வதஸ்ஸித்தம்பதித்வம்மே, யுஷ்மாகம்பசுதாபிச" எனவும்போந்த சுருதியுப்பிரஹ்மணங்களுஞ் சிவனாரதுபசுபதித்வத்தை இனிது பிரகாசப்படுத்தின. அன்றியும், "நதஸ்மாததிகம்கிஞ்சித்-தத்வம்தத்வித்திசாங்கரம்" என்று ஆதித்யபுராணம் மேலானசிவதத்வமே அடையத்தக்கது என்பதனை நிரூபணஞ்செய்தது. இச்சிவபரஞ்சுடரை

"அநுபமம் சிவம்சாந்தம்"

"சாந்தம் சாச்வதம் ஸதாசிவம்"

"சிவம் ப்ரசாந்தம்"

"நீலகண்டம் ப்ரசாந்தம்"

"ஸத்வஸ்யைஷப்ரவர்த்தக:
ஈசானோஜ்யோதிரவ்யய:"

என்று உபநிஷத்துக்களெழுந்து கோஷிக்கின்றன. இவ்வுண்மையைத்தெளிந்தவர்கள் "ருத்ரோவைக்ரூர:" என்னும்வசனத்தால் சிவாபகர்ஷஞ் சாதிக்கத்தலைப்பட்ட ஐயங்காரது காதைப்பிடித்தாட்டாமற்போகார்கள். சாந்தமும், க்ரூரமுமாகிய இரண்டுக்கும் ஸ்ரீசிவபெருமான் கர்த்தா என்பதே முடிவு. ஸ்ரீபரமேசுவரர் பஞ்சக்ருத்யஸம்பந்நராகையாலும், "ஏகாவம்சோரைவப்சிரா த்விபாதச் சதுஷ்பாதச்ச - தஸ்மாத்ருத்ர:பசூநாம்பதி:" என்ற சுருதியின்படி அவர் ஸர்வசேதநபதியாகின்றமையாலும், அப்பசுக்களுக்குச் சிக்ஷாரக்ஷைகளைச் செய்வது அவரது கருணையாகின்றமையாலும், அவரை "சங்கரோபகரணத்யேயா ரக்ஷபலா: ப்ரஜா:" என்று சுருதி கூறுகின்றமையாலும் அவர்பாலேற்றியக்ரூரசாந்தங்கள் அவரது கல்யாணகுணங்களேயாயின. இவற்றையுணராத ஐயங்கார் சிவனைக்ரூரன் என்று தூஷித்துவிட்டதுகொண்டே அச்சிவனாரது குடியொன்றும் முழுகிப்போகவில்லை. இவ்வளவேயன்றி நமதன்பர் பின்வசனங்களையும்பார்த்து அடங்குவாராக.

"ஜ்யோதிர்மயச்சிவ:"
"ஸர்வாநந்தமயச்சிவ:"
"ஜ்யோத்வாரதேவம் ஸதாசிவம்"
"ஸ்வ த்மாநஞ்சசிவம்த்யாயேத்"
"ஏத ரவசிவோநித்ய
ஸ்த ந்யத்ஸகலம்ம்ருஷா"

என்னுமிந்தச்சுருதிகள் சிவனாரது பரமகாரணத்வம் போதரவே இனிதுவிளக்குகின்றன. இவற்றைத் தெளிந்தடங்குதலின்றிப் பூர்வபக்ஷிகள் எண்ணியிடிவதிலென்னயன? இனியேனும் நமதன்பர் சிவனே யசம்பெருமானைத்துணிந்து பசுபதியாகிய அவரது ஸ்ரீபாதாரவிந்தபுரிந்து க்ஷேமமடைவாராக.

இவ்வஸங்காத்மவாதி இத்தோடேதோன்றாமல் "நம்சிவனார் கூர்மத்தையும் வராகத்தையுங்கொன்று அதினுடைய அவயவங்களையும், பிரமன்தலையையும் தன்னுடம்பில்தரித்திருப்பதாகச் செல்வதின் கருத்தென்னை? அபிராதியைச் சிக்ஷித்தபெருமைதோன்ற, அந்த அவயவங்களைச் சிவபெருமான் தரித்திருக்கிறானென்று போல்வீரோல் அரசன் ஒருவனைக்கொலைவாங்கினால் அவனுடைய உடல் முதலானதுகளைத் தரிப்பது அவசியந்தானோ? உள்ளதுசொன்னால்.

கோபம்வரும்" என்று பரிந்தழுதார். இவர் ஒருபோது எசுமதத்தவனை யெதிர்த்துப் பேர்பெற்றவர். அதனால் இனி ஒருவேளை அவர்கள் நம்மையெதிர்த்து (பஞ்சஜநாசுரனைக்கொன்று அவனுடைய எலும்பையே பாஞ்சஜந்யம் என்னுஞ் சங்கமாக்கி நாராயணர் தரித்திருப்பது எதன்பொருட்டு) என்றுகேட்டால் நாம் என்னபதில்சொல்வது என்றுஏங்கியே அத்தகையகேள்விகள் எம்மைக்கேட்டார். அவர்கேட்டவற்றுள், சிவனார் பிரஹ்மகபாலந்தரித்திருப்பது "விஷ்ணோரபிசிரோபித்வா-லலாடேசூலபாதநாத்" என்ற சுருதிவசனப்படி அவர் விஷ்ணுவைச் சூலத்தினால் நெற்றிமீதுகுத்திவாங்கிய ரக்தத்தைப் பிடித்துவைத்ததேயாம் [illegible] யாம் தெரிவித்தோம். மற்றசங்கைளும் நிவராணமாகவேண்டின் "க்ருபயா பகவாந்விஷ்ணும்-விததாரநகை:கணா:, சர்மாம்பரோ" என்னுஞ்சுருதியினது அர்த்தமாகிய (கிருபையினால் [illegible] லின்றோலைமாத்திரம் நகங்களாற்கிழித்து அரையில் வஸ்திரமாகக்கொண்டவர்) என்னுஞ் சிவமகிமையை முதல்ஒப்பி வெளிவருவாராக. அவரங்ஙனம்வெளிவரின், அநந்தரம் சிவனார் மீனினதுகண்ணையும், ஆமையினதுஓட்டையும், பன்றியினதுகொம்பையும், வாமனனதுஎலும்பையுந் தரித்தார் என்றுகூறுஞ் சுருதியையுங்காட்டி அவைகளை அச்சிவபெருமான் என் [illegible] காரணத்தையும் நமதன்பருக்குணர்த்துவோம். இவைகளை [illegible] ஒப்பாதபட்சத்தில் சிவபுராணங்களைத் தாமஸங்களென்று தள்ளியழுவதுபோல் இவ்வுபநிஷத்துகளையுந் தாமஸோபநிஷத்துக்கள் என்று தள்ளி நான்வேதபாஷ்யன் என்று இனி அவர்வெளிவரவேண்டியதே.

இவரதுதெய்வமாகிய [illegible] பவளைக்கொளுத்திய சுடுகாட்டுச்சாம்பலின்முளைத்த பச்சைத்தழையைத்தரித்திருக்கும்விஷயத்திலும், அவர் முரனைக்கொன்றதனால் முராரி என்றும், கம்ஸனைக்கொன்றதனால் கம்ஸாரி என்றும் பேர்பெற்றிருக்கும்விஷயத்திலும் இவருக்கு ஸந்தேகமிருக்கலாம். சுடுகாட்டுத்தழையை அவர்தரித்தது காமமாகியகவலைக்கடலில்வீழ்ந்து கரையேறமாட்டாத காரணம்பற்றியேயாம். இதற்கு வேறுகாரணமிருந்து நமதன்பர்கூறின், எமக்குஸந்தோஷமே. முராரி-கம்ஸாரி விஷயமோவெனின், அரசன் ஒருவனைக்கொலைவாங்கினால் அவனைக்கொன்றவிரோதி என்னும்பொருடோன்ற ஒருபேர்தாங்குவது ஆவசியகமோ? என்றுகடாவிநமதன்பர் ஒழிக்கவேண்டியதே. நமதய்யங்கார் விஷ்ணுவினதுபேரையழிக்க வெளிவந்தது அவ்விஷ்ணுமூர்த்தியினது தவங்

தான்போலும். இனி அவ்வஸங்காத்மவாதியினது அவிவேகத்தைக் கண்டு விவேகிகள் நகையாமற்போகார்.

இம்மட்டோ, நமதன்பர் நியாயசாஸ்திரத்திலுங் கொஞ்சம் நுழைந்தார். எங்ஙனமெனின், "துரீயசிவனாகியபக்ஷமும், இராமர் செய்ததாகச் சொல்லப்படும் பூசையாகியஏதுவும் உம்மாலும்நம் மெதிரிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். வாதிபிரதிவாதிகளுக்கு மலையிலும் புகையிலும் விவாதமில்லை. விவாதமுள்ளது நெருப்பில்மட்டும். அதுபோல் துரீயசிவனிலும் இராமன் செய்ததாகச் சொல்லப்படும்ஏதுவிலும் வாதிப்பிரதிவாதிகளுக்கு விவாதமின்றி நீர் சாதிக்கப்புகும் மேன்மையின்மட்டும் விவாதமிருக்குமாகில் அதைச்சாதிக்க உமக்கு அதிகாரங்கிடைக்கும். அநுமானாங்கங்களாகிய பக்ஷஸாத்யஏதுக்கள் மூன்றிலுமே பிரதிவாதிகள் உமக்கு எதிர்களாயிருக்கின்றார்கள்" என்று தமது கையைக்காட்டியிருக்கின்றார். இதனையும் எமது நியாயசாஸ்திரங்கொண்டு பேசிப்பாம்.

இவர் மலை துரீயசிவனாகவும், இராமன் அச்சிவனைப் பூசித்ததாகச்சொல்லப்படுவது புகையாகவும், அவர் பூசித்ததனாலேற்படுஞ் சிவபரத்துவம் நெருப்பாகவும் நிரூபித்து, துரீயசிவன் பக்ஷமும், இராமனதுசிவபூசை ஹேதுவும், சிவனாரதுபரத்வம் ஸாத்யமுமாதலை விளக்கினார். மேல் துரீயசிவன் வேதத்திற்பெறப்படாமையால் மலையாகிய பக்ஷவிரோதமும், மலையில்லாதபோது அதிற்புகையுண்டாகாதாகையால், அச்சிவனை இராமன் பூசித்ததாகச்சொல்லப்படும் ஹேதுவிரோதமும், மலையும்புகையுமில்லாதபோது நெருப்பைக்காண்பது கூடாதாகையால் சிவனார் பரதத்வமாயினரென்னும் ஸாத்யவிரோதமுமுண்டாவதாகவுஞ் சாதித்தார். நமதன்பர் துரீயசிவனிருப்பு ஆகாசத்தாமரை என்றுசொன்னது கண்ணுங்காதுமிழந்த காடன்கதையோடுதானே சேரும். எங்ஙனமெனின், கண்ணுங்காதுங் கெட்டவொருவனுக்கு ஓரரியமாணிக்கத்தைக்காட்டினும், அதன் பெருமையையெடுத்து அவனுக்குரைப்பினும் பயன்படாவாறு துரீயசிவனிருப்பு நமதன்பரால் வேதங்களிற்பார்க்கப்பெற்றும், ஸாதுக்கள்வழியாகக் கேட்கப்பெற்றும் அவருக்குப் பயன்படாதொழிந்தது. குருடனுக்கு அம்மணிபிரயோஜனப்படாமற்போயினும், மற்றையருக்குப் பிரயோஜனமாகத் தட்டில்லையாகையால், துரீயசிவனை நமதன்பரொப்பாதது எமக்குத்தீங்குசெய்திலது. "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே நகாரணம், காரணந்துத்யேயச்

சம்பு:'' என்று துரியசிவனை அதர்வசிகை இனிது சாதித்தமையால், அதனுண்மையை மத்யஸ்தர்கண்டு ஸந்தோஷிப்பதேபோதும். நமதன்பர் துரீயசிவம் உமாஸஹாயத்வாதி லிங்கங்களோடுகூடியதென்பதற்குப்பிரமாணமில்லையென்று அமுதத்தைக் கைவல்யம், மண்டலப்ராஹ்மணம்,யோகதத்வமுதலிய வுபநிஷத்துகளா லோயப்படுத்தினேம். மந்தமதிகள் தெளியுமாறு ஈண்டுமொருசுருதியை யெழுதுகிறேம்.

(பஸ்மஜாபாலம்)

''கைலாஸசிகராவாஸ மோங்காரஸ்வரூபிணம்
மஹாதேவ முமார்த்தக்ருதசேகரும் ஸோமஸூர்
யாக்னிநயந மநந்தேந்த்ரவிப்ரபும் வ்யாக்ரசர்மாம்
பரதரம் ம்ருகஹஸ்தம் பஸ்மோத்தூளிதவிக்ரஹம்
திர்யக்த்ரிபுண்ட்ரரேகாவிராஜமாந பாலப்ரதேசம்
ஸ்மிதம்ஸம்பூர்ணபஞ்சவிதபஞ்சாநநம், வீராஸநா
ரூட மப்ரமேய மநாத்யந்தம் நிஷ்களம் நிர்க்குணம்
சாந்தம் நிரஞ்சந மநாமயரும் ஹூம்பட்குர்வாண
ரும் சிவநாமாநுஸ்மிசமுச்சரந்தரும் ஹிரண்யபாஹு
ரும் ஹிரண்யரூபரும் ஹிரண்யவர்ணரும் ஹிரண்ய
நிதி மத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணுருத்ராதீ
தமேக மாசாஸ்யம் பகவந்தரும் சிவம்ப்ரணம்ய''

எனவெழுந்து சிவனை அத்வைதம் - சாந்தம் - சதுர்த்தம் - ப்ரஹ்மவிஷ்ணுருத்ராதீதம் - கைலாஸசிகராவாஸம் - உமார்த்தக்ருதசேகரம் - ஸோமஸூர்யாக்நிநயநம் - வ்யாக்ரசர்மாம்பரதரம் - ம்ருகஹஸ்தம் - பஸ்மோத்தூளிதவிக்ரஹம் - பஞ்சாநநம் - [illegible]வம் என்பனவாதி அடையாளங்களுடையவனெனத் துதிக்கின்றது. இத்தகையசுருதிக ளின்னும்பலவுள. இவற்றை நேரேதரிசித்தவர்கள் இனி ஐயங்காரது அந்தகாரத்திற்கே துக்கியாநிற்பர். இந்தவியவஸ்தையால், துரீயசிவனிருப்புச் சுருதிஸித்தமெனவேற்பட்டுப் பூர்வபட்சியினதுவாதம் புலம்பலாகவே முடிந்தது.

இனி யாமொன்று கூறுகின்றேம். வேதம்=படமாகிய [illegible]. துரீயசிவனிருப்பு=ஹேதுவாகிய புகை. அவரதுபரத்வம்=ஸாத்யமாகிய நெருப்பு. இவ்வாறுதெளிந்தவர்கள் இராமனது பூசையாகிய ஹேதுவால் சிவபரத்வமாகிய ஸாத்யத்தைத் துரீயசிவனாகிய பட்சத்திற் சாதிக்கவிரும்பார்கள். தருமன் - பீமன் - அர்ஜுனன் - வாலி - இராவணன் முதலினோர் சிவபூசைசெய்தது சிவபரத்வத்திற்கு ஹேதுவாயிடினன்றோ அவரோடெண்ணப்படும் இராமனது சிவபூ

சையும் அதற்கு ஹேதுவாயிடும்? இவர்களுக்கும் இராமனுக்குமுள்ள ஸாம்யாதிசயத்தை எங்களதுமுதற்பாகத்திலாங்காங்குக் கண்டுதெளிக. அன்றியும், "தஸ்யாம்ராஜர்ஷய: புண்ய:" என்னும் பாரதவசனமானது எமதர்மராஜன்சபையில் யயாதி-நகுஷன் - புரூரவன்-மாந்தாதா-ஸோமன்-லட்சுமணன் - பிரதர்த்தன் முதலினோருடன் இராமனு மவ்வியமனை யுபாஸித்துக்கொண்டிருந்தானென்று தெரிவிக்கின்றது. இராமன்முதலினோர் பூசித்ததினால் இயமன் பரத்வமாயிடினன்றோ அவ்விராமனது சிவபூசையைச் சிவபரத்வத்திற்கு ஹேதுவாகத்தேடிய நமதன்பர் ஸந்தோஷிக்கலாம்? இதனால், நமது ஐயங்காருக்கு ஒருநலனுமுண்டாகாமையால், அவர் தேடியவநுமானங்கள் அவரைத் தெருவிலேயே தியங்கவிடுத்தன.

இராமன் சிவனாரது சேவகன் என்பதை "அத்ரபூர்வம்" என்னும் வசனத்தில் அவ்விராமன்பிரஸ்தாபித்த மஹாதேவ-பிரபுபிரஸாத சப்தங்கள் தெரிவித்தன. சிவன் இராமனுக்கு ஸேவ்யன் என்பதை "க்ருதாபிஷேக:" என்னும் வசனத்தில் "பகவானிவேச:" என்பதும், "லைவபச்யாமி" என்னும் வசனத்தில் "பூஜயாமிமாஹேச்வரம்" என்பதுந் தெரிவித்தன. இவ்வுண்மையை "சிவபூஜரதச்சைவ" என்னும் இராமஸஹஸ்ரநாமமும், "ப்ரதிஷ்டாப்ய மஹாதேவம்" என்னும் ஆதித்யபுராணமும, "ஸேதுமத்யேமஹாதீர்த்தே" என்னும் பராசபுராணமும், "ஸேதுமத்யே" என்னும் சூதஸம்ஹிதையும் நிலைபெறுவித்தன. ஐயங்காரது அபிப்பிராயத்தை யாம்தழுவினும் எமது சித்தாந்தங்கெடாமல் தூரியசிவனாகிய பட்சமும் இராமனது சிவபூசையாகியஹேதுவும், சிவபரத்வமாகிய ஸாத்யமும் இனிது ஸித்தித்தன.

இனிப்பூர்வபட்சியினது பட்சஸாத்யஹேதுக்களத்தகையினையின்று கொஞ்சம் யோசிப்பாம். மலையினிடத்துக்காணப்படும் புகைமுந்தியதா? நெருப்புமுந்தியதா? என விசாரிக்கையில் நெருப்பேமுந்தியது. நெருப்பிலிருந்தே புகைகிளம்பியது. அந்தப்புகையைக்கொண்டே அதுதோன்றிய இடத்தைக்கண்டது. இதனோடு நமதன்பர்தேடிய ஹேதுஸாத்யங்கள் பொருந்துமாறெங்ஙனம்? சிவனாரது பரத்வம்முந்தியதா? இராமனது சிவபூசைமுந்தியதா? சிவனாரதுபரத்துவம்முந்தியதெனின், அப்பரத்வப்பொருளை இராமன்பூசித்தது நிராக்ஷேபம். இராமனதுசிவபூசையேமுந்தியதெனின், முந்தியதுஸாத்யமேயன்றி ஹேதுவாகாது. இனிப்பட்சமாகிய மலையைவிசாரிக்கின், தூரியசிவனிருப்பை ஆகாயத்தாமரை

ஆபாசவிளக்கம்.

யென்று அகற்றினார். அத்தாரீயசிவனிருப்பு அவருக்கங்கீகாரமில்லாவிடினும் மூவரிலொருவராகிய சிவனது இருப்பை அவரங்கீகரித்தலால், சிவன் என்னும் பட்சமாகியமலை இல்லாமற்போகவில்லை. அந்தச்சிவனும் இராமருக்கதிகரோயன்றி வேறில்லை. இதனால் பட்சஸாத்யஹேதுக்கள் மூன்றிலுமே நமதன்பர் தடுமாறிப்போயினார்.

இனி இராமர்சிவபூசைசெய்தார் என்பதைச் சிவனாது மேன்மையின்பொருட்டு எமதுநாயகர் பிரஸ்தாபித்ததாக நமது அன்பர்கொண்டதுந் தவறு. பார்த்தன் சிவபூசைசெய்தான். அப்படியே பாணனுஞ் சிவபூசைசெய்தான். அவை சிவனாதுமேன்மைக்கு ஆதாரமாயிடினன்றோ அதற்கு இராமனது சிவபூசையும் ஆதாரமாயிடும்? சிவப்ரஸாதத்தையடைந்த நல்லோர்களது புண்ணியசரிதங்களெனக்கொண்டே யாவருடைய கதைகளையும், அன்னோர்செய்த சிவபூசைகளையும் ஸாதுக்கள் துதித்துவருகின்றனர். சிவனடியார்களது பெருமையைப் புகழ்ந்துதுதிப்பது அடியவர்பூசை யாகின்றமையால், இராமர்சிவபூசைசெய்தார் என்று நாயகரவர்கள்சாதித்தது, இராமரது பெருமையையெடுத்து விரித்ததாகவே முடிந்தது. யாமும் அவரது உபதேசவுறுதியால் ஜங்கமவழிபாடாகிய அச்சிவபுண்ணியத்தையே பரிபாலித்தோம். இவ்வுண்மைகளை இனிதாய்ந்து நமதன்பராகிய சிற்றுக்காடு சீநிவாஸாசாரியரும், அவரினத்தவராகிய ஏனைய பாஞ்சராத்திரிகளுஞ் சிவநிந்தையிலிழிந்து சீரழிந்துபோகாமல் சுருதிஸித்தமாகிய சிவபாரம்யத்தையும், அச்சிவபரஞ்சுடரை இராமபத்திரர்பூசித்துப் பிரஹ்மஹத்திநீங்கி இன்புற்றார் என்னும் புண்ணியசரித்திரத்தையும் இனிதாய்ந்துதெளிந்து உய்ப்பாராக. இது ஸாதுக்களுடைய க்ஷேமார்த்தம் உலகினீடுவாழ்க.

வாழ்த்து.

" வாழி சோபநம் வாழிநல் லன்பர்கள்
சூழ வந்தரு டோற்றமுஞ் சோபநம்
ஆழி போலரு ளையன் மவுனத்தா
லேழை யேன்பெற்ற வின்பமுஞ் சோபநம்

திருச்சிற்றம்பலம்.